

கோவிந்தன் கிப்ஸ் உபயோகிக்கிறான்—
கிப்ஸ்
டென்டிபிரிஸ்
ஒழுங்கான முறையில் பற்களை
வெண்மையாக சுத்தம் செய்கிறது
DENTIFRICE
விலேயோ சொற்பம்—பலநாட்கள் நீடித்துவரும்

டி.எஸ்.ஆர்.

சந்தனாதித் தைலம்



அரைக்கீரைவிதை தைலம்

டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரிய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன.



டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டு:
சுயராஜ் ஏஜன்ஸீஸ்
லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை
கோவை, பாலக்காடு அண்டு நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்:
B. பாலபட்டாபி செட்டியார்
346, வைசியாள் தெரு, கோயமுத்தூர்
வட ஆற்காடு ஜில்லாவுக்கு:
சேகர்ஸ், திருப்பத்தூர் (வ. ஆ.)

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா
சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத் திறல் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

14 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

ஏஜண்டுகள்:

என். தேசாய் கௌண்டர் & கோ
41, பந்தர் தெரு - சென்னை

"கல்கி" ஆசிரியர் எழுதிய இருபெரு நவினங்கள்

சிவகாமியின் சபதம்

பரிசுப் பதிப்பு ரூ. 15

•

பார்த்திபன் கனவு

விலை ரூ. 6-8-0

தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் மகோன்னத காலத்தை இவ்விரு நவினங்களும் அற்புதமாக விளக்குகின்றன

•

(தபாற் செலவு பிரத்தியேகம்)

கிடைக்குமிடம்: கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை

ஆஸ்துமா, மார்ச்சளி இருமல், மூச்சுத் திணறல், 3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணாவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை. புகை பிடித்தலில்லை. இஞ்சக்ஷனில்லை, ஆட்டோமைசர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்துவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவில் நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. ரிச்சர்ட்ஸ், நாரமிஸ்டன், ஒன்ட், கானடா. இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்திவிட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்பட்டதில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல்வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் கீழ் மெண்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்துத் தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி பளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தேக புனர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள்.

Mendaco
மெண்டாகோ

உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ தேஹ ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது




KALKI மே. 14, 1950 4 அணா



நல்லாடை அணிந்த
ஆண்கள் பளபளப்பான
பாதரக்ஷைகளை அணிகிறார்கள்

கீவி

பாலிஷ் செய்யும்போதே
போஷாக்களிக்கிறது



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

ஹிந்தி

ஒழிந்த வேளையில் குறைந்த செலவில் தபால் மூலம் ஹிந்தி கற்க அரிய சந்தர்ப்பம். தமிழ் தெரிந்தால் போதும். ஹிந்தி பாஷையை எழுதவும், படிக்கவும், பேசவும் கற்கலாம்.

தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி ப்ரசார சபையார் நடத்தும் ப்ராத்மிக், மத்யமா, ராஷ்ட்ரபாஷா பரீட்சைகளில் தேர்ச்சி பெறலாம்.

ப்ரவேசிகா பரீட்சைக்கான பாடங்கள் மிகச் சிறந்த முறையில் கற்பிக்கப் படுகின்றன.


மற்ற விவரங்களுக்கு 2 மூக்காலணா ஸ்டாம்பு அனுப்பவும்

ஸரஸ்வதி கலா மந்திர்

ஹிந்தி வித்யாலயம் - அரும்பாக்கம் - மதராஸ் - 10

போனோமிண்ட்

பேதியாகும் சூயிங்கம்



திவ்வியமான பப்பர்மிண்ட் மிட்டாய் போல் சுவையுள்ளது. அதிலுள்ள மருந்து சத்துக்கள் உமிழ்நீரோடு கலந்து உதர கோசங்களில் சேர்கின்றன. இது மலபோக்கை செம்மையாக எளிதில் சரிப்படுத்துகிறது.

போனோமிண்ட் பேதியாகும் சூயிங்கம்

ஏஜண்டுகள்: தி ஓரியண்டல் மெர்க்கண்டைல் ஏஜன்ஸி
99-ஏ, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்—1

சென்று விட்டது. நிலை கெட்ட தன் குடும்பத்தைச் சீர்தூக்கி விடும்படி கெஞ்சுகிறான். மணமுடைந்த அவளது கணவனின் இயலாமைக்காக மைதிலியை என் கரங்களில் ஒப்படைக்க வேண்டுகிறான். இதென்ன பைத்தியம் இவனுக்கு?

சித்தன்னையின் ஸ்தானம் எவ்வளவு கொடியது? நான் 'சரி'யென்று வாக்குக் கொடுத்த மறுகணம் அவளது கண்களில் எவ்வளவு பிரகாசம்! நேற்றிரவு முதல் என் உள்ளம் எதையோ குறித்து ஓலமிட ஆரம்பித்துவிட்டது.

பவானி! பவானி! நீ சாதாரணமான பெண்ணல்ல; கபடமும், துராசையும் நிறைந்த இந்தக் கலியுகத்தின் மானத்தைக் காக்க வந்த சித்தன்னை!

4

மைதிலி

சித்தன்னை—எனது முன்னறி தெய்வமான சித்தன்னை! எனது பள்ளித் தோழியின் உருவிலிருக்கும் பவானி எனக்குச் சித்தன்னை. உலகம் இதை நம்பவில்லை. ஆனால், தூய பனிக்குபோலிருக்கும் என் சித்தன்னை ஒவ்வொரு செய்கையிலும் நிரூபிக்கிறாள்.

நானும் பெண். அவளும் பெண்தான்! எங்களிருவர் இருதயங்களுக்கும்தான் எவ்வளவு தாரதம்மியங்கள்!

கடவுளே! அவளுடைய ஆன்மீக சக்தியுடன் என் குணங்களையும் ஒப்பிடும்படி செய்து ஏன் என் இதயத்தைக் கொல்லுகிறாய்? நானொரு மூர்க்கை. எனது செய்கையிலும், போக்கிலும், அலட்சியமும், ஆணவமும், தலை தூக்கி நின்று தாண்டவமாடுகின்றன. ஆனால், அவளோ ...?

செல்வச் செருக்குடன் மூடியிருந்த என் கண்களைத் திறப்பதற்காகவே கடவுள் சோதனையிட்டார். கொஞ்ச தினங்களில் நானும் ஒரு சித்தன்னையின் ஸ்தானத்தை ஏற்கவிருந்தேன். நாராயணன் வந்தார். ஒவ்வொரு நிமிஷமும் நான் கட்டிய மனக் கோட்டையும், அதற்கடுத்த நிமிஷமே அதற்கொரு பூகம்பமும் ஏற்படுவதைச் சில தினங்களாக அனுபவித்தேன். எங்கேயோ கிட்டாத ஒரு பாக்கியத்தை நினைவுடனேயே காற்றில் சஞ்சரிக்க விட்டுக் கொண்டிருந்தேன்.

நேற்றிரவு அவள்—தெய்வப் பிறவியான என் சித்தன்னை—இருள் சூழ்ந்திருந்த என் வாழ்க்கையைத் தன் பிரகாசமான இதயத்தால் ஒளியேற்றிவிட்டாள்.


"அண்ணா! எங்கள் குழந்தையை ஒரு சித்தன்னையாக்க எனக்கு மனமில்லை; உன் தங்கையின் முகத்தை என்றும் மலர்ச்சியுடன் காணவேண்டுமானால், மைதிலியை உன் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்வது ஒன்றுதான் அதற்கு வழி" என்றாள். மறு கணம் அவளது கண்களில்தான் எவ்வளவு ஆனந்தம்!

சுவரின் கோடிமூலையில் நின்று கொண்டிருந்த என்னை யாரோ அன்புக் கோடாரியால் பிளப்பது போலிருந்தது.

இன்று காலை நாராயணன் தன் பெற்றோரின் சம்மதத்துக்காகக் கிளம்பினார். என் தாயிடம் கூறிக் கொண்டபின், என்னிடமும் தன் கண்களாலேயே விடைபெற்றுக்கொண்டார்.

இரவு முழுவதும் தேக்கப் பெற்றிருந்த எனது மழை மேகங்களில் இந்தக் குளிர் காற்றுப் பட்டதும் என் கண்கள் வரம்பு கடந்துவிட்டன. உடனே பவானியிடம் போய், "சித்தி! நீ ஒரு தெய்வப் பிறவி; கிருத யுகத்தை மறுபடியும் சிருஷ்டித்து விட்டாய்!" என்றேன். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடிந்தது.

"என்ன பைத்தியக்காரப் பெண்ணடி, நீ! எழுந்திரு; கல்யாணம் செய்து கொள்ளும் பெண் இப்படியா அழும்? எழுந்து சென்று முகத்தைக் கழுவிக் கொள்" என்று அன்பு ததும்பக் கூறினாள் என் அருமைச் சித்தி. அவளது பரிசுத்தமான விழிகளிலிருந்து உதிர்ந்த ஆனந்தக் கண்ணீர் என்னைப் புனிதையாக்கி விட்டது!



டர்பன்காரர்:—என்னய்யா இது? ரொம்ப நாழியாக நிற்கிறோம்; இந்த ட்ராம் வரவே யில்லையே!

குடைக்காரர்:—அட! அந்த ட்ராம் வராவிட்டால் என்ன? இதோ நம் வெங்கட்ராம் வந்து நிற்கிறாரே, அது போதாதா உங்களுக்கு?

அஞ்சாமல் சூட்டிவிடுகிறது. ஆனால் மைதிலியின் சித்தன்னையைப் பற்றியோ......?

மனிதன் தான் செய்த தவறுகளை உணர்ந்து, வருந்தி அதற்காகப் பச்சாத்தாபம் அடையும் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் உலகில் மாற்றுக்கள் இருக்கின்றன. ஆனால் நாற்பது ஆண்டுகளைக் கழித்த பின் நான் செய்த செயலுக்குப் பிராயச்சித்தமே இல்லை.

இன்னல்களுக்கும், பழிச் சொல்களுக்கும் ஏன், வறுமைக்கும் கூட ஆளான பின்னர்தான் மனிதன் தன் தவறுகளை உணருகிறான். இது உலகம் தோன்றிய நாள் முதல் நடந்து வருகிறது. இதற்கு நான் மட்டில் விதிவிலக்காக இருக்க முடியுமா?

என் சுற்றுப் புறத்தின் சூழ்நிலை இன்று என்னைத் திருத்தி விட்டது. கடவுளின் சோதனையால் நிலங்கள் ஒன்றிலுமே விளைச்சலில்லை. பாங்கியிலிருந்த பணமெல்லாம் இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டது. எடுத்த காரியம் ஒவ்வொன்றிலும் தோல்வி. என் தீச் செயல்களை எண்ணி வருந்துவதற்கு இதைவிட வேறு சரியான சந்தர்ப்பமில்லை!

பவானி, எத்தகைய பெண்? இந்த யுகத்தின் பெண் இதயங்களுக்கே புறம்பானது அவளது இதயம். அவளது நடத்தையிலும், போக்கிலும் கடமை ஒன்றுதான் பிரதிபலிக்கிறது. இதை இருபதாம் நூற்றாண்டின் உலகம் வியந்து கொண்டிருக்கிறது.

மைதிலி, ஒரு அழகான பெண் சர்ப்பம். 'விடுவிடு' வென்று எதையும் யோசனையின்றிக் கொட்டித் தீர்த்து விடுகிறாள். அவளையும், பவானியையும் பனத்தாக எடை போடும்போது, எவ்வளவு பயங்கரம்? காரணம், பவானி வறுமையின் பெண்; மைதிலி தன் தந்தையின் செல்வச் செறுக்கில் ஊறித் திளைத்தவள்.

ஆனல், இன்று அவளது தந்தை—கடவுளே! ஏன் என்னைப் படைத்தாய்? அது தானிருக்கட்டும்; ஆரம்பத்திலேயே என்னையும் ஏழையாகப் படைத்திருக்கக்கூடாதா?

எதன் காரணமாக என் வாழ்க்கையில் பவானி தோன்றினாளோ, அதே காரணத்துடன் தான் மைதிலியும் ஒரு குடும்பத்துக்குச் சித்தன்னையாகப் போகிறாள். சித்தன்னை! சித்தன்னை! எவ்வளவு தியாகமும், எத்தனை மகத்தான பொறுப்பும் நிறைந்த ஸ்தானம்!

3

நாராயணன்

சித்தன்னை! பத்தொன்பதாவது வயது கூட நிறையப் பெறாத பவானி இன்று ஒரு சித்தன்னை!

நாலைந்து வருஷங்களுக்கு முன் இதே நாராயணன்; இல்லை—தரித்திர நாராயணன் தாயையும், தந்தையையும், பாசமே உருவான தங்கையையும் விட்டு விட்டு ஓடினான். அன்று பவானியின் கண்களிலிருந்த விஷமத்தனமும், விளையாட்டுத் தன்மையும் இன்று எங்கே ஓடிவிட்டன? பவானி—பழைய பவானி தானா என்ற பிரச்னை இரண்டு தினங்கள் முன்பு இங்கு வந்தவுடனேயே எனக்கு ஏற்பட்டது.

நாராயணன் கடல் கடந்து சென்று, திருமகளின் அருள் நிறைந்த நாராயணனாகத் திரும்புவதற்குள்ளாகவே பவானி சித்தன்னையாகிவிட்டாள். பொறுப்பும், கடமையும் அவளது செயல்கள் ஒவ்வொன்றிலும் நிறைந்து காண்கின்றன.

பவானிக்காக விலையுயர்ந்த புடவைகள் வாங்கி வந்திருக்கிறேன். ஆனல் அந்த அப்பாவிப் பெண், அவ்வளவையும் தன் பெண்ணுக்கே அலங்கரித்துத் திருப்தியுற்றாள்.

இன்று காலை ஊருக்குப் போவதாகச் சொல்லிக் கிளம்பினேன். பவானி ஓடோடியும் வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டு என்னென்னவோ பிதற்றினாள். அவளது ஆன்மீகமான கோரிக்கைகள் என் மனதை வெகு தூரத்திற்குக் கடத்திச்



மீண்ட இருதயம்



பவானி

எனக்கே தெரியவில்லை, எவ்வளவு நேரம் இம்மாதிரி மாடிப்படியிலேயே உட்கார்ந்திருந்தேன் என்று. சுவரிலிருந்த கடிகாரம் ஏழு தரம் அடித்து ஓய்ந்த போதுதான் சந்தியா காலத்தின் நினைவு எனக்கு ஏற்பட்டது. எழுந்து சென்று விளக்கையெல்லாம் போட்டுவிட்டு மனச் சாந்திக்காக குத்து விளக்கையும் ஏற்றி வைத்துவிட்டுத் திரும்பினேன். இன்று மாலை நடந்த சம்பவம் என்றுமேயில்லாத அளவுக்குத் துக்கத்தை மிகைப்படுத்தி விட்டது.

எனது கேள்வியில் என்ன குணதோஷங்களை மைதிலி கண்டுவிட்டாள்? பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும்போது, அவள் ஒரு உதவாக்கரைப் புடவையை ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கி வந்திருந்தாள். "இவ்வளவு விலையில் இதை ஏன் வாங்கினாய்?" என்றேன். இந்தக் கேள்வியில் என்ன பிசகு இருந்தது? சர்வ சாதாரணமாக ஒரு தாய் தன் பெண்ணைப் பார்த்துக் கேட்கும் முறையில் தான் கேட்டேன்.

இதற்கு அவளும் சாதாரணமாகவே பதிலளித்திருக்க முடியாதா? கிட்டத்தட்ட சம வயதான அவள் என்னை அடித்திருந்தால் கூட இவ்வளவு துக்கம் எனக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால், அந்தத் துடுக்குக்காரப் பெண், "உனக்குப் பொறாமை; என் தகப்பனாரின் பணம் முழுமையும் நீயே அடைய எண்ணுகிறாய்; இரண்டு வருஷங்களுக்கு முன் நீ எப்படியிருந்தாய் என்பதை அதற்குள் மறந்துவிட்டாய்!" என்று எல்லாம் என்னைக் கேட்டு விட்டாள்.

எவ்வளவு கொடூரமான வார்த்தைகள்! உண்மையில், அவளது தந்தையின் பொருளை நான் அடையவேண்டுமென்பதா என் விருப்பம்? என் கேள்வியில் அத்தகைய பொருள் இம்மியளவாவது இருந்திருக்குமா? நான் அவளுடைய தந்தைக்கு இளையாள்; மேலும் நான் ஒரு ஏழை—என்பதைச் சுட்டிக் காட்டி விட்டாள் அல்லவா?

அதுதான் போகட்டும்; 'அவர்'தான் இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு வந்தாரே, ஒன்றுமே சொல்லாமல் சும்மா இருந்திருக்கக் கூடாதா? "உனக்கேன் இந்தக் கேள்வி?" என்று என்னை நோக்கிக் கேட்டதுதான் என் மனதைப் பெரிதும் புண்படுத்தி விட்டது. ஒன்றரை வருஷங்களுக்கு முன் அக்னியின் முன்பாக 'இவர்' எனக்கு மாலையிட்டார். சுகம், துக்கம் எல்லாவற்றையும் இவருடன் எனக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டதாகத்தான் அன்று முதல் நான் உணர்ந்து வந்தேன்.

ஏழ்மை நிறைந்த பெற்றோர்களை நினைத்துக் கடந்த ஒன்றரை வருஷங்களாக நான் வருந்தியதில்லை. ஏழ்மை காரணமாக எங்கேயோ ஓடிவிட்ட என் அண்ணனையும் நான் எண்ணி ஏங்கியதில்லை. ஏறக்குறைய இரண்டொரு வயது குறைவான மைதிலி எனக்குப் பெண்ணாக ஏற்பட்டதைக் குறித்தும் நான் இன்றுவரை சற்றும் வருத்தப் பட்டதில்லை.

என்னவோ வாய்த் துடுக்குள்ள பெண்! வாழ்க்கையின் கரடுமுரடான பாதையை யறியாதவள் – கடமையின் இலட்சியத்தை உணராதவள்தானே? — என்றெல்லாம் மறக்க முயலுகிறேன். ஆனால் மீண்டும், மீண்டும்......

உண்மைதான். இந்தக் குடும்பக் காரியங்கள் ஒவ்வொன்றிலும் எனக்குப் பொறுப் புண்டு; உலகம் என்னை எந்த வழியிலும் நினைக்கலாம்; நிர்மாணிக்கலாம். ஏனெனில், நான் ஒரு சிற்றன்னை; நானொரு சிற்றன்னை.

2


சர்மா

சிற்றன்னைகளைப் பற்றி உலகம் எவ்வளவு கீழ்த் தரமாக மதிப்பிடுகிறது! சிற்றன்னை ஒரு கொடுமைக்காரி; பேராசைக்காரி; பாசமற்றவள் என்றெல்லாம் எண்ணுகிறது.

இதென்ன உலகம்! வறுமை காரணமாக அல்லது இயலாமை காரணமாகத் தனக்காகவோ, பிறருக்காகவோ ஒரு பெண் தியாகத்தைப் புரிகிறாள். ஆம்; இருபதாம் நூற்றாண்டில் இது ஒரு தியாகம்தான். சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் பலவீனப்பட்டால் அவளுக்கு உலகம் இத்தகைய பட்டங்களை

நகரம் கிடைத்தது!

சாம்பு



சங்கரலிங்கம் பிள்ளை நல்ல தமிழ்ப் பித்தர். தமிழர் நாகரிகம், தமிழர் கலை என்று யாராகிலும் பேசுகிறார்கள் எனக் கேள்விப்பட்டால் போதும் அந்த இடத்தில் ஆஜராகி விடுவார். யாராகிலும் தமிழர் கூட்டம் நடத்த நிதி திரட்ட வந்தால் தம் கையில் காலணா மட்டுமே இருந்தால் கூடச் சற்றும் பொருட்படுத்தாமல் கொடுத்து விடுவார்.


அப்படிப்பட்டவரிடம் யாரோ அவருடைய சொந்த நிலத்தில், மேடாகக் கிடக்கும் ஒரு பகுதியைத் தோண்டிப் பார்த்தால், மூவாயிர நாலாயிர வருஷங்களுக்கு முன்பிருந்த ஒரு நகரம் தென்படும் என்றும், அதன் பயனாகத் தமிழர் நாகரிகம், சரித்திரம் முதலியவற்றில் ஒரு புது வெளிச்சம் போட்டதாகும் என்றும் கூறிவிட்டார்கள். இனி, சும்மா இருப்பாரா சங்கரலிங்கம் பிள்ளை? தம் நிலத்தில் ஒரு பகுதியில் ஆழமாகவும் அகலமாகவும் தோண்டினார். சிறிய கற்கள் பெரிய பாறைகள், உடைந்த சட்டித் துண்டுகள் என்று ஏதேதோ கிடைத்துக் கொண்டிருந்தன. அவையாவும் ஒருகால் முக்கியத்துவம் பெற்று விடலாம் என்ற சந்தேகத்துடன் சேர்த்துக் கொண்டே வந்தார். ஆனால் ஒரு புதைந்த நகரம் இருக்கிறதென்பதற்குப் போதிய ஆதாரம் மட்டும் கிடைக்கவில்லை. ஆனாலும் அவர் சலிப்படையவில்லை! தோண்டும் வேலையை நடத்திக் கொண்டிருந்தார்.


கடைசியில் ஒரு பிரம்மாண்டமான பாறை தெரிந்தது. உடனே சங்கரலிங்கம் பிள்ளைக்கும் அவர் சகாக்களுக்கும் சற்று அமுங்கியிருந்த உற்சாகம் தலை தூக்கத்தொடங்கியது. இந்தப் பாறையை எடுத்து விட்டால், பெரிய நகரம் இருப்பதற்கான அறிகுறி கிடைக்கும் என்று நினைத்தார். இல்லாவிடில் அந்தப் பாறை ஒரு தமிழ்ப் பேரரசரின் சிலாசாசனமாக இருந்து பெரிய சரித்திர உண்மையைத் தெரிவிக்கலாம் என்றும் எண்ணினார்.

எப்படியோ சிரமப்பட்டுப் பாறையை எடுத்துக் கழுவினார். அதன் ஒரு புறம் ஏதோ எழுத்துக்கள் தட்டுப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்ததில் 'இதற்கடியில் ஒரு நகரம் இருக்கிறது' என்று பொறித்திருந்தது தெரிந்தது! உடனே அவர் உற்சாகம் அளவு கடந்து போய் விட்டது!

இன்னும் ஆழத் தோண்டினார். பதினைந்து நாள் முனைந்து வேலை செய்தார். ஒரு நகரமும் கிடைக்கவில்லை. இல்லை... கிடைக்கவில்லை என்றா சொன்னேன்? அது முற்றிலும் தவறு! நிச்சயமாக ஒரு நகரம் கிடைத்தது.

ஒரு நாள் காலை எதேச்சையாக, அந்தப் பாறை வைத்திருந்த பக்கம் போனார். பாறை கவிழ்ந்து கிடந்தது. அதன் மேல் சங்கரலிங்கம் பிள்ளையின் பார்வை விழுந்தது! அவ்வளவுதான்! உடனே அவருக்குப் பெரிய நகரம் தென்பட்டது! ஆம்; அந்தப் பாறையின் மற்றொரு புறத்தில் பெரிய ந என்ற எழுத்து எழுதப்பட்டிருந்தது தெரிந்தது! உடனே சங்கரலிங்கம் பிள்ளையின் உள்ளத்துக்கு அந்தப் பாறையின் மற்றொரு புறத்திலிருந்த 'இதற்கடியில் ஒரு நகரம் இருக்கிறது' என்பதன் பொருள் விளங்கியது! அத்துடன் தம்மை வயிற்றெரிச்சல் கொட்டிக் கொள்ள யாரோ நகரம் கிடைக்குமென புரளியைப் பண்ணிவிட்டார்கள் என்பதையும் தெரிந்து கொண்டார்!





படித்துப் பாருங்கள்!

Gandhi Memorial-Peace Number

[Edited by: Kshitis Roy; Publishers: The Visva Bharati Quarterly, Santiniketan, W. Bengal; Price: Rs 10/-]

'மழை ஓய்ந்தும் தூவானம் ஓயவில்லை' என்று சொல்வது போல் இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்தும், யுத்த பீதி உலகை விட்டு நீங்கினபாடாக இல்லை. மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்று உலக மக்கள் அன்றிலிருந்து இன்று வரை பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்நிலையில் உலகில் பற்பல தேசங்களிலுள்ள பெரியோர், அதாவது சமாதானப் பிரியர்கள் ஒன்று கூடி உலக சமாதான மகாநாடு கூட்ட வேண்டும் என்று 1947-ம் வருஷம் தீர்மானித்தனர். அந்த மகாநாடு கூடுவதற்கு யோக்யதை வாய்ந்த தேசம் பாரத தேசந்தான் என்றும் கவீந்திரராகிய ரவீந்திரநாத் டாகூர் அமைத்த சாந்திநிகேதனம்தான் ஏற்ற இடம் என்றும், அஹிம்சை உருவான மகாத்மா காந்தியே தலைமை தாங்கவேண்டும் என்றும் அவர் யோசனை கேட்டு, அதன்படி நடக்கவேண்டும் என்றும் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலத்தின் விசித்திரப் போக்கின் காரணமாக காந்தியடிகள் நம்மிடையே யிருந்து திடீர் என்று பிரிக்கப்பட்டார். அதனால் சென்ற வருஷ இறுதியில்தான் சாந்தி நிகேதனத்தில் சமாதானப் பிரியர்கள் மகாநாடு கூடியது. அப்போது விசுவ பாரதியார், மகாத்மா காந்தி நினைவு மலர் ஒன்றை வெளியிட்டார்கள். அதில் உலகத்தின் கீழ்க்கோடியிலிருந்து மேற்குக் கோடி வரையிலுள்ள காந்தி வழியைப் பின் பற்றும் பெரியோர்கள் மகாத்மா காந்திக்குத் தங்கள் சிரத்தாஞ்சலியைத் தெரிவித்திருக்கிறார்கள். இத்தனை பெரியோர்களை எப்படி எப்படி காந்தி அடிகள் ஆட்கொண்டார் என்பதைப் படிக்கும்போது மனதில் சொல்லத் தெரியாத சந்தோஷமும், கண்களில் பொட்டுப் பொட்டாகக் கண்ணீரும் வருகிறது.

எதில் மெனின் என்ற பிரசித்தி பெற்ற ஆங்கில ஆசிரியை கூறுவதைப் பாருங்கள்:

"யுத்தங்களாலும், அணுகுண்டுகளாலும் பீதியடைந்து சோர்ந்துபோயுள்ள இன்றைய உலகத்துக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். உண்மையாகவே, இன்றைய மக்கள் காந்தியடிகள் இருபது வருஷங்களுக்கு முன் கூறிய உண்மையை உள்ளத்துக்குள் நன்கு பதித்து கொள்ள வேண்டும். நாம் வாழவேண்டுமானால் காந்திஜி காட்டிய அன்பு நெறியன்றி வேறு வழியில்லை. தனிப்பட்ட நபரானாலும், ஒரு சமுதாயமானாலும் காந்தியடிகள் கூறிய அஹிம்சை நெறி தவிர வேறு வழியில்லை என்பதை நன்றாக உணர வேண்டும். இல்லையேல் நாம் உலகத்திலிருந்து முற்றும் அழிந்து போவது சர்வ நிச்சயம். ஆம், காந்திஜி கூறியதுபோல் சத்தியம், அஹிம்சை இவ்விரண்டையும் தவிர்த்து நம்மைக் காப்பாற்றக் கூடியது ஒன்றில்லை."

காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்த போது 'சத்தியாக்கிரக' முறை அவர் உள்ளத்தில் எப்படி ஜனித்தது என்பதை காந்தியடிகளுடன் தென் ஆப்பிரிக்காவிலிருந்து தொண்டாற்றிய ஸ்ரீ போலக் ரஸமாக எழுதியிருக்கிறார். ஸ்ரீமதி மீரா பென், காந்தியடிகள் பசு சம்ரக்ஷணையில் எவ்வளவு சிரத்தை கொண்டிருந்தார் என்பதை ஒரு சிறிய கட்டுரை மூலம் வெகு உருக்கமாக விளக்குகிறார். ஸ்ரீ நாராயண் அகர்வால், பாரதன் குமரப்பா, ஜே. ஸி. குமரப்பா, ஜே. பி. கிருபளானி முதலியவர்கள் காந்தியடிகளின் அரசியல் தத்துவம், பொருளாதார தத்துவம் முதலியவற்றைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் தவிர ஆல்டுவஸ் ஹக்ஸ்லி, ஹோராஸ் அலெக்ஸாண்டர், எஸ். கே. ஜார்ஜ், ஆலன் போன்ற மேல் நாட்டினரும் ஜவாஹர்லால் நேரு, ஜனாதிபதி ராஜேன்பாபு முதலியவர்களும் இனிய கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

கவி ரவீந்திரர் காந்தியடிகளைப் பற்றி அவ்வப்போது எழுதிய கவிகளும், கட்டுரைகளும் ஆங்காங்கே இடம் பெற்றிருக்கின்றன. காந்தியடிகளின் பல சிந்தனைகளையும் தொகுத்து முதல் கட்டுரையாக வெளியிட்டிருக்கின்றார்கள்.

"நானோ சாந்த மனிதன்; சாந்தியில் நம்பிக்கையுள்ளவன். ஆனால் எந்த விலை கொடுத்தும் சாந்தியை வாங்கிவிட வேண்டும் என்ற கொள்கையுடையவன் அல்ல. கல்லில் காணும் அமைதியை நான் விரும்பவில்லை; கல்லறையில் காணும் அமைதியை விரும்பவில்லை. கடவுளின் ஒப்பற்ற சக்திதான் நம்மைக் காப்பாற்றக் கூடும் என்ற நம்பிக்கையில், தன் உள்ளத்தை உலகின் துன்ப அம்புகளுக்கு இலக்காக்கி விட்டு வாழும் மனிதனின் இதயத்தில் குடி கொண்டிருக்கும் சாந்தியைத்தான் விரும்புகிறேன்."

அவர் அவ்விதம் விரும்பியதுமட்டுமல்ல; வாழ்ந்தும் காண்பித்தார். அத்தகைய சாந்த மகாத்மாவின் ஞாபகார்த்தமாக 'விசுவ பாரதி' காரியாலயத்தார் சுமார், 334 பக்கங்களும், பல படங்களும் கொண்ட அழகிய மலர் வெளியிட்டிருக்கிறார்கள்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

293. பகைவர்களுக்கு எமன்தான்!

கும்பகர்ணன் போர்க்களத்துக்குத் தேரில் வருகிறான். அவனுடைய உருவத்தைப் பார்த்து அதிசயித்த வண்ணமாய் இருக்கிறான் ராமன்.

"இடது தோளில் இருந்து வலது தோள் வரை அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்றால் பலநாள் பிடிக்கும் போலிருக்கிறதே!

"தோள் இரண்டுக்கும் இடையே உள்ள உடலைப் பார்த்தால் இரு பெரும் கால் மேல் வைத்த மலைபோல் இருக்கிறதே!

"யுத்தத்துக்கு வந்த மனுஷன் என்று இவனை எப்படிச் சொல்ல!"

தோளொடு தோள்செலத்
தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால்;
நடுவண் நேர்உடல்
தாளுடை மலைகொலாம்!
சமரம் வேட்டதோர்
ஆள்என உணர்கிலேன்
ஆர்கொலாம் இவன்?

[சமரம் வேட்டதோர் ஆள்: யுத்தத்தை விரும்பிச் செய்யவந்த ஆளா இவன்—என்றான் ராமன்; ஆர் கொலாம் இவன்: இவன் யாரோ!]

ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் யுத்தங்கள் சதா நடந்துகொண்டிருந்தன. ஒரு ஊருக்கும் மற்றொரு ஊருக்குமே யுத்தம் நடக்கும். நாட்டுக்கும் நாட்டுக்கும் நடக்கிற யுத்தங்கள் வேறு.

இந்த யுத்தங்களைத் தடுக்க எவ்வளவோ முயன்றுதான் இருக்கிறார்கள் மக்கள். ஆனாலும் முடியவில்லைதான்.

காரணம் எதுவாயும் இருக்கலாம்.

மாட்டு மந்தைகளை அடித்தான், வெருட்டினான், கவர்ந்து போனான். எதுவும் காரணமாக இருக்கலாம்.

அந்த நிலையில் மக்களுக்கு ஆன லக்ஷ்யம் எல்லாம் வீரம்தான். அந்த வீரச் செயலுக்கான திடகாத்திரமான சரீரமும் பெறவேண்டும் என்பதுதான்.

கும்பகர்ணனுக்கு வாய்த்திருந்த உடலின் பெருமையையும் திடத்தையும் பார்த்து ராமனுக்கு ஒரே அதிசயம். அந்த அதிசயம் அதிசயோக்தியாகவே வருகிறது.

தோளொடு தோள்செலத்
தொடர்ந்து நோக்குறின்
நாள்பல கழியுமால்

அதிசயத்தின் உண்மையான தொனி இது.

***

இப்படி யெல்லாம் ராமன் வியந்து பேசி, யார் என்று கேட்டதற்கு விபீஷணன் ராமனது காலில் விழுந்து வணங்கிச் சொல்லுகிறான்.

'ஆரியன் அனைய கூறு,
அடியினை இறைஞ்சி, ஐய!
பேரியல் இலங்கைவேந் தன்
பின்னவன் எனக்குமுன் னோன்,
காரியல் காலன்அன் ன
கழல்க்கும்ப கருணன்என் னும்
சூரிய சூலத்தான்' என(று)
அவன்நிலை கூறல்உற் றான்.

[ஆரியன்: ராமன்; பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன்: சகல பராக்கிரமமும் கொண்ட ராவணனது தம்பி, எனக்கு அண்ணன்; காரியல் காலன் அன்ன: கரு நிறங்கொண்ட எமனை ஒத்த; கழல்க் கும்ப கருணன் என்னும்: கும்பகர்ணனைச் சொல்லும் போதெல்லாம் வீரக்கழல்க் கும்பகர்ணன் என்றே சொல்லுவார்கள்; சூரிய சூலத்தான்: கூர்மையான திரிசூலத்தைப் படையாகக் கொண்டவன்—எமனுக்கும் திரிசூலம் தானே படை; அவன் நிலை கூறல் உற்றான்: கும்பகர்ணனது உண்மையான தன்மையைச் சொல்ல ஆரம்பித்தான் விபீஷணன்.]

கும்பகர்ணன் பெரிய வீரன் என்பது மாத்திரம் அல்ல; உயர்ந்த குணமும் உடையவன். அதுபற்றி விரிவாய் எடுத்துச் சொல்ல விரும்புகிறான் தம்பி விபீஷணன்.



1½ அணா

நோய், ஜலதோஷம்

ஆகியவற்றை குணமாக்குகிறது

பிரதி தினமும் தொல்லை கொடுக்கும் ஜுரம், குளிர், நோய், வலி ஆகியவற்றிலிருந்து எல்லோருக்கும் விடுதலை. கோடிக் கணக்கான மக்களுக்கு 'ஆஸ்ப்ரோ' என்பதின் அர்த்தம் இதுதான்— 'ஆஸ்ப்ரோ' உங்களுக்கும் உதவட்டும். அது உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கட்டும். அது உங்களைப் பாதுகாக்கட்டும். உங்களுக்கு அருகாமையிலுள்ள மருந்து வியாபாரியிடம் நீங்கள் 'ஆஸ்ப்ரோ'வைப் பெறலாம். 8 மாத்திரைகள் 1½ அணாதான். அல்லது 30 மாத்திரைகள் கொண்ட பெரிய பாக்கெட் அணா 15. தலைவலி, நரம்பு வலி, ஜலதோஷம் ஏதாவது வந்தால் இரண்டு 'ஆஸ்ப்ரோ' மாத்திரைகள் சாப்பிடுங்கள். சிறிது நேரத்திற்குள் வலி குறைந்து போகும்; ஜலதோஷம் மறையும்; நீங்கள் மறுபடியும் சுகமாக இருப்பீர்கள். நீங்கள் கஷ்டப்பட வேண்டியதேயில்லை. ஏனெனில் 'ஆஸ்ப்ரோ' உங்களை கைவிடாது.

'ஆஸ்ப்ரோ'

உங்களை கைவிடாது

'ஆஸ்ப்ரோ' அபாயமற்றது. குழந்தை கூட சாப்பிடலாம்.




கீழ்க்கண்ட நோய்களுக்கு உபயோகிக்கவும்:— தலைவலி, ஜலதோஷம், நரம்பு நோய், தொண்டைப்புண், வாதநோய், பல்வலி, தூக்கமின்மை, சூரிய வெப்பத்தால் ஏற்படும் கோளாறுகள்.

குடும்ப சைஸ்
30 மாத்திரை அணா 15



இவ்வொரு 'ஆஸ்ப்ரோ' மாத்திரையும் சுகாதார முறையில் காற்றுப் புகவிடாமல் அடைத்து ஸீல் வைக்கப்பட்டுள்ளது. இதனால் அது எப்போதும் சுத்தமாகவும் புத்தம் புதிதாகவும் வைக்கப்பட்டுள்ளது.

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ... (இந்தியா) லிமிடெட், 9/10, ... பி. பெ. 1378 (போன்: 4460) ... & கிளைகள்.



விரைவில் குணம் • அபாயமின்மை • பலனளிக்கும் தன்மை.

114TM

வேறொன்றும் கூற தேவையில்லை



சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா

AIBMA

BC. 2214



திருவாளர் தாமோதரன்

பது முடியாத காரியம் என்றும் எவ்வளவோ சொன்னார். ஆனால் அந்த உற்சாகம் வாய்ந்த கோஷ்டியார் அவ்வளவு சீக்கிரமாக உற்சாக மிழந்துவிடத் தயாராக இல்லை. ஜமீன்தாரின் விருந்துபசாரத்தைச் சலிக்கச் சலிக்க அனுபவித்து விட்டு, பிச்சைமுத்துவின் வயலைத் தேடிக் கொண்டு புறப்பட்டனர்.

நல்ல லட்சியத்தோடு கிளம்பிய இந்தக் கோஷ்டியாருக்கு இந்தப் பிரயாணம் ரொம்பவும் அலுப்பாக இருந்தது. ஏன், தாசில்தார், திருவாளர் தாமோதரன் அவர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தி விட்டு, ஒரு யோசனையை மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொண்டார். அதாவது, இந்த முயற்சியில் அதிகமாகக் காலத்தை வீணாக்காமல், ஊருக்குத் திரும்பி விடலாம் என்றார். தாசில்தாரின் இந்த யோசனையை, அவர்களுடன் சென்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், ரெவின்யூ ஆஃபிஸரும் ஆமோதித்தனர். ஆனால் உதவி விவசாய டைரக்டர், இவ்வளவு முயற்சிக்குக் காரணமாயிருந்த வயலை ஒருதடவை பார்த்துவிட விரும்பினார். விவசாய டிமான்ஸ்டிரேடரோ, இந்த யோசனையை ஆமோதித்து, நரிகள் தண்ணீர் பாய்ச்சிய வயலிலுள்ள மண்ணைப் பரிசோதிக்க வேண்டுமென்றும் அதற்காகக் கொஞ்சம் அந்த மண்ணை வீட்டுக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் கூறினார். ஆனால் இந்தக் கோஷ்டியின் தலைவரும், விவசாயிகளின் ரசிகருமான திருவாளர் தாமோதரன் அவர்கள் மிகவும் ஆத்திரத்துடன் அவர்களுடைய அவநம்பிக்கையையும், அதைரியத்தையும் கண்டித்தார். அத்துடன் பையனைக் கண்டு பிடித்து, நரிகள் தண்ணீர் இறைக்கும் அற்புதக் காட்சியைப் பார்க்காமல் ஊருக்குத் திரும்பக் கூடாது என்று மறுபடியும் வற்புறுத்தினார். ஆகவே, மாதுவைத் தேடிக் கண்டு பிடிக்க ஒரு தீவிர முயற்சி எடுக்கப்பட்டது!

மாதுவைத் தேடிக் கண்டு பிடித்துக் கொடுத்தால் நல்ல பரிசு வழங்கப்படும் என்று ஆசை காட்டிப் பல கிராம வாசிகளை நியமித்தனர். கிராமத்துச் சுற்று வட்டாரம் முழுவதிலும் சல்லடை போட்டுச் சலித்து விட்டனர்; மாது அகப்படவே இல்லை. மாது மாயமாகவே இருந்தான். அதனால் இந்தக் கோஷ்டி திரும்பிவிடத் தீர்மானித்தது.

இந்த விஜயத்தினால் ஏற்பட்ட பலனைப் பற்றி திருவாளர் தாமோதரன் அவர்கள் தமது டைரியில் குறித்துள்ள முதல்பலன் அவ்வளவு உற்சாக மளிக்கக் கூடியதாக இருக்கவில்லையாயினும், இரண்டாவது பலன் ரொம்பவும் பரபரப்பு அளிப்பதாக இருந்தது.

• • •

அவருடன் சென்றவர்களுக்கெல்லாம் பித்தம் தெளிந்து விட்டது. ஏன், அவருடன் சென்று இந்தத் துறையில் தொண்டாற்றினால் இன்னும் ஏதாகிலும் பட்டம் பதவி கிடைக்குமோ என்று நம்பிய அந்த ரெவின்யூ ஆஃபிஸருக்கும், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குங்கூட மயக்கம் தெளிந்து. இனி அந்த முயற்சியில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை என்று கூறி விட்டனர். ஆகவே, திரு. தாமோதரன் அவர்கள் ஒருவர்தான் இந்த முயற்சியில் இன்னும் நம்பிக்கை கொண்டிருந்தார். அதாவது மாது விவசாயத்துறையில் ஒரு புது முறையையே புகுத்தி விட்டான். அப்படிப் பட்டவனை இரண்டு நாட்கள் தேடிவிட்டு அகப்படவில்லை என்பதனால், இம்முயற்சியை விட்டு விடக்கூடாது என்று முழுமனதுடன் நம்பினார். எங்கேயோ ஒரு மூலைக் கிராமத்தில் நிகழ்ந்த மேற்படி சம்பவம் விவசாயத்தில் எவ்வளவு பெரிய அதிசயங்கள் நிகழ்த்தும் என்பதை அவர் கற்பனை பண்ணிப் பார்த்துக் கொண்டார்! அத்துடன் இந்த அரசாங்கத்தார் மட்டும் தாம் கூறுபவைகளைச் செவி கொடுத்துக் கேட்டு, தம் கருத்துக்களைக் காரியத்தில் நிறைவேற்றினால் அதுவே போதுமே என்று ஏங்கினார். (தொடரும்)

கருதினர்; வேறு சிலர் மிகவும் சிரத்தையுடன் கேட்டனர். இவ்விதம் சிரத்தையுடன் கேட்டவர்களில் ஒருவர் தாமோதரன் என்பவர். இவர் தம் வாழ்நாளையே விவசாய ஆராய்ச்சியில் செலவழித்தவர். ஏழை விவசாயிகளின் நிலையை சீர்திருத்தி உயர்த்துவது எப்படி என்பது பற்றிப் பல புஸ்தகங்கள் வேறு எழுதியிருக்கிறார். ஆகவே, அவர், இந்த அதிசய சம்பவத்தைத் தமது 'டைரி'யில் (நாட் குறிப்புப் புஸ்தகத்தில்) குறித்துக் கொண்டார்.

இதிலிருந்து, மூன்று விளைவுகள் ஏற்பட்டன என்பது தெரிய வருகிறது.

அவர் நல்ல நரிக்காட்டுக்குப் போய்வர வேண்டும் என்று தீர்மானித்தார். ஆனால் அவர் தனியாகப் போகவில்லை. தம்முடன் சில உத்தியோகஸ்தர்களை அனுப்புவது மிகவும் அவசியம் என்பதை எடுத்துக் காட்டி ஜில்லா கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கலெக்டரிடம் ஒரு பாராட்ட வேண்டிய குணமிருந்தது. அதாவது திருவாளர் தாமோதரன் அவர்களிட மிருந்து விவசாய சம்பந்தமாக எந்தக் கடிதம் வந்தாலும், அதை மிகவும் அவசர விஷயமாகப் பாவித்து வந்தார். அவர் கடிதத்தைக் கவனித்து திருவாளர் தாமோதரன் அவர்களுடன் கூட ஒரு உதவி விவசாய டைரக்டர், ஒரு விவசாய டிமான்ஸ்டிரேடர், ஒரு தாசில்தார், இரு ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் போக வேண்டும் என்று நியமித்தார்.

கலெக்டரும் தவறாமல் 'கிளப்'புக்குப் போகிறவராதலால், ஒருநாள் மாலை கிளப்பில் தம்முடைய நெருங்கிய நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, திருவாளர் தாமோதரன் அவர்களின் நரிக்காட்டு விஜயத்தினால் ஏதாகிலும் பலன் கிட்டலாம் என்று தாம் பரிபூரணமாக நம்புவதாகத் தெரிவித்தார். இதைக் கேட்டவுடனே கிளப் அங்கத்தினர்களான ஒரு ராவ்பகதூரும் ஒரு ராவ்சாகிபும், திருவாளர் தாமோதரன் அவர்கள் நல்ல நரிக்காட்டு விஜயத்துக்காகும் செலவைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள உற்சாகமாக முன் வந்தனர்.

இதன் பலனாகத் திருவாளர் தாமோதரன் கோஷ்டியார் நல்ல நரிக்காட்டு ஜமீன்தாரின் விருந்தினராகப் போய்ச் சேர்ந்தனர். அங்கே நரிகள் தண்ணீர் இறைக்கும் அற்புதக் காட்சியைத் தங்கள் கண் எதிரில் காண்பிக்க ஏற்பாடு செய்யும்படி ஜமீன்தாரை வேண்டிக் கொண்டனர். ஜமீன்தார், அந்தப் புகழ்பெற்ற மாது ஒரு சிறு காடோடிப் பையன் என்றும், அவனைத் தேடிக் கண்டுபிடிப்

கல்யாண காலங்களுக்கு.....



இது நாட்டியக் கச்சேரி விளம்பரம் அல்ல. பொதுவாக கல்யாணம் கார்த்திகை, நடனம், நாடகம் சங்கீதம் முதலிய விசேஷங்களுக்கு யாவருமே ஆவலுடனும் சந்தோஷத்துடனும் உடுத்தும் ஆடைகளைப் பற்றித்தான். அழகுக்கு அழகு செய்வது ஆடைகள்தானே!

அவரவர்களுக்குப் பிடித்தமான அழகான பார்டருடன் கண்ணைப் பறிக்கும் நவீன டிசைன்களில் அற்புதமான வேலைப்பாடமைந்த பட்டுப் புடவைகள் ஏராளமாக ஸ்டாக் வந்துள்ளன.

இன்று சென்னைமா நகரிலுள்ள அநேகரும் பரிபூரணத் திருப்தியுடன் திரும்பத் திரும்ப வந்து வாங்கிச் செல்லும் உத்திரவாதம் வாய்ந்த கடை.

இன்றே ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

○●○

ராதா
ஸில்க் எம்போரியம்
1-14, சன்னதித் தெரு - மயிலாப்பூர்

பிராஞ்சு:
ருக்மணி ஸில்க் எம்போரியம்
கும்பகோணம்



அவர் இந்த அதிசயச் செய்தியுடன் ஜமீன்தாருக்குத் தெரிவித்தார். இந்தக் கதையை ஆச்சரியத்துடன் கேட்ட ஜமீன்தார் கூறிய முதல் வார்த்தை "பிச்சைமுத்து இந்த வருஷம் அதிகமாகத்தான் அளக்க வேண்டும். இந்த தெய்வ அனுக்கிரகத்தால் அவன் நிலம் வழக்கத்தைவிட அதிகமாகவே விளைந்திருக்க வேண்டுமல்லவா?" என்பதுதான். அப்போது அவர் கண்களில் ஒரு புத்தொளி ஏற்பட்டது.

இதைக் கேட்ட காரியஸ்தர், இது ரொம்பவும் நல்ல யோசனை என்றும், இந்த யோசனை தமக்கு முதலில் தோன்றவில்லையே என்றும் வருந்தினர்.

9. திருவாளர் தாமோதரன்

நல்ல நரிக்காட்டுக்குப் பக்கத்திலிருந்த எட்டுக்கோட்டையில் 'பிஞ்சராப் போல் கிளப்' என்று பிராபல்யமடைந்திருந்த சங்கத்தில் நமது நரிக்காட்டு ஜமீன்தாரும் ஒரு தீவிர அங்கத்தினர். மனிதர்கள் கூடும் சங்கத்திற்கு, 'பிஞ்சிராப்போல் கிளப்' என்று பெயரிடுவார்களா என்று நீங்கள் அதிசயிக்கலாம். இதுவல்ல அதன் உண்மைப் பெயர். அந்தச் சங்கக் கட்டிடத்து வாசலில் பெரிய கொட்டை எழுத்துக்களில் 'மெட்ராபலிடன் கிளப்' என்று எழுதப்பட்ட ஒரு பலகை தொங்கத்தான் செய்தது. பிஞ்சிராப் போல் கிளப் என்ற பெயர் வந்ததற்கு காரணம் இருக்கத்தான் செய்தது. இந்தச் சங்கத்தின், ஸ்தாபகர்களில் ஒருவரை மற்ற அங்கத்தினர்கள் தள்ளி வைத்தபோது, அந்த ஸ்தாபகர் 'பிஞ்சிராப்போல் கிளப்' என்று கூறிக் கேலி செய்தார். அதற்குப் பிறகு பிஞ்சிராப் போல் கிளப் என்ற பெயரே நிலைத்து விட்டது. இவர் இவ்விதம் தாம் சிருஷ்டித்த சங்கத்தை இப்படி அவமானப் படுத்திக் கேலி செய்ததற்கு ஒரு நியாயமும் இருக்கத்தான் செய்தது. சங்கத்தின் தலைவரோ நொண்டி. கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவருக்கு ஒரு கண் குருடு. அவரை விரட்டுவதற்குக் காரணமாக இருந்த காரியதரிசி, டென்னிஸ் விளையாடி, கை ஒடித்துக் கொண்டு பெரிய கட்டாகக் கட்டிக் கொண்டு முடவன் போல் காட்சியளித்தார் அவர் விலகும் போது. இவ்வளவு அழகு வாய்ந்த அங்கத்தினர்கள் கொண்ட கிளப்புக்குப் 'பிஞ்சிராப் போல் கிளப்' என்ற பெயர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! இந்த வர்ணனையில் ஓர வஞ்சகமில்லாமல், 'பிஞ்சிராப் போல் கிளப்' என்று கேலி செய்த நபரே கோணல் மாணலாக வளைந்த தோள் கொண்டிருந்தார்.

இந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் எதுவாயிருப்பினும் ஊர்ஜனங்கள் இப் பெயர் கொண்டுதான் அழைத்தனர்; இந்தப் பெயர் சொன்ன மாத்திரத்தில் யாரும் புரிந்து கொண்டனர். ஆனால் மனிதனின் ஞாபக சக்திதான் எவ்வளவு குறுகியது! அவ்விதமிருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்! இல்லையேல், நாளடைவில் அப்பெயரிலிருந்த விஷமத்தனமும் கோபமும் மறைந்திருக்குமா? உப்புசப்பு இல்லாத அழுதுவழியும் சங்கக் கூட்டங்கள் நிகழும்போது, அதன் அங்கத்தினர்களும் காரியதரிசிகளுமே, அப் பெயரை உபயோகித்து ஹாஸ்யரஸத்தை அனுபவிக்கத்தான் முடிந்திருக்குமா?

ஒவ்வொரு நாளும் சங்கத்துக்கு ஜமீன்தார்தான் முதலில் வருவார்; அவர்தான் கடைசியில் போவார்.

அன்று, அதாவது நல்ல நரிக்காட்டுச் செய்தி வந்த மறுநாள், ஜமீன்தார் மாடுவைப் பற்றிய விசித்திர விவரங்களுடன் சங்கத்துக்கு வந்தார். இங்கே வந்து சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்களிடம் அந்த அதிசய சம்பவத்தைப் பற்றிக் கூறினர். சிலர் இதை அலட்சியமாகக்

திருந்தேன். சுப்பனும் அங்கே உட்கார்ந்திருந்தான். மாது எங்கள் முன்னிலையில் ஓடி விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கைரேகை பார்த்துச் சொல்லும் ஜோசியர் வந்தார். அந்த ஜோசியரை உங்களில் அநேகர் பார்த்திருக்க மாட்டீர்கள். ஏன், அந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு நானே பார்க்கவே இல்லையே! நிற்க. சுப்பன் அன்புடனும் மரியாதையுடனும் அவரை வரவேற்று எங்களுடன் திண்ணையில் உட்கார வைத்தான். சுப்பன் மெள்ள, ஜோசியர் தன் மகனுடைய கையைப் பார்க்க வேண்டும் என்று தான் விரும்புவதாகச் சொன்னான். ஜோசியரும் சம்மதித்தார். பிறகு பையனை அழைத்து வந்து அவன் உள்ளங் கையைக் காட்டினான். அதைப் பார்த்த ஜோசியர் துள்ளி எழுந்து, 'என்னை நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். இந்தப் பையன் ராஜாவாகப் போகிறான்' என்று உரத்த குரலில் சொன்னார். இதைக் கேட்டதும், எங்கள் ஆவல் அதிகரித்துவிட்டது. நாங்கள் கேள்வி மேல் கேள்விகள் கேட்டோம். அவர் எழுந்திருந்து பதில் கூறாமல் போய்விட்டார். இந்த ஜோசியத்தைக் கேட்டு, நான் சிரிப்பது வழக்கம். என் மனைவி 'மாது வாவது ராஜாவாகிறதாவது' என்று கேலி செய்வாள். ஆனால் இப்பொழுது எனக்கு அதில் எள்ளத்தனையும் சந்தேகம் கிடையாது."

"ஆனால் அவன் இப்பொழுது ஒன்றும் ராஜாவாக இல்லையே! ஏன், அவன் என்றைக்காவது ராஜாவாவான் என்பதற்கு எவ்வித அறிகுறியும் காணவில்லையே!" என்றான் ஒருவன்.


"உனக்கு எப்படித் தெரியும்?" என்றான் மற்றொருவன்.

இன்னொருவன், "ஒரு வேளை ஜமீன்தாராகவாவது ஆகலாம்" என்று ஹாஸ்யம் கூறினான்.

"அவன் ராஜா ஆவான் என்றால் ராஜாவாகத்தான் ஆவான். அதில் பேரம் பண்ணிப் பயனில்லை. அதை நீயும் நானும், உயிருடனிருந்து பார்க்கத்தான் போகிறோம்" என்று மறுபடியும் உறுதியாகக் கூறினான் ராமன் அம்பலக்காரன்.

• • •

இந்த விஷயம், அதாவது மாது நரிகளைத் தண்ணீர் இறைக்கப் பயன்படுத்துவது, இவ்வளவுடன் நிற்கவில்லை. விளைச்சலைப் பார்த்துவிட்டுப் போக வந்த ஜமீன்தாரின் ஏஜண்டின் காதுக்கும் எட்டியது.



ஐடெக்ஸ் கண்மையின் குணத்தை பரிசோதித்தறிந்த பல டாக்டர்கள் இதை சிறு குழந்தைகள் உட்பட யாவரும் உபயோகிக்கலாமென்று அத்தாட்சி செய்திருக்கிறார்கள்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ● போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

தயாரிப்பவர்கள்: அரவிந்த் லாபரட்டரீஸ் - மதராஸ்

விநியோகிப்பவர்கள்: புஷ்பவனம் ஸ்டோர்ஸ் - திருவல்லிக்கேணி - மதராஸ்-5

நரிக்காட்டு ராஜா

எஸ். கோபாலன்
மொழிபெயர்ப்பு
எஸ்.வி.எஸ்



8. கட்டுக் கதைகள்


நல்ல நரிக்காட்டு வாசிகள் மனித முயற்சியின்றி வயல்கள் விளையும் அதிசயத்தைப் பற்றி விதவிதமான கதைகள் கட்டி விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். யாராகிலும் காரண காரியங்களுடன் அந்த அதிசயத்தைப் பற்றி விளக்க முற்பட்டிருந்தால் அவர்கள் மேல் அசாத்திய கோபம் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் பிச்சை முத்துவும் ராமனும் கூறிய கதையைக் கேட்டு அப்படியே பிரமித்துப் போய் விட்டனர். அப்படி பிரமித்துப் போனதற்குக் காரணம், 'தெய்வங்கள் வந்து வாளி வாளியாகத் தண்ணீர் இறைத்தன' என்ற கதையை விட நரிகள் இறைத்த செய்தி அதிசயமாக இருந்ததுதான். மேலும் அவர்களுக்கு இதுவரை நரிகளை இப்படியும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் உதித்ததே கிடையாது. மாதுவின் இந்த முறை ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே அவர்களுக்குத் தோன்றியது.

மாதுவைப் பற்றி அவர்கள் பேசாத நாளே கிடையாது. வெகு நாட்கள் வரை அவன் ஒரு புரியாப் புதிராகவும் விசித்திரப் பிறவியாகவு மிருந்து வந்தான். ஆனால் இப்பொழுது அவர்கள் தங்கள் மாதுவிடம் ஆயிரம் குண விசேஷங்களைக் கண்டனர். தேள் கொட்டிய மனிதனை மாது ஒரு தடவை தொட்டால் போதும் விஷம் பூராவும் இறங்கி விடுவதை வெகு நாட்களுக்கு முன்பே ஒருவன் பார்த்திருப்பதாகச் சொன்னான். இன்னொருவன், தேள் என்ன, பாம்பு கடித்தாலே மாதுவின் ஸ்பரிசத்தில் குணமாகி விடுவதைப் பார்த்திருப்பதாகச் சொன்னான். மூன்றாவது ஆசாமி, எந்த வியாதிக்கும் மாதுவிடம் மருந்திருப்பதாகச் சொன்னான். நாலாவது நபர், சாதாரணமாக மாது மரங்களின் மேல் தான் தூங்கினான் என்றும், மலர்ந்த தாமரை மலரிலிருந்து லக்ஷ்மி தேவி இறங்கி வருவதைப் போல், அவன் மரக் கிளைகளிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்திருப்பதாகச் சொன்னான். மொத்தத்தில் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு எந்த விஷயமும் இயற்கையாகவும், இயல்பாகவும் அவர்களுக்குத் தோன்றியது.

இந்தக் கட்டுக் கதைகள் வெறும் கதைகளல்ல உண்மையாகவும் இருக்கலாம் என்ற எண்ணத்தை உண்டாக்கியது ராமன் அம்பலக்காரன் கூறிய மற்றொரு சம்பவம்.

மாதுவினுடைய தகப்பனை, ராமனுக்கு வெகு நன்றாகத் தெரியும். இருவருக்கும் அன்யோன்ய நட்புண்டு. மாது ஐந்து வயது சிறுவனாக இருந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்ததாம். அது அவனுடைய நினைவிலும், அவன் மனைவியின் நினைவிலும் அன்றும் பசுமையாக இருப்பதாகக் கூறி, அதைச் சொன்னான் :

“அது நடந்து ஒன்பது அல்லது பத்து வருஷத்துக்கு மேலிருக்கும். நான் சுப்பன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்



Stanes

சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி

பிரசித்திபெற்ற ஸ்டேன்ஸ் கம்பெனியார்

தயாரிக்கும் ஓர் விலை குறைந்த ரகம்

1, 2, 3, 7, 14, 20 ராத்தல்
டின்களில் கிடைக்கும்



நற்செய்தி ! ஸ்டேன்ஸ் கம்பெனியாரின் மனோகரமான சிவப்பு லேபிள் கலப்பற்ற காப்பி இப்பொழுது ஏராளமாக கிடைக்கிறது.

தாங்களே பொடி செய்ய விரும்புபவர்களுக்கு, மிகவும் ஜாக்கிரதையாக பொறுக்கி, வறுத்த ஸ்டேன்ஸ் காப்பிக் கொட்டைகளும் கிடைக்கின்றன.

தருவிக்கும் செலவின்றி இவைகளை பிரத்தியேகமாக பெறுங்கள்

சிறந்த ரக காப்பிக் கொட்டைகள், பீபெரி, தட்டை எக்ஸ்ட்ரா போல்டுகள் 10, 80 ராத்தல் பைகளில், விலை விகிதங்களுக்கும் விவரங்களுக்கும் தி. யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூருக்கு எழுதுங்கள்.

தென் இந்தியாவின் சிறப்பு

THE PICK OF THE SOUTH

விஜயவாடாவிற்கு ஏஜண்டு :
மிஸ்டர். S. ch. மல்லப்ப ராஜு
மாக்யுபாக்சராஜ், செப்ரெகெட்டுப்

சென்னைக்கு ஏஜண்டு :
மெஸர்ஸ். வின்ஸம் பிரதர்ஸ்
12 & 13 சைனாபஜார்



னால் உனக்கு ஏதேனும் கெடுதல் நேரும். பாவம், நேற்று என்னால்தான் உனக்கு அடி விழுந்தது. ஆனால் உன் நிலைமையைக் கேட்க எனக்குச் சங்கடமாக இருக்கிறது. ஒரு ஐந்து ரூபாய் தருகிறேன்; எடுத்துக் கொண்டு போய் இன்றைய காரியத்தைப் பார். இந்தச் சிலை எனக்கு வேண்டாம். இதை நீ வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாதே!'' என்று சொல்லிப் பையிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தேன்.

அந்தப் பெண் பணத்தை வாங்க மறுத்தாள். ''இந்தச் சிலையை நான் அன்னியர் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு வந்து உங்களிடம் விற்கவில்லை. இது என் புருஷனின் சொத்து. என் புருஷனின் சுக துக்கம் என்னைச் சேர்ந்ததல்லவா? என்னுடைய நகைகளை எல்லாம் விற்று அவருக்கு வேண்டியதை நான் செய்திருக்கிறேன். அதைப்போல் அவருடைய பொருளை அவரது நன்மைக்காக விற்க எனக்கு உரிமை இல்லையா?''

நேற்று அந்தப் பெண் அவனிடம் குடும்பக் கஷ்டம் பொறுக்க முடியாமல் சொல்லிய இரண்டு வார்த்தைகளுக்காக வாங்கிய அடியை என்னால் மறக்கவிட முடியுமா? அதற்கே அப்படிப்பட்ட தண்டனை என்றால் அவனுக்குத் தெரியாமல் இந்தச் சிலையைக் கொண்டு வந்து விற்பதினால் அவள் எப்படிப்பட்ட தண்டனையை அனுபவிக்க நேரிடும்?

''புருஷனுக்குள்ள உரிமை மனைவிக்கும் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதற்காக அவன் உன்னை அடித்து இம்சித்தால்...''

''அடிப்பார்; அதனால் பாதகமில்லை. இந்த அடிக்குப் பயந்தால் குடித்தனம் நடக்காது. அவர் அப்படி இருக்கிறாரே என்று நானும் பேசாதிருந்தால் இருவரும் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான். புருஷனென்று வாய்த்த பிறகு, குடும்பப் பொறுப்பு தலைமீது விழுந்த பிறகு, அடியோ உதையோ நம்முடைய பாக்கியம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே!''

இது திரேதா யுகமோ, துவாபர யுகமோ அல்ல. ஆனால் இந்த யுகத்திலும் இப்படிப்பட்ட பெண்கள் இருப்பதுதான் கடல் பொங்கிப் பூமியை ஆக்கிரமிக்காமல் இருப்பதற்கும், வானம் இடிந்து விழாமல் இருப்பதற்கும் காரணம் என்று எனக்கு அப்பொழுது பட்டது. ''நீ வீணாக அவனிடம் துன்புறுவானேன்? நான் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு போ; வித்தியாசமாக நினைக்காதே!'' என்றேன் மீண்டும்.

அந்தப் பெண் மறுத்துவிட்டாள். ''இதை வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பதாய் இருந்தால் கொடுங்கள்; இல்லாவிட்டால் வேண்டாம். அவருடைய முன் கோபத்தில் நான் இரண்டடி வாங்குவேன். பின்னால் மனங் குளிர நல்ல ஆகாரம் செய்து போட்டால் அவர் எல்லாவற்றையும் மறந்து விடுவார். நான் பட்ட அடியும் அத்துடன் மறந்து விடும்'' என்றாள். (அடுத்த இதழில் முடியும்)

விருந்தாலும், ஒரு வகையில் பச்சாதாபப் படக் கூடியதாகவும் இருந்தது. என்னிடம் அப்பொழுது அறுபது ரூபாய் இருந்திருந்தால் அந்தக் கண்ணனின் சிலையை விலை கொடுத்து வாங்கி இருப்பேன். அது அவனுடைய வறுமையைச் சிறிது போக்கும்; அவனுடைய கலைக்கும் ஒரு பெருமை அளித்ததாக இருக்கும். அவனுடைய கலைப் பொருளுக்குக் கேட்ட விலையைக் கொடுப்பதற்காகத் தேவலோகத்திலிருந்து ஒருவரும் வரவேண்டாம். இந்த உலகத்திலேயே மனிதர்கள் உண்டு என்று நிரூபித்து நானும் பெருமை யடையலாம். ஆனால் அந்தச் சமயம் என் பொருளாதார நிலையில் பலமில்லையே என்று வருந்திய வண்ணம் அந்தச் சிற்பக் கூடத்தை விட்டு வெளியே நடந்தேன்.

* * *

மறுநாள் மாலை வேளை. பொழுது போக்குக்காகச் சிறிது உலாவிவிட்டு வரலாம் என்று நான் வீட்டை விட்டு வெளியே கிளம்பினேன். வாசற்படிக் கட்டில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் நான் திடுக்கிட்டேன். நேற்று பார்த்த உருவத்தை அதற்குள் மறந்துவிட முடியுமா? அவள் சிற்பி மாதவனின் மனைவி. ஆம், அவளே தான் என் வீட்டு வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் நான் பிரமிப்படைந்து நின்றுவிட்டேன்.

அவள் பயந்தோடும் பரிதாபத்தோடும் என் முகத்தைப் பார்த்துக் கொண்டே, 'நேற்று வந்து கண்ணன் சிலையைப் பார்த்தீர்களே! அதை விற்று விட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று சொல்லியபடியே புடவைத் தலைப்பில் மூடி மறைத்து வைத்திருந்த சிலையை எடுத்துத் திண்ணை மீது வைத்தாள்.



அந்தப் பெண் எப்படி என்னுடைய வீட்டைக் கண்டு பிடித்தாள் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. "என் வீடு உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றேன்.

"நான் எதிர் வீட்டில் வேலை செய்கிறேன். உங்களை அடிக்கடி இந்த வீட்டில் பார்த்திருக்கிறேன்!" என்றாள்.

என்னுடைய திகைப்பும் வியப்பும் இன்னும் அதிகமாயிற்று "என்ன! எதிர் வீட்டில் வேலை செய்கிறாயா!" என்றேன்.

"ஆமாம், வயிற்றுப் பிழைப்புக்காக வீடு கூட்டி, பாத்திரம் பண்டம் சுத்தம் செய்கிறேன். மாதம் மூன்று ரூபாய் கொடுக்கிறார்கள். வீட்டில் புருஷனுக்குக் குடும்பக் கவலை இல்லை; பணம் சம்பாதித்தால்தான் வயிறு நிறையும் என்று தெரியவில்லை!" என்றாள் அவள் விம்மும் குரலில்.

நான் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மௌனமாக நின்றேன். தன் மனைவி பிறர் வீட்டில் வேலை செய்து மதிப்பை இழந்தாலும் பாதகமில்லை. தன் சுய மதிப்பையும் கர்வத்தையும் சிறிதுகூடத் தளரவிடக் கூடாது என்று நினைக்கும் ஒரு கலைஞன் சாக்ஷாத் அரிச்சந்திரனுக்கு நேர் வாரிசாகத்தா னிருக்கவேண்டும் என்று எனக்குப் பட்டது. "ஆம், இந்தச் சிலையை அறுபது ரூபாய் கொடுத்து வாங்கும் சக்தி எனக்கு இல்லையே!" என்றேன்.

"அறுபது ரூபாய் வேண்டாம். உங்களுக்கு நியாயமாகப் பட்டதைக் கொடுங்கள்" என்றாள் அந்தப் பெண் என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே.

"சரி, இந்தச் சிலையை உன் கணவனின் சம்மதத்தைக் கேட்டுத்தானே எடுத்து வந்தாய்?"

அவள் சிறிது தயங்கினாள். "இல்லை; தெரியாமல்தான் எடுத்து வந்தேன். என்ன செய்வது? அவருடைய பிடிவாதத்திற்கு இணங்கினால் குடித்தனம் எப்படி நடக்கும்? புருஷனைப் பட்டினி போட்டுப் பார்க்க எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் வரும்? இன்று உலையில் போட அரிசி வேண்டுமே!"

நான் சிறிது நேரம் யோசித்தேன். என் மனம் இரங்கிற்று. ஆனால் அந்த இரக்கம் தவறான காரியத்தைச் செய்ய என்னைத் தூண்ட வில்லை. "உன் கணவனின் சம்மதம் இல்லாமல் இதை நீ விலைக்கு விற்க வந்தது பிசகு; இதை நான் வாங்குவது அதைவிடப் பிசகு. இத

அந்தப் பெண்ணின் முகத்திலும் சிறிது ஆத்திரக் குறி தென்பட்டது. "இப்படிச் சிலை சிலையாகச் செய்து வீட்டிலே கொலு வைச்சிட்டு நூறு ஆயிரம்னு ஏராளமாக விலை சொல்லிக்கிட்டிருந்தா எப்படி உயிர் வாழறது?" என்றாள்.

"எல்லாம் ஒரு காலம் வரும். அதன் அருமை தெரிந்து கேட்ட விலையைக் கொடுத்துவிட்டு வாங்கிக்கொண்டு போக ஒரு மனிதன் வருவான்" என்றான் அவன் கர்வமும் சுய அகங்காரமும் குலையாத குரலில்.

"மனிதர்கள் வரமாட்டார்கள். தேவர்கள்தான் வருவார்கள், நீங்க கேட்ட விலையைக் கொட்டிக் கொடுத்துவிட்டு இந்தச் சிலைகளை எல்லாம் வாங்கிக்கிட்டுப் போக!" என்றாள் அலுப்பும் ஏளனமும் கலந்த குரலில்.



மாதவனும் சளைக்காமல் பதில் சொன்னான்: "ஏன் தேவலோகத்திலிருந்து இந்தச் சிலைகளை எல்லாம் வாங்கிக்கொண்டு போக ஒருவன் வரக்கூடாது? கட்டாயம் வருவான்!" என்றான் அவன் மனோ திடமும் நம்பிக்கையும் உள்ளவன்போல.

அந்தப் பெண் ஒரு பெருமூச்சு விட்டாள். நெஞ்சில் பொங்கி எழும் அடக்க மாட்டாத துக்கத்தினால் அவள் முகம் வாட்டமடைந்தது. "ஹூம்! தேவலோகத்திலிருந்து இவைகளை எல்லாம் யாரோ விலை கொடுத்து வாங்கப் போறாங்கன்னு மனக்கோட்டை கட்டிக்கிட்டு வயிற்றைக் காயப் போட்டுவிட்டுச் சாவையும் எதிர்பார்த்துக்கிட்டிருக்க வேண்டியதுதான்!" என்று முணுமுணுத்தாள்.

மாதவன் அவ்வளவு முன் கோபமுள்ளவனாக இருப்பானென்று நான் நினைக்கவில்லை. கண நேரத்தில் அவன் ருத்ராவேசம் கொண்டவன் போல் எழுந்து அந்தப் பெண்ணின் கன்னத்தில் பளீரென்று இரண்டு கொடுத்துக் கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். "நாயே! உனக்கு ஏன் இதையெல்லாம் பற்றிக் கவலை? வீட்டிலே சோறு இருந்தா சாப்பிடு. இல்லாவிட்டால் பட்டினி கிடந்து செத்துப் போ! ஒருவர் எதிரே வந்து என் மதிப்பையும் மானத்தையும் குலைக்காதே!" என்று கத்தினான். அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதால் கீழே விழுந்த அவள் மெதுவாக எழுந்து உள்ளே போனாள். அவள் உள்ளே விக்கி விக்கி அழும் குரல் என் காதில் விழுந்தது.

அந்தச் சிறிது நேரச் சம்பாஷணையிலிருந்தும், தகராறிலிருந்தும் எனக்கு அவர்களுடைய குடும்ப நிலை எப்படி இருக்கிறது என்பது தெளிவாக விளங்கியது. மாதவனுடைய உன்னதமான கலையுள்ளம் எப்படி எனக்கு விளங்கியதோ, அப்படியே சில விநாடிகளில் அவனுடைய வறுமையும், வறுமையினால் ஏற்பட்ட குண மாறுதலும், தாம்பத்தியச் சிக்கலும் தெளிவாக விளங்கின. இந்தத் தர்மசங்கடமான நிலையில் என்னால் மேலும் அங்கே நிற்க முடியவில்லை. உண்மையான கலையுள்ளம் படைத்தவர்களுக்குத் தன் மதிப்பும் சுய அகங்காரமும் இயற்கையாக அமைந்த குணம் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இத்தகைய வறுமை நிலையிலும்கூட, ஒருவேளை ஆகாரத்திற்கும் வழி இல்லாதபோதுகூட, தன் பொருளை மதிப்புக் குறைவான விலைக்குக் கொடுக்க இணங்காத ஒரு கலைஞனின் கர்வமும் தன்னம்பிக்கையும் மெச்சக் கூடியதா

சாண் வயிறு



கி. ரா. கோபாலன்

அந்த வாலிபன் நவீன காலத்துச் சிற்பி; அவன் பெயர் மாதவன். அவனைப் பற்றி என் நண்பர் ஒருவர் புகழ்ச்சியாகச் சொல்லக் கேட்டு, ஒரு நாள் அவனுடைய சிற்பக் கூடத்தைப் பார்வையிடப் போனேன். அந்த வாலிபன் உன்னதமான கைத்திறனும் மனோ சக்தியும் உள்ளவன்தான் என்பதை அங்குள்ள சிலைகள் நிரூபித்தன. விவேகானந்தர், ராமகிருஷ்ணர் முதலிய பெரியோர்களின் உருவங்களைச் சலவைக் கற்களினாலும் வெண்ணிறச் சுண்ணாம்புக் கற்களினாலும் செய்து அழகுபட வைத்திருந்தான். எல்லாவற்றையும் ஆவலுடன் கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தேன். ஆறு அங்குலமுள்ள ஒரு கண்ணனின் சிலை பார்க்கக் கவர்ச்சிகரமா யிருந்தது. அதை மெதுவாகத் தொட்டுப் பார்த்தேன். அது சாதாரண சுண்ணாம்புக் கற்களினால் செய்ததுதான். விலையும் மலிவாகத்தான் இருக்கும் என்று எனக்குப் பட்டது. அதை விலை கொடுத்து வாங்கி என் மேஜைமீது வைத்தால் மிகவும் சோபையாக இருக்குமென்று தோன்றியது. நான் அந்தச் சிலையின் பக்கத்தில் நின்றபடியே வாலிபனைப் பார்த்தேன். அவன் கன்னத்தில் கையை ஊன்றியவண்ணம் ஆழ்ந்த யோசனையோடு உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் சுமார் இருபது வயது மதிப்பிடக் கூடிய ஒரு யுவதி நின்று கொண்டிருந்தாள். அவள் அவனுடைய மனைவி போலிருக்கிறது. அவள் ஆடம்பரமான ஆடை ஆபரணங்களை அணிந்திராவிட்டாலும் பிறரை வசீகரிக்கும் தனி அழகு அவளிடம் இருந்தது. அவள்தான் அவனுடைய மனக் குழப்பத்திற்குக் காரணமான புதிரைக் கிளப்பி விட்டுவிட்டு அவனிடமிருந்து பதிலை எதிர் நோக்கி நிற்கிறாள் என்பது எளிதில் விளங்கியது.

"இந்தக் கண்ணனின் சிலை என்ன விலை?" என்றேன் நான் அவனைப் பார்த்து.

சிந்தனை சமுத்திரத்தின் அடிமட்டத்திலிருந்த அவனுக்கு என்னுடைய கேள்வி காதில் ஏறவில்லை போலிருக்கிறது. அந்தப் பெண் அவனை உசுப்பி விட்டு, "இதோ பாரு! அவங்க ஏதோ விலை விசாரிக்கிறாங்க, சொல்லு?" என்றாள். உடனே அவன் என்னைப் பார்த்து, "என்னங்க?" என்றான்.

"இந்தச் சிலை என்ன விலை?" என்றேன்.

"அதுவா, அறுபது ரூபாய்!" என்று அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டு, அலுப்படைந்தவன் போல் அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு மறுபடியும் சிந்தனையி லாழ்ந்தான்.

"அறுபது ரூபாயா!" என்று நான் பிரமிப்படைந்து நின்றேன். அரையடி உயரமுள்ள அந்தச் சிலை அறுபது ரூபாய் விலை மதிப்புள்ளதா யிருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவனுடைய வித்தையும் கைத்திறனும் எவ்வளவோ சிறந்ததாக இருக்கலாம். கலைத் திறனுக்காக ஒரு பொருளுக்கு எவ்வளவு பவுன் வேண்டுமானாலும் கொட்டிக் கொடுக்கலாம், ஆனால் உன்னதமான கலையை உணரும் இருதயம் இந்நாட்டி லில்லையே! அப்படி இருந்தாலும் கலைக்காக நூற்றுக் கணக்கில் பணத்தை அள்ளி வீசும் சக்தி ஒவ்வொருவருக்கும் இல்லையே! என்று எனக்குள் வருந்தினேன். அதற்குமேல் பேரம் பேசுவது என்னுடைய மதிப்புக்கும் அவனுடைய மதிப்புக்கும் குறைவாகப் பட்டதால் மனதில் வைத்த ஆசையை அடக்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்ப எண்ணினேன்.

பாவம், அவனுடைய மனைவிக்கு வந்த கிராக்கியை விட்டுவிட மனமில்லை போலிருக்கிறது. அவள் என்னைப் பார்த்து "நீங்க என்னதான் கொடுக்கிறீங்க?" என்றாள். நான் சிறிது தயங்கி நின்றேன்.


அந்த வாலிபன் அவன் மனைவியை அலட்சியமாகப் பார்த்துச் சிரித்துவிட்டு, "பைத்தியமே, இதென்ன? கத்தரிக்காய்க் கடையா, பேரம் பேச!" என்றான். அவனுடைய குத்தலான வார்த்தையில் சிறிது கோபமும் கலந்திருந்தது.

புதியதும், பளபளப்புள்ளதுமான சருமத்தைப்பெறுவதற்கு

பாமோலிவ் சோப்பை உபயோகியுங்கள்!

14 தினங்களில் 'பாமாலிவ்' அழகுத் திட்டம் மேனியை இன்னும் பட்டுப் போல ஆக்குவதை பரிசீலனைகள் நிரூபிக்கின்றன.

'பாமாலிவ்' சோப்பை இந்த வழியில் உபயோகித்து நீங்களும் உங்களது மேனியை இன்னமும் அழகு பெறச் செய்யுங்கள்.



முகத்தை 'பாமாலிவ்' சோப்பினுல் கழுவுங்கள். குபுகுபு என்று வரும் அதன் கிரீம்போன்ற நுரையை 60 விநாடி விடாது சருமத்தின்மேல் தடவிக் கொடுத்து மறுபடியும் முகத்தைக் கழுவுங்கள். இம்மாதிரி தினம் 3 தடவை 14 நாட்களுக்குச் செய்தால் உங்கள் மேனியும் புதிய சோபையுடன் பிரகாசிக்கும்.

பெரிய கேக் 7 அணு உள்நாட்டு வரி உள்பட

14 நாட்களில் அழகுள்ள சருமமா!

P50/1

இந்த அபூர்வமான

PEPS

சுவாசக் கோளாறு, இருமல், ஜலதோஷம் இன்ப்ளூயன்ஸா ஆகியவற்றை ஒழிக்கிறது


பெப்ஸ் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டவுடனேயே, அதிலுள்ள இனிய மருந் சத்துதுக்கள் சுவாஸத்துடன் கலந்து சுவாஸப் பைக்குள் செல்லுகிறது. அதனுல்தான் பெப்ஸ் வெகுவிரைவில் இருமலை ஒழித்து நெஞ்சுக்கும் தொண்டைக்கும் இதம் அளித்து அபாயகரமான கிருமிகளை அழித்து, சுவாசாசயக் கோளாறுகளிலிருந்து உங்களை விடுவிக்கிறது.





PEPS

மார்பு சுவாஸப்பை உபத்திரவங்களுக்கு மிகவும் இன்றியமையாத சிகிச்சை மாத்திரைகள்



வண்டி நின்றது. "வஸந்தி, ஏன் இப்படி மழையில் நனைந்து கொண்டு ஓடி வருகிறாய்? அப்பா கோபித்துக் கொள்ளப் போகிறார்!" என்று அன்புடன் கூறிய சித்தப்பா, அவளது நனைந்த தலையைத் தன் மேல் வேஷ்டியால் துடைத்தார்.

சித்தி, வஸந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு "வஸந்தி, வீட்டுக்குப் போ, அம்மா! மழையில் நனையாதே!" என்று சொன்னாள்.

"சித்தி, என்னைப் பார்க்காமலே ஊருக்குப் போகிறாயே! நீ யாரைப் பார்க்க வந்தாய்?"

"மணிப் பயலுக்கு இரண்டு நாட்களாக ஜுரம். டாக்டரிடம் காட்டுவதற்காக அழைத்துக் கொண்டு வந்தோம். இப்போது ஊருக்குப் போகிறோம். வஸந்தி, நீ திரும்பிப் போ! அப்புறம் உன் அம்மா ஏதாவது..." என்று சொல்லி முடிப்பதற்குள் மணிப்பயல், "அம்மா, ரொம்பக் குளிருகிறது. சீக்கிரம் வீட்டுக்குப் போவோமே!" என்று இருமிக் கொண்டே சின்னக் குரலில் சொன்னான்.

வஸந்தி போர்வைக்குள் சுருண்டு கிடக்கும் தன் தம்பி மணிப் பயலைக் கவலையுடன் எட்டிப் பார்த்தாள். வெடவெட வென்று நடுக்கிக் கொண்டு அவன் அம்மா மடியில் ஒடுங்கிக் கிடந்தான். வஸந்திக்கு என்னவோ போலிருந்தது.

"சித்தி! மழை இப்படிப் பெய்கிறதே! இதோடு மணியை அழைத்துக் கொண்டு போகிறீர்களே! ஜுரம் அடிக்கும் குழந்தையை மழையில் எடுத்துக் கொண்டு போகலாமா? சித்தப்பா, வண்டியைத் திருப்பச் சொல்லுங்கள். வீட்டுக்குப் போகலாம்" என்றாள் வஸந்தி.

சித்தப்பா, சித்தி முகத்தைப் பார்த்தார். சித்தி, சித்தப்பாவைப் பார்த்தாள். வஸந்தி இரண்டு பேரையும் உற்றுப் பார்த்துவிட்டு, "கொஞ்சம் இருங்கள்; வந்து விட்டேன்!" என்று கூறிவிட்டு வேகமாகத் திரும்பி வீட்டுக்குள் ஓடினாள்.

"அப்பா! மணிக்கு ஜுரம். அதோ வண்டியில் சித்தப்பாவும், சித்தியும் வந்து இருக்கிறார்கள். இந்த மழையில் மணி நனைந்தால் உடம்புக்கு ஆகுமா, அப்பா? அவர்களை நமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து மழை விட்ட பிறகு ஊருக்கு அனுப்பினால் என்ன? ஏன் அப்பா! என்ன யோசிக்கிறீர்கள்?" என்று தன் தகப்பனாரின் கையைப் பிடித்து உலுக்கினாள் வஸந்தி. என்ன சொல்லுவாரோ, 'போ, உன்னை!' என்று அதட்டுவாரோ என்ற கவலையுடன் அவள் அவரது முகத்தைக் கூர்ந்து கவனித்தாள்.

"வஸந்தி! உனக்குத் தெரிந்தது எனக்குத் தெரியவில்லை. இதோ வந்து விட்டேன்!" என்று கண்களில் உருண்டு வந்த நீர்த் துளியைத் துடைத்துக் கொண்டே குடையை எடுத்துக் கொண்டு வஸந்தியுடன் வண்டி இருக்குமிடத்துக்கு அப்பா விரைந்தார்.

வண்டி திரும்பிற்று; விரோதம் போயிற்று!

குப் போய்விட்டார் என்று கேள்விப் பட்டாள். முகத்தைத் தூக்கி உம்மென்று வைத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

காப்பி ஆறிற்று; சிந்தவில்லை. நடனம் கற்றுக்கொள்ள நேரம் ஆயிற்று; கிளம்ப வில்லை. பையில் திணித்து வைத்து இருந்த பாவாடை, சட்டை, கவுன், சல்லடம், ரிப்பன் வகையறாக்களை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் கூடம் முழுவதும் விட்டெறிந்தாள்.

" 'சித்தப்பா இன்று வருவார், அவரோடு ஊருக்குப் போகலாம். தயாராக இரு!' என்று இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலிருந்தே அப்பாவும், அம்மாவும் சேர்ந்து சொல்லிவிட்டு, அவரைச் சண்டை போட்டு விரட்டி விட்டார்களே!" என்று வஸந்தியின் வாய் முணுமுணுத்தது.

"வஸந்தி! இது எல்லாம் என்ன கூத்து?" என்றார் அப்பா.

"இப்போதிலிருந்தே இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு அசட்டுப் பிடிவாதம் பாருங்களேன்!" என்றாள் அம்மா.



வஸந்தி எதையுமே காதில்வாங்கிக்கொள்ள வில்லை. சித்தப்பாவுக்கும் அப்பாவுக்கும் எதற்காகச் சண்டை? சித்தப்பா மறுபடியும் நமது வீட்டுக்குத் திரும்பி வருவாரா, மாட்டாரா? இந்தக் கோடை விடுமுறையில் சித்தப்பா இருக்கும் கிராமத்துக்குப் போக வேண்டும் என்று 'பிளான்' போட்ட சமயத்தில் தானா சண்டை வர வேண்டும்? — இவ்வாறெல்லாம் சிந்திப்பதிலேயே அவள் நேரமெல்லாம் கழிந்தது.

அம்மாவைச் சமயம் பார்த்துக் கேட்டாள். "சித்தப்பா வீட்டுக்கு விடுமுறைக்குப் போனால்தானா? நன்றாக நடனம் ஆடக் கற்றுக் கொள். பள்ளிக்கூடம் திறப்பதற்குள் அரங்கேற்றம் செய்து விடுவோம்" என்று அவள் சொல்லிவிட்டாள். அப்பாவைக் கேட்கத் தைரியமில்லை. வஸந்திக்கு எதுவுமே ஓடவில்லை. சித்தப்பாவின் வேடிக்கையான பேச்சு, சித்தியின் இனிய சுபாவம், அந்தப் பயல் மணி இருக்கிறானே, அவனுடைய "வ... ஸ... ன்... டி!" என்ற கொச்சைக் கூப்பாடு, கிராமத்துக்கு அடுத்தாற்போல் ஓடும் சிற்றாறு—இவ்வளவையும் ரசிக்க முடியாமல் அப்பா கெடுத்து விட்டாரே என்று அவள் ஏங்கினாள்.

• • •

ஆறு மாதம் ஆயிற்று. வஸந்தியின் சித்தப்பா எட்டிப் பார்க்கவில்லை. வாரத்துக்கு ஒரு தரம் வந்து போகும் அவர், இப்படி ஆறு மாதங்களாக வர முடியாதபடி அப்படி என்ன அப்பாவுக்கும், அவருக்கும் பெருத்த இடைவெளி இருக்கும்? அவளுக்குப் புரியவில்லை. யாரைக் கேட்டாலும் வஸந்தியின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் "பேசாமல் இரு!" என்று அவளை அடக்கிப் போட்டார்கள்.

அன்று ஒரு நாள் மாலை; மழை கொட்டுக் கொட்டென்று கொட்டிற்று. இடியும், மின்னலும் தங்கள் பங்கு சோடை போகாமல் சேவை செய்தன. வஸந்தி 'ஸ்வெட்டர்' போட்டுக் கொண்டு ஜன்னல் அருகே உட்கார்ந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்துக்கு ஒரு தடவை ஜன்னல் கதவைத் திறந்து தண்ணீர் எப்படி ஓடுகிறது என்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மின்னல் பளிச்சென்று வெட்டிற்று. அந்த ஒளியில் வண்டி ஒன்று போவது தெரிந்தது. வண்டியில் சித்தப்பா, சித்தி, மணிப் பயல் எல்லோரும் நனைந்து கொண்டு போவதைப் பார்த்தாள். இடி, மின்னல், மழை எதுவுமே வஸந்திக்குப் பெரிதாகப் படவில்லை. வாசற் கதவை அவசரமாகத் திறந்தாள்.

"சித்தப்பா! சித்தி!!" என்று அலறிக் கொண்டே மழையில் நனைந்தபடி வண்டிக்குப் பின்னால் ஓடினாள்.

வண்டி திரும்பிற்று



நவீனன்

வஸந்தி வாசல் திண்ணையில் நின்று கொண்டிருந்தாள். கழுத்தில் கிடந்த முத்து மாலையை விரல் விஷமம் செய்து கொண்டிருந்தது.

வண்டி ஒன்று வந்து நின்றது; நிமிர்ந்து பார்த்தாள். சித்தப்பா இறங்கி வந்தார்.

"சித்தப்பா!" என்று கூவிச் சேதி சொல்ல உள்ளே ஓடினாள். அவள் முகத்தில் புதுப் பிரகாசமும், குஷியும் பூத்து நின்றது. எப்போது சித்தப்பா வந்தாலும் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். சித்தப்பா வந்தால் வெறுங்கையுடன் வர மாட்டார் என்று வஸந்திக்கு நன்றாகத் தெரியும். குறைந்தது அரை டஜன் சாத்துக்குடி ஆரஞ்சாவது அவருடன் விஜயம் செய்வது வழக்கம்.

இந்தத் தடவை சித்தப்பாவுடன் பலாப்பழமும் வந்தது. வஸந்திக்கு உடனே விண்டு தின்ன முடியாத பழமாக இருக்கிறதே என்று சற்று என்னமோ போலத் தான் இருந்தது. அதைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு, தட்டுத் தடுமாறி மாடியேறினாள். அத்துடன் சித்தப்பாவுடன் ஊருக்குப் புறப்படும் பரபரப்பும் அதில் இருந்தது.

அரை மணி நேரத்துக்குப் பிறகு கூடத்திலே இரைச்சல் கேட்டது. "இது என்ன போர்க் கோலம்? அப்பாவிடம் அப்படி யார் அகப்பட்டுக் கொண்டிருப்பார்கள்?" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே தடதட வென்று படி இறங்கினாள் வஸந்தி.


வந்தவள் மாடி வளைவில் பதுங்கி நின்று கவனிக்கும்படி ஆகிவிட்டது. அவள் அப்பா அப்போதுதான் வந்து இறங்கியிருந்த தன் தம்பியோடு வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். ஏகச் சத்தம்; கர்ஜனை; கூடம் அமளிப் பட்டது.

வஸந்தி கன்னத்தில் விரலைப் பதித்த படி ஒரு நிமிஷம் யோசித்தாள். "என்னத்துக்கு இப்படி அப்பா ஊரிலிருந்து வந்து இருக்கும் சித்தப்பாவிடம் சண்டை போடவேணும்? அப்படிச் சண்டை போடுவது அவசியமாக இருக்குமானல் பலாப்பழத்தை நறுக்கி எனக்குக் கொடுத்த அப்புறமாவது போடக் கூடாதா? எப்போதுமே அப்பா இப்படித்தான்! முன் கோபம் ஜாஸ்தி. படபடவென்று யாராக இருந்தாலும் பொரிந்து தள்ளிவிட்டுப் பிறகு பரம சாதுவாகி விடுவார். ஆனல் சித்தப்பா என்ன நினைக்கிறாரோ?...... ஊம், இந்த உலகத்தில் சண்டை என்று ஒன்றை யார்தான் கண்டு பிடித்திருப்பார்களோ?" என அலுத்துக் கொண்டாள் வஸந்தி. அந்தப் பிஞ்சு நெஞ்சு வாடிப்போயிற்று. இரண்டு கைகளையும் கன்னங்களுக்கு நடுவே இடுக்கிக் கொண்டு அப்படியே மாடிப் படியில் அசந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

"அப்பா! இரண்டாந்தரக் காப்பி அஸ்கா சீனி போட்டு 'எக்ஸலண்ட்'டாகத் தயாராகி விட்டது. இத்துடன் சித்தப்பாவுடன் சண்டை போடுவதை நிறுத்திவிட்டுக் காப்பி குடிக்கலாம்" என்று தனது இனிய மழலைக் குரலால் ஒலி பரப்பிக் கொண்டு குறுக்கே காப்பியுடன் ஓடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். அர்த்த புஷ்டியுடன் அம்மாவைப் பார்த்து ஜாடை காட்டினாள். அம்மாவும் திருப்பி ஜாடை காட்டி, "உஷ்!" என்று வஸந்திக்குத் தடை உத்தரவு போட்டு விட்டாள். "உனக்கு என்ன வஸந்தி! சிறிசா லட்சணமா 'கம்'மென்று இருப்பாயா? அதை விட்டுவிட்டு ... போ, மாடிக்கு! 'டான்ஸ்' வாத்தியார் வருகிற நாழிகை ஆயிற்று" என்று தன் பெண்ணிடம் காதோடு சொல்லிவிட்டு, மேலும் அந்தச் சண்டையில் கவனம் செலுத்தினாள், அவள் அம்மா. தாயார்கூட இப்படி இருக்கிறாளே என்று வஸந்திக்கு அழுகை வரப் பார்த்தது.

அன்று ஒரு நாள் தான், தன் தம்பியுடன் ஒரு புழுக்கைச் சிலேட்டுக் குச்சிக்காகச் சண்டை போட்டதும், அப்பா குடுகுடு வென்று ஓடிவந்து, 'வஸந்தி! உன் சொந்தத் தம்பியோடு சண்டை போடலாமா?' என்று கேட்டுச் சமாதானப்படுத்தி அனுப்பியதும் அவளுக்கு நினைவு வந்தது. இப்போது அப்பாவுக்கு யார் சொல்லுவது? வஸந்திக்கு யோசனையாகப் போயிற்று.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு கூடம் 'ஹோ'வென் றிருந்தது. வஸந்தி மாடிக்கு ஒரு தரம் ஏறிச் சென்று பலாப் பழத்தை முகர்ந்து பார்த்துவிட்டுப் பூனை போலக் கீழே இறங்கி வந்தாள். சித்தப்பா கோபித்துக் கொண்டு ஊருக்



காலக்ஷேபம்

நகப்பனர் (ராமுவைப் பார்த்து) :—டேய் ராமு, ஓரணுவுக்கு இரண்டு மிட்டாய்; நாலணுவுக்கு எத்தனை மிட்டாய்?

ராமு :—ஒன்பது மிட்டாய்!

நகப்பனர் :—எப்படியடா?

ராமு:—நீ நாலணு கொடேன்; நான் செட்டியார் கடையில் எட்டு மிட்டாயும் ஒரு மிட்டாய் கொசுறும் வாங்கிக் கொண்டு வருகிறேன்!

★

மனைவி:—இன்றைக்கு என்ன மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள்? ஆபீஸில் வேலை அதிகமா?

கணவன்:—இல்லை, இன்றைக்கு ஆபீஸ் பையன் தன் பாட்டி செத்துப் போய் விட்டாள் என்று சொல்லி லீவு கேட்டான். ஏற்கெனவே அவன் ஒரு சமயம் இதே காரணத்துக்காக லீவு கேட்டிருக்கிறான். ஆகையினால் இந்தத் தடவை உண்மையை அறிந்து கொள்ள நினைத்து அவனைத் தொடர்ந்தேன்.

மனைவி:—உண்மை புலப்பட்டதா? கிரிக்கெட் மாட்சுக்குப் போனானா அவன்?

கணவன்:—இல்லை; உண்மையாகவே அவன் பாட்டி இறந்துவிட்டாள்!

★

இன்ஸ்பெக்டர்:—உன்மேல் திருட்டுக் குற்றம் பதிவாகி யிருக்கிறது. மளிகைக் கடை முனுசாமிப் பிள்ளை வீட்டில் புகுந்து பெட்டியை உடைத்து ஐந்து ரூபாயும் மற்றப் பொருள்களும் நீ களவாடினையாம்.

குற்றவாளி:—ஒன்றும் இல்லீங்களே!

இன்ஸ்பெக்டர்:— என்ன, ஒன்றும் இல்லையா?

குற்றவாளி:—ஆமாங்க! அந்தப் பெட்டியில் ஐந்து ரூபாயைத் தவிர வேறு சாமான் ஒன்றும் இல்லீங்களே!

நகப்பனர் ஒரு சீசாவில் ஸர்பத் வாங்கிக் கொண்டு வந்தார். கூடவே அவரது எட்டு வயதுப் பையன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

பையன் :—அப்பா, குழந்தை ரொம்ப கனக்கிறது. நீ இதைத் தூக்கிக் கொள்; நான் சீசாவைக் கொண்டு வருகிறேன்.

அப்பா :—உம், அதெல்லாம் முடியாது. நீ சீசாவைக் கீழே போட்டு விடுவாய்!

★

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பையன்களைக் கிரிக்கெட் மாட்சைப் பற்றி வியாசம் எழுதச் சொன்னார். ராமுவுக்கு என்ன எழுதுவது என்று தெரியவில்லை. அரை மணி நேரம் யோசனை செய்தான். பிறகு பின்வருமாறு மூன்று வரிகள் எழுதினான் :

"கிரிக்கெட் மாட்சு ஆரம்பித்தது. மாட்சு ஆரம்பித்தவுடன் மழை தடதடவென்று கொட்டிற்று. ஆகையினால் மாட்சு ஒத்திவைக்கப் பட்டது!"

★

பெரியவர்:— எனக்கு வயது தொண்ணூறு ஆகிறது. ஆனாலும் எனக்கு விரோதி என்று ஒருவன் கூடக் கிடையாது!

நண்பர் :—நியாயந்தான். அது எப்படி இருக்க முடியும்? விரோதிகளெல்லாம் செத்துப் போயிருப்பார்களே?

★

"என் கவலைகளையெல்லாம் தீர்த்து வைக்கிறவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கத் தயார்!"




"நீ இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்கே போவாய்?"

"அதுதான் என் முதல் கவலை!"

ஷாலிமார் தயாரிப்புகளை ஆர்டர் செய்யும்போது எந்த வேலைக்காக என்பதை தெரிவிக்கவும்.

ஓர்
அழகு ஊட்டி
அதிககால
உழைக்கவல்ல
வர்ணப்பூச்சு



எனாமல் பெயின்டைப் போன்ற பிரகாசமுள்ள ஷாலிமார் வுட் கோட் உடனே உபயோகிக்கும் படியாக கலந்து வைக்கப்பட்டுள்ள ஓர் பெயின்ட். நீடித்த காலம் உழைக்கவல்லது. எல்லாவிதமான கட்டட உட்புற வெளிப்புற மரவேலைகளுக்கும் உகந்தது. 32 வர்ணங்களில் கிடைக்கும்.

அடித்தாற் போல் சொல்லுங்கள் ஷாலிமார் வுட் கோட்

SPK 52-TM

மர வேலைகளுக்கு பூர்த்தியளிக்கும் பெயின்ட்

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,

Post Box 136, Madras 1. Importers & Distributors for Ceylon:
Lewis Brown & Co., Ltd., Post Box 85, Colombo

"அதற்கு ஐந்நூறு ரூபாயாவது ஆகுமே! உங்கள் ஊர்ப் பிள்ளையார் பெரிய விக்கிரகமாச்சே, இந்த ஊர்ப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டிருக்கக் கூடாதா?" என்று கேலி செய்தான் பிரணதார்த்தி.

"உண்டியலில் ஒரு வேளை பத்து பவுன் இருக்குமோ, என்னவோ? அப்படியிருந்தால் ரொம்ப நல்லதாய்ப் போச்சு!" என்றாள் பங்கஜம்.

"பங்கஜம், என் உடம்பு குணமானதில் எல்லோருக்கும் சந்தோஷந்தான்! ஆனால் மனிதர்களுக்கு நோய் ஏற்படுவதும் குணமாவதும் சர்வ சாதாரணம். திடீரென்று எதிர்பாராத அதிருஷ்டம் நமக்கு ஏற்பட்டு நாம் ஆனந்தக் கடலில் தத்தளிக்கும் போதுதான் அதைத் திறப்பது பொருத்தமாயிருக்கும்."

"ஒவ்வொரு தடவையும் நாம் சந்தோஷத்தின் எல்லையைத் தொட்டுவிட்டதாக நினைத்து உண்டியல் செம்பைத் திறக்க நினைக்கிறோம். ஆனால் யோசித்துப் பார்க்கும்போது, நமது நினைப்பு தவறு என்று தெரிகிறது. இன்னும் இதைவிடச் சந்தோஷம் நம் வாழ்க்கையில் ஏற்பட முடியும்; ஏற்படப் போகிறது!" என்றாள் பங்கஜம்.

★

பங்கஜத்தின் தகப்பனாருக்கு உடம்பு சுகமில்லை என்று தகவல் வந்தது. பிரணதார்த்தியும் பங்கஜமும் அவரைப் பார்க்கச் சென்றனர். ஆனால் அவர்கள் போய்ச் சேருமுன் அவர் காலகதியடைந்து விட்டார். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. பிள்ளையில்லாத அவரது சொத்துக்களில் ஒரு பகுதி பங்கஜத்துக்குக் கிடைத்தது. ஏழைக் குமாஸ்தாவின் மனைவி திடீரென்று பணக்காரியானாள்.

ஊருக்குத் திரும்பி வந்த பிரணதார்த்தி தனக்குக் கிடைத்த அதிருஷ்டத்தைக் குறித்துப் பெருமை கொண்டான். "பங்கஜம்! உண்மையாகவே இன்று நாம் ஒரே சந்தோஷத்தில் மூழ்கியிருக்கிறோம். இந்த மாதிரி இரண்டு லட்சம் ரூபாய் உன் தகப்பனார் உனக்கு எழுதி வைப்பார் என்று நாம் எதிர்பார்த்தோமா?" என்று கூறிப்பாய்ந்து சென்று தாமிரச் செம்பைக் கையிலெடுத்தான்.

"இதை ஒரு பிரமாத அதிருஷ்டம் என்கிறீர்களா? என் அக்கா, தங்கைகள் நாலுபேருக்கும்தான் அவர் தமது சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார். அதில் நாம் மட்டும் விசேஷமாகப் பெருமைப்பட்டுக் கொள்வதற்கு ஒன்றும் இல்லையே!" என்றாள் பங்கஜம் பரபரப்புடன்.

"அப்படியானால் அம்மாவின் போக்கிஷத்தைத் தொடுவதற்கு இன்னும் வேளை வரவில்லை என்கிறாயா? ரொம்ப அழகுதான்!"

"ஆமாம், நீங்கள்தானே சொல்வீர்கள்—நமக்கு ஏற்படும் சந்தோஷம் சாதாரணமாயிருக்கக் கூடாது, ரொம்பப் பெரிதாக இருக்க வேண்டும், அதைவிட சந்தோஷம் இனிமேல் நமக்கு ஏற்பட முடியாது என்று நமக்குத் தோன்ற வேண்டும். அந்தச் சமயத்தில்தான் இதைத் திறக்கவேண்டும் என்று! நிஜமாகச் சொல்லுங்கள், இப்பொழுது நாம் அனுபவிப்பதை விடச் சந்தோஷம் நம் வாழ்க்கையில் இனி ஏற்படாது என்று நினைக்கிறீர்களா?"

"நம் வாழ்நாளில் இந்தப் பொக்கிஷத்தைத் திறக்கப் போகிறோமோ, இல்லையோ?"

"திறக்காவிட்டால் என்ன? குழந்தை ராஜூ பெரியவனானதும் இதை அவனிடம் கொடுத்து விட்டால் போயிற்று. அதை நாம் திறக்க முடியாவிட்டால் என்ன? சீக்கிரத்தில் ஏதோ பெரிய சந்தோஷ சம்பவம் நம் வீட்டில் ஏற்படப் போகிறது என்ற நம்பிக்கையை அது சதா கொடுத்துக் கொண்டிருக்கிற தல்லவா? இதைவிட வேறு என்ன வேண்டும்?" என்றாள் பங்கஜம் உணர்ச்சி பொங்க.

"ஆமாம், பங்கஜம்! இது ராஜூவுக்குச் சேர வேண்டியதுதான்!" என்றான் பிரணதார்த்தி.



பையன் (படிக்கிறான்):— இந்தக் காலத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏன் வருகிறது என்று கேட்டால்.........

குளிப்பவர்:—ஏலே, கிட்டு! 'இங்கே படிக்காதே, வேறே எங்கேயாவது போய்த் தொலை!' என்று எத்தனை தடவை உனக்குச் சொல்லுவது?

"ஆமாம், இது உண்டியல்தான். உள்ளே இருப்பது பணமோ, பவுனோ, அல்லது வைரமோ — என்னவென்று எனக்குத் தெரியாது. அம்மாவும் சொல்லவில்லை. அம்மாவிடம் இந்த மாதிரி ஒன்று இருந்ததே எனக்குத் தெரியாது. ஆனால் அவள் காலமாவதற்கு முன் என்னைக் கூப்பிட்டு, "பிரணதார்த்தி! நீ ரொம்ப சந்தோஷமாக இருக்கப் போகிறாய். அப்படிச் சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் இந்தச் செம்பைத் திறந்து, அதிலுள்ளதை உன் இஷ்டம் போல் உபயோகித்துக் கொள்" என்று சொன்னாள். அம்மா சொன்னது வீண் போகாது, பங்கஜம்! நிச்சயம் நாம் எவ்வளவோ ஆனந்தமாக இருக்கப் போகிறோம். அப்பொழுது இதைத் திறந்து, இதில் உள்ளதை நாம் உபயோகப் படுத்திக் கொள்ளலாம்" என்றான் பிரணதார்த்தி.

பிரதிதினமும் அவன் தாயாரின் படத்துக்குச் சந்தனமும் புஷ்பமும் சாத்தும் போது, அந்தச் சிறு செம்புக்கும் சந்தனம் சாத்துவான். அவன் வாழ்க்கையில் ஏற்படப்போகும் மகத்தான சந்தோஷ சம்பவத்தை அந்தச் செம்பு ஞாபகப் படுத்திக் கொண்டே இருந்தது. அதைப் பார்க்கும்போது பங்கஜத்தின் கண்களில் ஒரு பிரகாசமும் தோன்றியது. அதில் என்னதான் இருக்கும் என்று அவள் மனம் என்னென்னவோ எண்ணியது.

அவள் வாழ்க்கையில் எவ்விதக் குறைவும் இல்லை. அவள் தந்தை நல்ல ஜீவனம் உள்ளவர். அவரது குடும்பத்தினர் அடிக்கடி சென்னைக்கு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டுச் சென்றனர். மாப்பிள்ளைக்குக் குறைவான சம்பளம் என்பதை அறிந்து, பெண்ணுக்கு வேண்டிய பொருளுதவியும் செய்து வந்தார், அவள் தகப்பனார்.

★

"நாம்தான் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறோமே, அந்த உண்டியலைத் திறந்து பார்ப்போம்!" என்றாள் பங்கஜம் ஒரு நாள்.

"அவசரப்படாதே! நாம் இப்பொழுது இருப்பதை விட எத்தனையோ மடங்கு அதிக சந்தோஷத்துடன் இருக்கப் போகிறோம். அந்தச் சமயத்தில்தான் நாம் அதை உபயோகித்துக் கொள்ள வேண்டும்" என்றான் பிரணதார்த்தி.

அவன் வாழ்க்கையில் எதிர்பாராத அதிருஷ்டம் ஏற்பட்டது. ஒரு நாள் ஆபீஸிலிருந்து வரும்போது, "பங்கஜம்!" என்று உற்சாகத்துடன் கூப்பிட்டுக் கொண்டே வந்தான் பிரணதார்த்தி. "என்ன?" என்று ஆவலுடன் விசாரித்தாள் பங்கஜம்.

"எங்கள் காரியாலயத்தில் வருஷ முடிவுக் கணக்கைப் பார்த்துவிட்டு ஆறு மாதச் சம்பளம் போனஸாகக் கொடுத்திருக்கிறார்கள். இதோ பார்!" என்று அறுநூறு ரூபாய் செக்கை அவளிடம் காட்டினான் பிரணதார்த்தி.

"அம்மா சொன்னது வீண் போகவில்லை. இந்த சந்தோஷத்தைக் கொண்டாட நாம் அந்த உண்டியலை இன்று திறந்துவிடுவோம். அதில் ரூபாய் பத்து அல்லது பதினைந்து இருந்தால் அதிகம். அதைக் கொண்டு இன்று கபாலீசுவரர் கோவிலுக்குப் போய் அபிஷேகம் செய்துவிட்டு வரலாம்" என்றாள் பங்கஜம்.

"எப்பொழுதும் உனக்கு அவசரம் தான்! போனஸ் கிடைப்பது இந்தக் காலத்தில் ஒரு பெரிய காரியமா? அபிஷேகம் செய்ய அந்தப் பணத்தைத்தானா எடுக்கவேண்டும்? இதை விட சந்தோஷ சம்பவம் நம் வாழ்க்கையில் ஏற்படாதா? அப்போதுதான் அதைத் தொட வேண்டும்" என்றான் பிரணதார்த்தி.

ஏமாந்து போனாள் பங்கஜம்.



அவன் புக்ககம் வந்து இரண்டு வருஷங்களாயின. தன் வாழ்க்கையில் மிக முப்போகும் பெரிய சந்தோஷ சம்பவத்தை அவன் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் காத்திருந்தான். இதனால் தன் மனைவியின் தேக நலம் பாதிக்கப் பட்டிருப்பதைக் கண்டு முதலில் பிரணதார்த்தி பயந்து விட்டான். ஆனால் பயப்படுவதற்கு ஒன்றுமேயில்லை என்றும், இன்னும் சில மாதங்களில் தான் தகப்பனாராகப் போவதையும் அறிந்து கொண்டான். பெண்ணுக்குத் துணையாக அவள் தாயாரும் ஊரிலிருந்து வந்து விட்டாள்.

அந்த நான்கு தினங்களும் பங்கஜம் தாங்கமுடியாத வேதனைப் பட்டாள். 'என்ன ஆகுமோ?' என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு காத்திருந்தான் பிரணதார்த்தி. ஆனால், பூஜைப் பெட்டியில் இருந்த தாமிரச் செம்பு அவனுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்தது. "பயமில்லை; நீ எதிர்பார்க்கும் குதூகல வேளை வந்து விட்டது!" என்று அது ஆறுதல் அளிப்பதைப் போலிருந்தது. கடைசியில் ஆண் குழந்தை பிறந்தது.

பெற்றோர்களின் குதூகலத்தைச் சொல்லவா வேண்டும்? பங்கஜம் எழுந்து நடமாடும் நிலையை அடைந்தாள். பிரணதார்த்தி கையில் குழந்தையை வைத்துக் கொண்டு அது பொக்கைவாயைத் திறந்து சிரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"பங்கஜம்! நமது வாழ்க்கையிலேயே இதைவிட சந்தோஷமான வேளை இருக்க முடியுமா? இப்பொழுது அந்த உண்டியலை எடுக்கப் போகிறேன். அதிலுள்ள பணத்தை எடுத்து ஒரு சின்ன 'பென்டண்ட்' செய்து, அதில் அம்மா படத்தை வைத்துப் பயல் கழுத்தில் போடப்போகிறேன்!" என்றான்.

பங்கஜம் ஒரு நிமிஷம் யோசனை செய்தாள். அந்தத் தாமிரச் செம்பை எடுப்பதற்காகப் பூஜைப் பெட்டிக்கு அருகில் சென்ற கணவனைப் பார்த்து, "வேண்டாம், வேண்டாம். ஒரு நிமிஷம் இருங்கள்! இது சந்தோஷமான வேளை தான்; நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால்......" என்று இழுத்தாள்.

"ஆனால்... என்ன பங்கஜம்?"

"இது தலைச்சன்; இன்னும் நமக்கு..." என்று ஏதோ கூற வந்தவள் வெட்கத்தினால் தயங்கினாள்.

"ஆமாம், நமக்கு இன்னும் எத்தனையோ குழந்தைகள் பிறக்கலாம்" என்று அவள் கூறவந்ததைப் பூர்த்தி செய்தான் பிரணதார்த்தி.

"இந்த மாதிரி சந்தோஷ சமாசாரம் இதுவரை நடந்திருக்காது, இனிமேலும் நடக்கமுடியாது—என்று நாம் சொல்லக் கூடிய வேளையில்தான் அந்த உண்டியலை உடைக்க வேண்டும். அப்பொழுதுதான் அம்மாவுக்குத் திருப்தியாக இருக்கும்" என்றாள் பங்கஜம்.

"இப்பொழுது நாம் அடையும் சந்தோஷம் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கும் என்கிறாயா? இது ஒரு பிரமாதமில்லை என்கிறாயா? அப்படியானால் உண்டியல் அப்படியே இருக்கட்டும்!' என்று கூறிவிட்டுச் சிரித்தான் பிரணதார்த்தி.

★

ஒரு நாள் மாலை பிரணதார்த்தி தலையை வலிக்கிறது என்று சொல்லிக் கொண்டு ஆபீஸிலிருந்து வந்தான். டாக்டரை வரவழைத்துக் காண்பித்தாள் பங்கஜம். ஆரம்பத்தில், சாதாரண காய்ச்சல் என்றுதான் அவர் சொன்னார். ஆனால் கடைசியில் நிமோனியா ஜுரம் கண்டிருப்பதாக அவர் கூறியதும், அவள் துடிதுடித்துப் போனாள். பெற்றோர்களை வரவழைத்தாள். இரவும் பகலும் கணவனருகிலேயே இருந்து சிசுருஷை செய்தாள். அன்ன ஆகாரமில்லாமல் ஜுரவேகத்தில் பிதற்றும் கணவனின் உயிரைக் காப்பாற்றி மாங்கல்யப் பிச்சை கொடுக்க வேண்டுமென்று இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்தாள். உடலையும் அவள் உள்ளத்தையும் வாட்டிய அந்தத் துன்ப தினங்களில் தாமிரச் செம்பு அவளுக்கு நம்பிக்கை ஊட்டியது. "கணவன் பிழைத்து விடுவான். அந்த இன்ப வேளை இதோ வந்து விட்டது!" என்று அது கூறுவதுபோல் இருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாகப் பிரணதார்த்தியின் பிதற்றல் நின்றது. கண்ணை விழித்துப் பார்த்தான். இழந்த பிரக்ஞையும் மீண்டும் திரும்பியது.

டாக்டர் தெர்மாமீடரை வைத்துப் பார்த்துவிட்டு, "இனிமேல் பயமில்லை" என்று கூறியபோதுதான் பங்கஜத்துக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அவளைப் பெற்றவர்கள் வயிற்றில் பாலை வார்த்ததுபோல் இருந்தது.

உடம்பு முற்றிலும் குணமாகிப் பிரணதார்த்தி பழைய நிலையை அடைந்தான். "உங்கள் உடம்பு குணமானதை விட என் வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொடுக்கும் வேறு சம்பவம் இருக்க முடியுமா? எங்கள் ஊர்க் கோயிலிலுள்ள பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசம் செய்து போடுவதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் பங்கஜம்.



எல்லை எது?

வி.எஸ்.ஆர்.

பங்கஜத்துக்குக் கல்யாணமாயிற்று. தனிக் குடித்தனம் செய்வதற்காக அவள் சென்னைக்கு வந்து சேர்ந்தாள். அவள் கணவன் பிரணதார்த்தி சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன். சில வருஷங்களுக்கு முன் தாயையும் இழந்தபடியால் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு காலம் தள்ளி வந்தான்.

பங்கஜத்தின் தகப்பனாருக்குச் சென்னையில் ஒரு சிநேகிதர் இருந்தார். மாமனார் சிபார்சின் பேரில் அவருடைய வீட்டிலேயே இரண்டு அறைகள் உள்ள ஒரு சிறிய 'போர்ஷன்' பிரணதார்த்திக்குக் கிடைத்தது. அதுவரை தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் வைத்துப் பூட்டியிருந்த வீட்டுச் சாமான்களையெல்லாம் பிரணதார்த்தி புது வீட்டுக்குக் கொண்டு வந்தான். சாமான்களை எடுத்து வைப்பதில் பங்கஜமும் பிரணதார்த்தியும் ஈடுபட்டனர்.

சுற்றிக் கட்டப்பட்டிருந்த துணிகளை அகற்றிவிட்டு, ஒரு பெரிய படத்தை வெளியில் எடுத்தான் பிரணதார்த்தி. "இதுதான் என் தாயாரின் படம்" என்றான் அவன். பங்கஜம் ஸ்தம்பித்து நின்றாள். அது சுமார் ஐம்பது வயதுள்ள பாட்டியின் முகம். எதிரிலுள்ளவர்களைப் பார்த்துப் புன்னகை செய்வது போல் இருந்தது. அந்த உருவம். அவனது கண்களில் கனிவும் அருளும் ததும்பி நின்றன.

"பாவம், அம்மா நம் கல்யாணத்தைப் பார்க்காமல் போய்விட்டாள்" என்று துக்கத்துடன்கூறி,பிரணதார்த்தி அதைப் பக்தி சிரத்தையுடன் துடைத்தான்.

"அம்மாவைப் பார்த்தாலே கையெடுத்துக் கும்பிடவேண்டும் என்று தோன்றுகிறது. அவருக்குச் சிசுருஷை செய்ய நான் கொடுத்து வைக்கவில்லை" என்றாள் பங்கஜம்.

"ஒருவேளை அவள் இல்லாததால் சொல்கிறாயோ!" என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டு, "நான் நல்ல நிலைமையிலிருந்து பார்த்து விட்டுப் போக வேண்டுமென்று அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்" என்று கூறிக் கொண்டே, பிரணதார்த்தி படத்தைச் சுவரில் மாட்டினான்.

பூஜைப் பெட்டியிலிருந்து தாமிரத்தினால் செய்த ஒரு சிறு செம்பை எடுத்தான் பிரணதார்த்தி கங்கா தீர்த்தம் வைத்திருக்கும் செம்புபோல் காணப் பட்டது. அதன் வாய் மூடியிருந்தது. அதன் மீது சந்தனம், குங்குமம் சாத்தப் பட்டிருந்தது.

"இது என்ன?" என்றாள் பங்கஜம்.

"அம்மா விட்டுப்போன பெரிய பொக்கிஷம் இது!" என்று கூறி அதைத் துடைத்து வைத்தான் பிரணதார்த்தி.

"பொக்கிஷமா!" என்றாள் பங்கஜம்.

அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், "இந்தச் செம்பைத் தேய்த்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. இதைக் கொஞ்சம் புளி போட்டுத் தேய்த்து வைக்கிறாயா?" என்றான் அவள் கணவன்.

"இதோ!" என்று அந்தச் சின்னஞ்சிறு செம்பை எடுத்துக் கொண்டு குழாயடிக்கு ஓடினாள் பங்கஜம்.

அந்தச் செம்பு சற்றே கனத்தது. தேய்க்கும்போதும், அப்படியும் இப்படியும் ஆட்டும்போதும் எவ்விதச் சத்தமும் இல்லை. பளபளவென்று மின்னும் செம்பைத் துணியைப் போட்டுத் துடைத்துக் கொண்டே திரும்பி வரும்போது பூஜைப் பெட்டியில் இருந்த சாளக்கிராமங்களைப் பிரணதார்த்தி பட்டினால் துடைத்து வைத்துக் கொண்டிருந்தான்.


"இந்தச் செம்பு ஈயக் குண்டு மாதிரி கனக்கிறது; இது உண்டியல் என்று நினைக்கிறேன்!" என்றாள் பங்கஜம்.



துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
சன்லைட் சோப்பில் தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 122-50 TM

ஒரு
தொடர் கதை!



கொண்டு, "நடனராணி, உன்னுடைய காதலில் கட்டுண்டு மயங்கிக் கண் இழந்த குருடனைப் போலக் காரியங்கள் செய்தேனே, என் புத்தியைச் செருப்பால்தான் அடித்துக் கொள்ள வேண்டும்!" என்றான்.

"காமப் புழுவே! உனக்குக் காதலைப்பற்றி என்ன தெரியும்? நீ உனக்காக உயிர் வாழ்கிறாய்! நான் என்னும் அகந்தைக்கு இலக்கானவன் நீ! அகங்காரத்துக்கு இருப்பிடமானவன் நீ! உனக்குக் காதலைப்பற்றி என்ன தெரியும்? காதலுக்கு ஆதாரம் தியாகம். தியாகம் இல்லையேல் காதல் இல்லை. தன்னலத் தியாகம்தான் காதலுக்கு மிக முக்கியமான அங்கம். அகந்தையை அறவே வெறுத்து அடியோடு ஒழிப்பதுதான் காதல். காதல் வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் தன்னலத் தியாகம் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆத்ம சமர்ப்பணம் செய்து கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். உன் தவமும், உன் அறிவும், உன் சாதனையும் உன் உபாஸனையும் எல்லாம் வீண் பிரமை; கலைக்கு உதவாதவை. உண்மைக்கும் அவற்றுக்கும் வெகு தூரம். உனக்கு உன் திருப்தி ஒன்றேதான் குறி. பிறர் எக்கேடு கெட்டுப் போனாலும் உனக்கு அக்கறை இல்லை. நீ கிரஹஸ்தாசிரமத்தில் உள்ள சில சிக்கல்களைக் கண்டு அஞ்சி, கபட சந்நியாசி வேஷம் பூண்டு, உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவி ஏமாற்றப் பார்க்கிறாய்; உலகத்தை வெறுப்பதாக பாவனை செய்கிறாய்! இதுதான் உன் [illegible]லை. உன் காமப் பசியைத் தணித்துக் கொள்ளுவதற்க[illegible] அபலையான என்னை ஏமாற்றத் துணிந்தாயே, உன் நெஞ்சழுத்தத்தை என்ன வென்பது? அது மட்டுமா? இவ்வளவு நீச் செயல்களும் செய்து விட்டுப் பரிசுத்தமான காதலின் பெயரைச் சந்திக்கு இழுத்து அதைக் களங்கப் படுத்த முன் வருகிறாயே, உனக்கு வெட்கமாயில்லை?" என்று கேட்டாள் சித்திரலேகா.

குமாரகிரியினால் அதற்கு மேல் அவளுடைய அந்த அவமானச் சொற்களைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவன் திரும்பி நின்று அவளை விறைப்பாகப் பார்த்தான். "நடனராணி! போ, இப்பொழுதே, இங்கிருந்து போய் விடு! எனக்கு நீ இங்கே இருந்துதான் ஆகவேண்டும் என்பதில்லை. உன்னால் எனக்கு ஒரு காரியமும் ஆக வேண்டியதில்லை. போ! நீ என்னை ஆழக்குழி பறித்துக் கீழே தள்ளினாய்! நீயே தான் மறுபடியும் என்னை உயர்த்தி விட்டுக் கொண்டிருக்கிறாய். நீ என்னைத் தோற்க அடித்தாய். நானும் உன்னைத் தோற்க அடித்தேன். நீ எனக்கு உபதேசம் செய்ய வந்துவிட்டாயே! முதலில் நீ உன்னையே பார்த்துக் கொள். உன் முகத்திலே தோன்றும் மிருகத் தன்மையின் பிரதிபிம்பத்தைக் காண உனக்குத் திறன் இல்லை என்பதை நான் நன்கு அறிவேன். இது உன் சாபக் கேடு. போ! நீ உன்னுடன் கூடவே உன்னுடைய அந்தக் களங்கத்தையும் எடுத்துப் போ! போ! போ! என் கண் முன் நிற்காதே, போ!" என்று உரக்கக் கூவினான்.

குமாரகிரியின் உடல் முழுவதும் கோபாவேசத்தில் 'வெட வெட'வென்று நடுங்கியது. அடுத்த கணம் அவன் குடிசையிலிருந்து புறப்பட்டு வெகு வேகமாக வெளியே சென்று விட்டான். (தொடரும்)

கல்யாணம் செய்து கொள்ளவும் விரும்புகிறான்" என்றான் விசாலதேவன்.

"என்ன?" என்று கேட்ட சித்திரலேகாவுக்கு ஒரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. "சுவேதாங்கன் யசோதராவைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறானா? பீஜகுப்தனுக்கும் யசோதராவுக்கும் திருமணம் ஆகியிருக்கும் என்றல்லவா நான் எண்ணினேன்!" என்றாள்.

இதைக் கேட்ட விசாலதேவனுக்கு வியப்பு மேலிட்டது. "பீஜகுப்த மன்னருக்கும் யசோதராவுக்கும் கல்யாணம் ஆகியிருக்கும் என்று எப்படி எண்ணினீர்கள்? தாங்கள் நினைத்தது போல பீஜகுப்த மன்னர் யசோதராவினிடம் தம் மனதைப் பறிகொடுத்தது என்னவோ உண்மைதான். இவ்விஷயம் சுவேதாங்கன் சொல்லி எனக்குத் தெரியவந்தது. ஆனால் பீஜகுப்த மன்னர் யசோதராவை மணந்து கொள்ள ஒருகாலும் சம்மதிக்கமாட்டார் என்ற பரிபூரண நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும், ஏனெனில் அவருக்குத் தங்கள் மீது அன்றிருந்த அன்பு இன்றுவரை இம்மியளவும் குறையவில்லை என்றும் சுவேதாங்கன் என்னிடம் சொன்னானே" என்றான்.

சித்திரலேகா எழுந்து நின்றாள். "வந்தனம், விசாலதேவா! உன்னிடம் நான் இன்று அளவுக்கு மீறிக் கசப்பாகவும் கடுமையாகவும் பேசிவிட்டேன். அதற்காக மன்னிப்புக் கோருகிறேன். இன்றைக்கே நான் இங்கிருந்து புறப்பட்டுப் போய் விடுவேன். இது நிச்சயம். என் சொல்லைத் தாராளமாக நீ நம்பலாம்" என்றாள்.

அடுத்த கணம் அவள் 'விடு விடு' என்று நேரே குடிசைக்குள் நுழைந்தாள். விசாலதேவனுக்குச் சித்திரலேகாவின் காரியம் ஒன்றும் பிடிபடவும் இல்லை; சரியாகப் புலனாகவும் இல்லை. ஆகவே அவன், "அப்பப்பா! இவள் ஒரு விசித்திரப் பிறவி!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

குமாரகிரி அப்பொழுது படுத்தபடியே சித்திரலேகாவைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் மனம் என்னவெல்லாமோ எண்ணி அலைபாய்ந்து கொண்டிருந்தது; சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. சித்திரலேகாவைக் கண்டதும் அவன் வெறி பிடித்தவனைப் போல எழுந்து அவளருகில் ஓடிவந்தான். "என் அன்பே! ஆருயிரே! உள்ளத்தரசியே! நீ இவ்வளவு



நேரம் எங்கு சென்று விட்டாய்? வா! ராணி, வா!" என்று சொல்லிக் கொண்டே அவளைப் பிடிக்கப் போனான். ஆனால் சித்திரலேகாவின் விழிகளுடன் அவனுடைய விழிகள் கலந்தது தான் தாமதம்; அவனுக்கு உண்டாகியிருந்த வெறி ஒரு கணத்தில் அடங்கி' ஆய்ந்து ஓய்ந்து விட்டது. அவன் அப்படியே பிரமித்துத் திக்பிரமை பிடித்தவன் போல நின்றான். சித்திரலேகாவின் கண்கள் அக்கினிப் பிழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. அவளுடைய கண்களிலே அப்பொழுது வெறுப்பு, குரோதம், வருத்தம், கோபம், தாபம் முதலிய பற்பல பாவங்களும் ஒருமிக்கத் தோன்றின. அவள் கொதித்தெழுந்து, "அட நீசனே! பொய்யனே! மிருகமே! தூர விலகி நில்! என் கிட்டே நெருங்காதே!" என்று கத்தினாள்.

குமாரகிரி நிலைகலங்கிப் பின் நகர்ந்து விட்டான். சித்திரலேகா அதே கடுமை தாண்டவமாடும் குரலில், "அட காமப் பித்தனே! என்னை ஏமாற்றினாயே, பாவி! பொய் சொல்லித் திரியும் பேயனே! உன் தவம் அனைத்தும் பலனற்று நசித்துப் போகட்டும். நீ யுகயுகாந்திரங்களுக்கும் நரகத்தில் வீழ்ந்து அழுகி வாடி மடிவாயாக!— நான் போய் வருகிறேன். இனி உன்னால் என்னை தடுத்து நிறுத்த முடியாது!" என்று சீறி விரைந்தாள்.

குமாரகிரி எப்படியோ தன் உள்ளத்தில் அசாத்தியத் துணிச்சலை வரவழைத்துக்

மாளிகைக்குப் போய் வரப்போகிறேன். என்கூடப் படித்தவனும், எனது குருகுல வாசத்துத் தோழனும் எனக்குச் சகோதரனைப் போன்றவனுமான சுவேதாங்கனைச் சந்தித்துப் பேசி வருவதற்காகவாவது நான் கட்டாயம் போய் வரத்தான் போகிறேன். அம்மணி! நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; வேண்டிக் கொள்கிறேன். தாங்கள் இன்னுமொரு முறை தீர ஆலோசித்துப் பார்க்க வேண்டும். எங்கள் மீது கருணை புரியவேண்டும்!" என்று கெஞ்சாத தோஷமாகக் கெஞ்சினான் விசாலதேவன்.

அதைக் கேட்டதும் சித்திரலேகா 'கடகட' வென்று நகைத்தாள். "கருணை புரிய வேண்டுமா? எதற்காகக் கருணை புரிய வேண்டும்? யார் மீது கருணை புரிய வேண்டும்? இப்படியெல்லாம் 'கருணை புரிய வேண்டும், கருணை புரிய வேண்டும்' என்று யாரைப் பார்த்துக் கேட்கிறாய்? விசாலதேவா! கொலையாளியிடம் கருணையை எதிர்பார்க்க முடியுமா? அழித்தல் தொழில் புரிபவனிடம் ஆக்கல் தொழிலை மேற்கொள்ளச் சொல்லுகிறாயே, அது எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா? சற்று யோசித்துப் பார். நீ சரியான இடத்தில் கேட்காமல் தவறான இடத்தில் கேட்கிறாய் என்பது உனக்குத் தானாகவே தெரிய வரும். விசாலதேவா! நீ கேட்பது சரியான இடம்தானா? சற்றுச் சிந்தித்துப் பார்!" என்றாள். உடனே அவள் அங்கிருந்து வெகு வேகமாக வெளியே சென்று விட்டாள்.



நகரத்துக்குச் சென்றிருந்த விசாலதேவன் திரும்பிவரும் பொழுது பகல் பதினைந்து நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது. 'விசாலதேவன் எப்பொழுது வருவான், எப்பொழுது வருவான்?' என்று சித்திரலேகா வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு சொன்ன பிறகும், தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்த பிறகும் கூட அவள் பீஜகுப்தனைப் பற்றி அறிந்துகொள்ள ஆவலாயிருந்தாள். விசாலதேவன் திரும்பி வரும் பொழுது, சித்திரலேகா குடிசைக்கு வெளியே இருந்த ஆலமரத்து நிழலில் படுத்திருந்தாள். விசாலதேவனைக் கண்டதும் அவள் சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

விசாலதேவன் நேரே சித்திரலேகாவிடம்தான் வந்தான். வந்ததும் வாராதது மாக அவன் சித்திரலேகாவைப் பார்த்து, "அம்மணி! நீங்கள் விரும்பிக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நானே சொல்லி விடுகிறேன். நான் நகரத்துக்குப் போயிருந்தேன். பீஜகுப்த மன்னரைச் சந்திக்கவில்லை. சுவேதாங்கனை மட்டும் தான் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தேன். நான் அங்கே அதிக நேரம் தங்கவும் இல்லை. ஏனென்றால் நான் போனபொழுது சுவேதாங்கன் மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயரின் மாளிகைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். நானும் அவன் கூடப் பேசிக்கொண்டே அவருடைய மாளிகை வரை போனேன். அதற்குப் பின் அவன் அப்படியே அவருடைய மாளிகைக்குள் நுழைந்துவிட்டான். நான் திரும்பி வந்து விட்டேன்" என்றான்.

"ஆமாம், சுவேதாங்கன் என்னைப் பற்றி உன்னிடம் ஏதாவது கேட்டானா?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"ஓ, கேட்டானே! தங்களுடைய தேக நிலைமையைப் பற்றியும் க்ஷேம சமாசாரத்தைப்பற்றியும் விசாரித்தான். அவன் ஏதோ அவசரக் காரியமாகப் போய்கொண்டிருந்தான். இல்லாவிட்டால் இங்கே உங்களைப் பார்த்துப் போவதற்காகக் கூட வந்திருப்பான். அது போகட்டும், இன்னொரு விஷயம் சொல்லட்டுமா? அதைக் கேட்டால் உங்களுக்கு ஒரு வேளை ஆச்சரியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். சுவேதாங்கன் யசோதரையைக் காதலிக்கிறான். அவனைக்

விசாலதேவன் சித்திரலேகாவை ஊன்றிக் கவனித்தான். பிறகு அவளை நோக்கி, "அம்மணி! தாங்கள் ஒரு விசித்திரப் பிறவி. தங்களைப் புரிந்து கொள்ளுவது மிகவும் கடினம். இப்பொழுது தான், அன்றைக்கு ஒரு நாள், தாங்கள் இவ்விடத்தை விட்டுப் பீஜகுப்த மன்னரிடம் போய்விட வேண்டும் என்று ஆவலாய்ச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் இன்றைக்கோ..." என்று வாக்கியத்தை முடிக்காமலேயே நிறுத்தினான்.

அதைக் கேட்டதும் சித்திரலேகாவின் முகம் 'குப்'பென்று சிவந்தது. "ஆமாம், அன்றைக்கு என்னவோ போய்விடவேண்டும் என்று தோன்றியது. ஆனால் இன்றைக்குப் போக வேண்டும் என்று தோன்றவில்லை. மனம் ஒரு நிலையற்றது தானே? ஒரு வேளை இருந்தாற்போல இன்னொரு வேளையும் இருக்கும் என்று சொல்ல முடியுமா?... அதுபோகட்டும்; இன்னொரு விஷயம். பிறருடைய சொந்த வாழ்க்கையில் இவ்வளவு ஆதாரம் காட்டுவது எவ்வளவு தூரம் உசிதமானது என்பதைப் பற்றி நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தது உண்டா? நீ என் வாழ்க்கையில் இவ்வளவு தூரம் ஆதாரம் காட்டுவது நியாயம் தானா?" என்று கேட்டாள்.



அதைக் கேட்டதும் விசாலதேவன் தலை கவிழ்ந்து விட்டான். அப்புறம் அவனுக்கு தலை தூக்கத் தைரியம் எழவில்லை. அவன் குனிந்த தலை நிமிராமல், மிக மிகத் தாழ்ந்த குரலில், "அம்மணி! தாங்கள் சொல்லுவது மிகவும் நியாயம். ஆனால் ஒன்று; நான் என் குருநாதருடைய வாழ்க்கையிலிருந்து படிப்பினை பெற வேண்டியவன். அவருடைய வாழ்க்கையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கடைப்பிடிக்க வேண்டியவன். தாங்களும் குருநாதரிடம் தீக்ஷை பெறும் நோக்கத்துடன் சிஷ்யை ஆக வந்திருக்கிறீர்கள்; அவருடன் நெருங்கிப் பழகுகிறீர்கள். நான் தங்களுடைய வாழ்க்கையில் அதிக ஈடுபாடும் ஆதாரமும் காட்டவில்லை. அப்படிக் காட்டுகிறேன் என்றாலும் நான் என் குருநாதருடைய வாழ்க்கையில் அதிக ஈடுபாடும் ஆதாரமும் காட்டுகிறேன் என்று தான் அதற்கு அர்த்தம் கொள்ள வேண்டும். ஒரு மாணவன் தன் குருநாதருடைய வாழ்க்கையில் ஆதாரம் காட்டுவதிலே தவறு என்ன இருக்கிறது? அம்மாதிரி அவன் ஆதாரம் காட்டுவது இயல்புதானே? தேவி சித்திரலேகா! தாங்கள் இங்கே இருப்பதால்தான் இந்தக் குடிசையின் புனிதமும் அதனால் ஏற்படும் அமைதியும் குலைந்து போகின்றன. இவ்விஷயத்தைத் தாங்கள் நன்கு அறிவீர்கள் என்றே எண்ணுகிறேன். இந்த ஆசிரமம் ஒரு குலத்துக்குச் சமமானது. இங்கே உள்ள ஒவ்வொருவனுக்கும் மற்றவனுடைய காரியங்கள் உசிதமானவைதானா அல்லது உசிதமற்றவையா என்று ஆராய்ந்து பார்க்க உரிமை உண்டு. ஆராய்ந்து பார்ப்பதோடு மட்டும் அந்த உரிமை நின்றுவிடவில்லை. அது தீமையானதாக இருந்தால், தீங்கிழைக்கக் கூடியதாக இருந்தால் அதைக் குறுக்கிட்டுத் தடுக்கவும் உரிமை உண்டு. இதைத் தயவு செய்து தாங்கள் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்" என்றான்.

"நீ சொல்லும் இந்த விஷயத்தை நான் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்ற வலுக்கட்டாயம் இல்லை!" என்று அலட்சியமாகப் பதில் அளித்தாள் சித்திரலேகா.

"இல்லாவிட்டாலும் பாதகமில்லை. எப்படியும் இன்று நான் பீஜகுப்த மன்னருடைய

தெரிவித்தான். பிறகு “அம்மணி! தங்கள் முகம் இவ்வளவு வாட்ட முற்றிருக்கக் காரணம் என்ன?” என்று கேட்டான்.

“இரவு முழுவதும் நான் என்னவெல்லாமோ பயங்கரக் கனவுகள் கண்டேன்” என்று சொல்ல ஆரம்பித்த சித்திரலேகா இலேசாகப் புன்முறுவல் பூத்தாள். பிறகு புன்முறுவல் பூத்தவாறே, “அந்தக் கனவுகள் தான் என்னை வாட்டி வதக்கி இப்படி வாட்டமுறச் செய்து விட்டன” என்றும் சொன்னாள்.

“இன்று இவ்வளவு நேரமாகியும் குருதேவர் குடிசைக்குள்ளிருந்து வெளியே வரக் காணோமே, ஏன்?” என்று கேட்டான் விசாலதேவன்.

“அவர் இன்னும் சமாதியில் ஆழ்ந்திருக்கிறார்!”

“என்ன? குருதேவர் இன்னும் சமாதியில் ஆழ்ந்திருக்கிறாரா?” என்று விசாலதேவன் வியப்புத் தாண்டவமாடக் கேட்டான். பிறகு சிறிது நேரம் வரை மௌனமாக யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

“ஆச்சரியமாயிருக்கிறதே நீங்கள் சொல்லுவது! இதுவரை குருதேவர் இம்மாதிரி தன் வாழ்க்கை நியமங்களை மீறியதே கிடையாதே! இப்படி அவர் மீறியிருப்பது இதுதான் முதல் தடவை!” என்றான்.


பிறகு இருவரும் வெகு நேரம் வரை ஒருவருக்கொருவர் ஒன்றுமே பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். எவ்வளவு நேரம் தான் பேசாமலே உட்கார்ந்திருக்க முடியும்? விசாலதேவன் மௌனத்தைக் கலைத்து, “தேவி சித்திரலேகா! தாங்கள் ஏதோ பல பயங்கரக் கனவுகள் கண்டதாகச் சொன்னீர்களே, அதைப் பற்றி நான் சில கேள்விகள் கேட்கலாமா?” என்று கேட்டான்.

“அந்தக் கனவுகள் எல்லாம் என்னுடைய கடந்த கால வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்டவை. நீ இவ்வளவு தெரிந்து கொண்டால் போதுமானது. இதற்குமேல் அந்தக் கனவுகளைப் பற்றி நீ அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அநாவசியம்” என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் சொன்னாள் சித்திரலேகா.

“என்ன? கடந்தகால வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டவையா?” என்று கேட்டவாறே விசாலதேவன் தீவிரமாகச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். பிறகு, “அம்மணி! தங்களுக்கு உசிதம் என்று தோன்றினால், நான் போய் பீஜகுப்த மன்னர் வந்து விட்டாரா என்று பார்த்து வருகிறேன். அவர் போய் அதிக நாட்கள் ஆகிவிட்டனவே, ஒரு வேளை அவர் திரும்பி வந்திருந்தாலும் வந்திருக்கலாம் அல்லவா?” என்றான்.

“அவர் திரும்பி வந்துவிட்டார் என்பது எனக்குத் தெரியும்” என்றாள் சித்திரலேகா. அதைச் சொல்லும் பொழுது அவளுடைய குரலில் வறட்சி தாண்டவமாடியது. “அவர் வந்தாலும் வராவிட்டாலும் நமக்கு ஒன்றுதான். அவர் வந்து விட்டதனால் நமக்கு ஆகப்போவதென்ன?” என்று அலுப்புத் தாண்டவமாடக் கேட்டாள்.






முப்பத்துமூன்றும் அத்தியாயம்

விசித்திரப் பிறவி!

அதிகாலையில் சித்திரலேகா கண் விழித்தெழுந்ததும் மிகவும் விசனமுற்றவளாகக் காணப்பட்டாள். பீஜகுப்தன்—ஆமாம், எந்த பீஜகுப்தனை அவள் உயிருக்குயிராக நேசித்தாளோ, அதே பீஜகுப்தன் அல்லவா அவளை உதறித் தள்ளிவிட்டான்! அதை நினைக்க நினைக்க அவளுக்கு வருத்தம் எல்லை மீறியது. உலகமே கும்மிருட்டாக இருட்டிவிட்டது போலத் தோன்றியது. அவளுக்கு அடிக்கடி தன்மீதே கோபம் பொங்கி வந்தது. பீஜகுப்தனா அவளை வேண்டாம் என்று உதறித் தள்ளினான்? இல்லையே! அவளே அல்லவா பீஜகுப்தனை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டு வந்தாள்! ஆமாம், அவள் அவனை அப்படி ஒரேயடியாக வெறுத்து விட்டு ஓடி வருவானேன்?

அப்பொழுது குமாரகிரி நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய முகம் மிகவும் விகாரம் அடைந்து காணப்பட்டது. அவனுடைய நீண்ட கரிய புலனடக்கத்தை ஒரே நொடியில் காமக் கலக்கம் தகர்த்துத் தவிடு பொடி யாக்கிவிட்டது! ஆகவே அவனுடைய தேஜோமயமான முகமண்டலம் ஒளி இழந்து, களையிழந்து மிகவும் விகாரமாகக் காணப்பட்டதில் ஆச்சரியம் என்ன? தேஜோ மயமான அவனுடைய முகமண்டலத்தைக் களங்கத் திரை ஒன்று மூடி மறைத்திருப்பது போலத் தோன்றியது. சித்திரலேகா சிறிது நேரம்வரை இமை கொட்டுவதைக் கூட மறந்து குமாரகிரியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பின் எவ்விதக் காரணமுமின்றி திடீரென்று அவளுக்கு ஒரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்துவிட்டது. அவளுக்கு அங்கே அதிக நேரம் தங்கியிருக்கத் துணிவு உண்டாகவில்லை. ஆகவே உடனே அவள் குடிசைக்குள்ளேயிருந்து வெளியேறினாள். இரவு முழுவதும் அவள் எவனுடன் கூடிக் குலாவி இன்ப போகத்தில் திளைத்திருந்தாளோ, அவனுடைய முகத்தைக் காண்பது என்றாலே அவளுக்கு பயமாக இருந்தது; வெறுப்பாக இருந்தது. தனக்கு இப்படிப் பயமும் வெறுப்பும் ஏற்படுவானேன் என்பதைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அவளுக்கு வியப்பு மேலிட்டது; திகைப்பு மேலிட்டது. ஆனால் எவ்வளவோ மண்டையை உடைத்துக் கொண்டும் சரியான தகுந்த காரணம் மட்டும் அவளுக்குத் தென்படவே இல்லை!

சித்திரலேகா குடிசைக்கு வெளியே வரவும் விசாலதேவன் தன் உபாஸனையை முடித்துக்கொண்டு எழுந்திருக்கவும் சரியாக இருந்தது. சித்திரலேகாவைக் கண்டதும் விசாலதேவன் கைகூப்பி வணக்கம்



பான். இவனும் அதே பாணியில் பதில் எழுதி விடுவான். ஒரு காரணமும் இல்லாமல் தங்கள் வாழ்க்கைச் சங்கிலி இப்படி நைந்து போவதை நினைத்துப் பார்த்து மனோ ஏங்குவாள். அங்கே கோபாலன் மனோவின் பிரிவாற்றாமையால் துன்புறுவான். உடனே போய் அவளைக் கூட்டி வரவேண்டுமென நினைப்பான். மறு நிமிஷம் 'அவளுக்கென்ன அவ்வளவு ராங்கி! அவளாகத்தான் புறப்பட்டு வரட்டுமே' என்று வைராக்கியம் கொள்வான்.

மனோரமாவின் பெற்றோர் அவள் விசனத்தைக் குறிப்பால் உணர்ந்தனர். அவளுடைய மனதை மற்ற விஷயங்களில் திருப்பப் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். சித்ரா பௌர்ணமையன்று சித்ரபுத்திரனுக்குப் பூஜைசெய்து, சாயங்காலம் ஆற்றங்கரையில் நிலாச் சாப்பாடு ஏற்பாடு செய்திருந்தாள் பவானியம்மாள். கபிலநதி தன் குளிர்ந்த நீரில் கழுவிட்டு தெளிந்து உருக்கி வார்த்த வெள்ளித் தகடுபோல் ஓடிக் கொண்டிருந்தது. வானத்தில் சந்திரன் உல்லாஸ பவனி செய்து ரோஹிணியைத் தேடிக் கொண்டிருந்தான். அன்று மனோவின் உள்ளம் காய்ந்து கருகியது. இதே நிலவொளியில் தானும் அவரும் ஒருநாள் உரையாடின அருமையை நினைத்துப் பெருமூச்செறிந்தாள். உடனே புறப்பட்டுப் போய் அவருடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன என்று யோசித்தாள்.

மறுநாள் அந்தி வேளையில் கோபாலன் கையிலிருந்த புஸ்தகத்தை வெறுப்புடன் மேஜைமீது எறிந்துவிட்டுப் பெருமூச்சுடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். வாசலில் டாக்ஸியின் ஹாரன் சத்தம் கேட்டது. சமையற்காரன் கதவைத் திறப்பதும் தன் மாமனார் அவனுடன் ஏதோ சொல்வதும் காதில் விழுந்தது. 'இவர் எங்கே வந்தார் இப்போது?' என்று எண்ணி எழுந்தான். மல்லிகை மலரின் நறுமணம் குபீரெனக் கிளம்பியது. வளைகள் குலுங்க மனோரமா அன்ன நடை நடந்து தன்னை நெருங்குவதும் தடாலெனத் தன் கால்களில் விழுந்து வணங்கிக் கண்ணீர் பெருக்குவதும் கண்டு பேராச்சரிய மடைந்தான். அப்படியே அவளை வாரியெடுத்து, "மனோ, என் கண்ணே! நான் இன்று மெயிலில் புறப்பட்டு வந்து உன்னை அழைத்துவருவதெனச் சற்றுமுன்தான் தீர்மானித்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்!" என்று அன்பு கனியச் சொன்னான்.

மனோரமா தலை நிமிர்ந்து கோபாலனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

சொல்லிக் கொண்டே தட தடவெனக் கீழே இறங்கி வெளியே போய் விட்டான்.

மறுநாள் மனோரமா ரொம்ப உற்சாகமாகக் காணப்பட்டாள். பார்த்து ஒரு வருஷமாயிருந்த தாயார் அன்று வந்திருந்தாள். மனோரமா சமையலறைக்கும் மாடிக்குமாக நூறு நடை நடந்தாள். "அம்மா, அவசரப்படாமல் சாப்பிடு. கொஞ்சம் படுத்து இளைப்பாறு. ஊரில் எல்லாரும் சௌக்கியமா? அப்பா சௌக்கியம்தானே? லல்லிக்கு இந்த வருஷம் கல்யாணம் நடக்குமா?" — இப்படியாகக் கேள்விகளை அடுக்கி அவள் அம்மாவைத் திணற வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்று பிற்பகலில் மனோரமாவின் தாயார் பவானியம்மாள் தன் பெண்ணுடன் உட்கார்ந்து சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

"மனோ, நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்; முடியவில்லை. பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளுவதும் காதல் வாழ்க்கை நடத்துவதும் இயற்கைதான். ஆனால், இப்படியா? புருஷன் வீட்டுக்கு வந்தாலும் வந்தாய், பெற்றவர்களை அடியோடு மறந்து விட்டாயே! இதென்னடி அம்மா அதிசயக் கணவன், அப்படி ஒரு விநாடியும் விட்டுப் பிரிய முடியாமல்!" என்று சொன்னாள்.

மனோரமாவுக்கு ஒரு புறம் துக்கம், இன்னொரு புறம் கோபம் வந்தன. "என்ன அம்மா, நீ சொல்வதே விசித்திரமாயிருக்கிறதே! எல்லாப் பெற்றோர்களும் தம்முடைய பெண்கள் கருத்து ஒருமித்த காதல் வாழ்க்கையைப் புருஷனுடன் நடத்த வேண்டுமென்று வேண்டி நிற்பார்கள்; நீ என்னவென்றால் என்னுடன் வந்துவிடு என்கிறாய்! நன்றாயிருக்கிறது, அம்மா!" என்றாள்.

பவானியம்மாள், "பதறாதே! எல்லா விஷயங்களிலும் நிதானம் வேண்டுமென்றும், உன் அன்பைக் கோரி நிற்கும் பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னேன். அவ்வளவுதான்!" என்றாள். இதை மாத்திரம் அவள் சொல்லி விட்டு மேலும் சம்பாஷணையைத் தொடர மனமில்லாமல் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

மனோரமா ஜன்னலருகில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டாள். "அன்பாக வளர்த்த அம்மா, அருமைத் தங்கை லல்லி, அப்பாவின் ஆழ்ந்த அன்பு-இவற்றையெல்லாம் இரண்டு வருஷங்களில் மறந்து விட்டோமே! காரணம்? கோபாலன் என்னும் கள்வரன்றோ! நம்முடைய இவ்வளவு பெரிய தியாகத்தை அவர் அறிவாரா? நேற்று என்ன காரணத்தால் நம் கைகளை அவர் அப்படி உதறித் தள்ளிவிட்டுப் போனார்; நான்தான் ஏமாந்தேன்; பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்ற கதை போலிருக்கிறதே!" என்று எண்ணமிட்டுத் தவித்துப் போனாள்.

மறுநாள் பவானியம்மாள் ஊர் திரும்ப ஆயத்தமானாள். அச்சமயம் மனோரமா, "அம்மா, நானும் உன்னுடன் ஊருக்கு வரலாமென்று இருக்கிறேன். ஒரு மாதம் ஊரில் தங்குவேன்!" என்று திடீரெனச் சொன்னதைக் கேட்டுப் பவானியம்மாள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தாள். முந்தின நாள் இரவு, மனோரமா தான் அம்மாவுடன் ஊருக்குப் போவதாகச் சொன்னதும் கோபாலன் அசட்டையாக 'அப்படியே செய்' என்று சொல்லி விட்டதும் அதனால் மனோவின் மனம் ஒரேயடியாக இடிந்து போய் விட்டதும் அவளுக்கு எப்படித் தெரியும்? கோபாலனுக்கோவெனில், "அம்மாவைக் கண்டதும் உடனே அவளுடன் ஓடுகிறேனென்று சொல்லி விட்டாளல்லவா? நம்மைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லையே!" என்ற கோபமும் ஏமாற்றமும்.

ஆறுமாத காலம் ஓடிப் போயிற்று. மனோரமா தாயார் வீட்டில்தானிருந்தாள். அவள் புருஷனிடமிருந்து பத்து நாட்களுக்கு ஒரு முறை கடிதம் வரும். கொஞ்சம் விறைப்பாகவே எழுதியிருப்



மலர்ந்த புன்னகை

ராஜலக்ஷ்மி

"அதோ, அந்தச் சந்திரனைப் பாருங்கள்! புன்னகை புரிவது போலிருக்கிறது அவன் முகம். தன்னுடைய குளிர்ச்சிக்கு நிகர் உலகில் உண்டோ என அவன் இறுமாந்திருக்கிறான்!"

"மனோ, அவன் பெருமையெல்லாம் சிறிது நேரமே நீடித்திருக்கும். முழுமதி முகத்தினளாகிய உன் முன்னே அவன் தலை நீட்டவும் கூசுகிறான். பார், இதோ மேகத்திரைக்குள் பதுங்கிக் கொள்கிறான். உயிரற்ற அவன் வதனமெங்கே, உணர்ச்சித் துடிப்புகளுடன் கதிரவன் ஒளியோவென ஜ்வலிக்கும் உன் முகாரவிந்தமெங்கே!"

"இதெல்லாம் இருக்கட்டும். உங்களை ஒன்று கேட்கிறேன். தங்களுக்கு என் மீதிருக்கும் அன்பு அழியாமலிருக்குமா? தங்கள் ஹிருதய பீடத்தில் எனக்கு ஒதுக்கி வைத்திருக்கும் ஸ்தானம் என்றென்றைக்கும் எனக்கே சொந்தமாயிருக்குமா? இதற்குப் பதில் சொல்லுங்கள்?"

"இதுஎன்ன கேள்வி! உலகம் முடியும் வரையில் இந்த ஜன்மமல்ல, இன்னும் பல பிறவிகளிலும் என் காதல் உன்னைச் சுற்றிச் சுழன்று கொண்டேயிருக்கும். நீ சொல், உன் பிரேமை என்றும் குறையாமலிருக்குமா என்று!"

"நிச்சயமாகச் சொல்லுவேன். அண்டம் புரண்டாலும் அழியாத வஸ்துக்கள் அழிந்து விட்டாலும் என் காதல் சிரஞ்சீவித்வம் பெற்று விளங்கும். அதற்கு ஓர் அசைவும் ஆட்டமும் ஏற்படாது. இது சத்தியம். வான வீதியிலே இருக்கும் இந்த அம்புலியே இதற்குச் சாட்சி!"

"மனோ, சஞ்சல சுபாவமுள்ள சந்திரனைச் சாட்சி வைக்காதே! அவன் உடம்பு தேய்வு போல் அவன் மனமும் ஏமாற்றும் சுபாவமுடையதே!"

"அதெல்லாமில்லை; நம் அன்புக்கு சந்திரனே சாட்சியாயிருக்கட்டும்."


மேற்கண்ட சம்பாஷணை ஒரு மாடி வீட்டின் நிலா முற்றத்தில், ஸ்ரீமான் கோபாலன் அவர்களுக்கும் ஸ்ரீமதி மனோரமா கோபாலன் அவர்களுக்குமிடையே ஒரு பௌர்ணமி இரவில் நடைபெற்றது. கோபாலன் ஒரு டாக்டர். மனோரமா இண்டர்மிடியேட் பாஸ் செய்த காலேஜ் மாணவி. அவர்களுக்குத் திருமணம் நடந்து இரண்டு வருஷங்களாகியிருந்தன.

ஒரு வருஷம் ஓடி மறைந்தது. கோபாலன் அன்று தபாலில் வந்த ஒரு கடிதத்தை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தான். அது அவன் உயிர்த் தோழனை வாசு பம்பாயிலிருந்து அனுப்பிய கடிதம். "கோபால், என் நினைவு உனக்கு ஒரு சிறிதேனும் இருப்பதாகத் தெரியவில்லை. பல கடிதங்கள் எழுதினேன், பதிலையே காணோம். மண வாழ்க்கையில் நீ ஒரேயடியாக மூழ்கித் திளைத்துவிட்டாயென்று தோன்றுகிறது. இருக்க வேண்டியதுதான். ஆனால் எதற்கும் ஓர் அளவில்லையா? எல்லையில்லா இன்பங்கள் நீடித்து நிற்பதில்லை. பொன் விலங்கப்பா நீ பூண்டிருப்பது! உங்களுடைய வாழ்க்கையின் இன்பக் குமிழியை நான் கலைக்க வரவில்லை. ஒன்று மட்டும் சொல்லுவேன். குமிழி நீர்க்குமிழிதான். அறிந்துகொள்!"

கோபாலன் அக் கடிதத்தை மூன்று முறை படித்தான். பிறகு மேஜை டிராயரில் வைத்துப் பூட்டினான். அவன் மனத்தில் ஒரு சந்தேக அலை மோதுண்டது. வாசுவும் அவனும் பள்ளித் தோழர்கள்; பிறகு கலாசாலை நண்பர்கள். வாஸன் ஒரு ரசாயனசாலையில் ஆராய்ச்சியாளனாக இருக்கப் பம்பாய்க்குப் புறப்பட்டான். கோபாலன் சென்னையில் டாக்டர் தொழிலை ஆரம்பித்தான். பிரியும் பொழுது அவர்கள் எவ்வளவோ உறுதிமொழி கூறிக் கொண்டனர். வாரம் தவறாமல் கடிதம் எழுதிக் கொள்ள வேண்டுமென முடிவு கட்டினர். ஆறு மாதத்துக்கெல்லாம் கோபாலனின் விவாகம் நடைபெற்றது. வாசு சிறந்ததொரு பரிசு சகிதம் வந்து போனான். கடிதம் எழுதிக் கொள்வது கொஞ்சம் கொஞ்சமாக விட்டுப் போயிற்று.

"என்ன, பெரிய யோசனை! எந்தக் கோட்டையைப் பிடிப்பதாக உத்தேசம்?" என்று கூறிச் சிரித்துக் கொண்டே வந்த மனோரமா, நாற்காலியின் கையில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். வழக்கம்போல அவன் அவளை விழுங்கி விடுபவன்போலப் பார்க்கவில்லை. அதற்குப் பதிலாக "மனோ, நான் அவசரமாக வெளியே போக வேண்டும். அந்த டைபாய்ட் கேஸின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது" என்று

என்பதை அறிந்த நூருடீன் ஆச்சரியப்பட்டான். அவன் காலிபைப் பார்த்துக் கூறினான்: "மன்னரே, மன்னிக்க வேண்டும். பல்ஸோராவை நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது. அங்கே நான் பல கஷ்டங்களை அனுபவித்தேன். அங்கு நான் சுகமாயிருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனக்கு அரச பதவி வேண்டாம். நான் சாதாரணப் பிரஜையாகவே இருக்க அநுமதிக்க வேண்டும். நான் என் ஆயுள் காலத்தைத் தங்கள் அருகிலேயே கழித்து விடுகிறேன்.''



இதோ இந்தக் கட்டத்துக்கு மத்தியில் இருக்கும் ஊசியை எடுப்பது எப்படி? கண்டு பிடியுங்கள்.

காலிப் இந்த வேண்டுகோளைச் சந்தோஷத்துடன் அங்கீகரித்தான். அவனைத் தனது நம்பிக்கைக்கு உகந்த பிரபுக்களில் ஒருவனாக ஆக்கி மதிப்பும் கௌரவமும் அளித்தான். பேரழகியை மீண்டும் அவனிடத்தில் ஒப்படைத்தான். அவர்கள் இருவரும் மிக்க இன்பமாக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பணத்தையும் நில புலன்களையும் மற்ற வசதிகளையும் அளித்தான்.

நூருடீன் தன் மனைவியுடன் வெகு காலம் வரை சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தான். (முற்றிற்று)

சிறுமியின் கருணை

ஒரு நாள் தெருவில் ஒரு சிறுமியும் அவள் மாமனும் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது எதிரில் ஒரு இடைச் சிறுவன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்த அந்தச் சிறுமி, "ஏண்டா பையா, உன் நாய் எங்கேடா?'' என்று கேட்டாள்.

"யாரோ குறும்புக்காரப் பையன்கள் கல்லால் அடித்து அதன் காலை உடைச்சுட்டாங்க அம்மா!'' என்று வருத்தத்துடன் சொன்னான் பையன்.

"அடடா! காலையா உடைச்சுட்டாங்க? இப்போது அது எங்கேடா இருக்கு?'' என்று கேட்டாள் சிறுமி.

"அது காலையிலிருந்து இந்தக் குடிசையிலே தான் கிடக்கு அம்மா!'' என்று பதிலளித்தான் இடைச் சிறுவன்.

"ஐயோ! காலையிலே இருந்து தனியாகவா கிடக்கு? நான் அதைப் பார்க்கணுமே!— மாமா! நான் முன்னாலே போகிறேன். நீ பின்னால் வா!'' என்று சொல்லிவிட்டு ரொம்பப் பரபரப்புடன் ஓட்டமாக ஓடினாள் சிறுவனின் குடிசையை நோக்கி.

நாய் வலி தாங்கமாட்டாமல் குடிசையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தது. உடனே அவள் அடுப்பைப் பற்ற வைத்து, வெந்நீர் போட்டாள். இதற்குள் அவள் மாமனும் வந்துவிட்டார். அவர் உதவியுடன், துணியை நனைத்து நாயின் காலுக்கு ஒத்தடம் கொடுத்தாள். ஒத்தடம் கொடுக்கத் துணி கிடைக்காததால் தன்னுடைய கௌனையே கிழித்து அதை ஒத்தடத்துக்கு உபயோகப் படுத்தினாள். அவள் வைத்தியத்தின் மூலம் வலிசற்று குறைந்த நாய், தன் வாலை ஆட்டியது.



இந்தச் சிறுமிதான் பிற்காலத்தில் போரில் காயம் பட்டோருக்குச் சிகிச்சை செய்வதில் புகழ் பெற்று விளங்கிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மை. —'' ஜக ''



நூருடீனை ஜெனபி மன்னனிடம் அனுப்பிய பிறகு காலிப் தனது முதல் உத்தரவை உறுதிப்படுத்தி இரண்டாவது உத்திரவு அனுப்ப மறந்துவிட்டான். சில நாட்களுக்குப் பிறகு இந்த விஷயம் காலிபின் ஞாபகத்திற்கு வந்தது. தன்னுடைய மறதியினால் நூருடீனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமோ எனக் கவலைகொண்டான். உடனே தன் பிரதம மந்திரி கபூரை அழைத்து, “உடனே சில குதிரை வீரர்களை அழைத்துக் கொண்டு பல்ஸோராவுக்குச் செல்லுங்கள். ஸவியின் சூழ்ச்சிக்கு உள்ளாகி நூருடீன் இறந்து விட்டானோ என்னவோ? நூருடீன் இறந்திருந்தால் ஸவியை அங்கேயே கொன்று விடுங்கள். ஒருவேளை நூருடீன் பிழைத்திருந்தால் அவனையும் ஜெனபி மன்னனையும் இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள்” என்று கட்டளையிட்டான்.

அவ்விதமே மந்திரி கபூர் பல்ஸோராவுக்குப் போனான். ஜெனபி மன்னனையும் நூருடீனையும் ஸவியையும் அழைத்துக் கொண்டு மறுநாளே பாக்தாதை அடைந்தான்.

• • •

நூருடீனை நேரில் கண்டபோது காலிப் மிக்க மகிழ்ச்சியடைந்தான். துன்மந்திரியாகிய ஸவியை உடனே தூக்கி விடும்படியாக உத்தர விட்டான். பிறகு, முன்பு நினைத்தபடியே நூருடீனைப் பல்ஸோரா நாட்டுக்கு முடி சூட்டக் கருதினான்.

செம்படவ வேஷத்தில் இருந்தவர் தான் காலிப்

ரா.கி

நாருடன் பல்ஸோராவை அடைந்தான். உடனே ஜெனபி அரசனுடைய தர்பார் சென்று அவனிடம் காலிப் அளித்த கடிதத்தைக் கொடுத்தான்.


கடிதத்தைப் படித்தவுடன் அரசனின் முகம் வெளுத்தது. தான் அரச பதவியை இழப்பதாம்! தன்னை ஏமாற்றிய நாருடன் அந்த இடத்தில் உட்காருவதாம்! இதை நினைத்த போது ஜெனபி மன்னனுக்கு உடல் வியர்த்தது. மனம் வெம்பியது. அவசரப்பட்டு மந்திரி ஸலியின் பேச்சைக் கேட்டு நாருடனைத் துன்புறுத்தியதனால் காலிபின் விரோதத்திற்கு ஆளானோமே என்று அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான். நாருடனுக்கு சிம்மாசனத்தைக் கொடுப்பது தவிர வேறு வழியில்லை என்று எண்ணினான். இந்தச் சமயத்தில் அவனுக்கு ஒரு புது யோசனை தோன்றிற்று. காலிபின் கடிதத்தை மந்திரி ஸலியிடம் காட்டினால் அவன் ஏதாவது தக்க தந்திரம் கூறலாம் அல்லவா? உடனே அவன் ஸலியை அழைத்துக் கடிதத்தை அவனிடம் காட்டினான். காலிபின் கடிதத்தைப் படித்தவுடன் மந்திரி ஸலிக்கு அடங்காக் கோபம் பொங்கி எழுந்தது. தனது விரோதி நாருடன் அரச பதவி அடைவதா என எண்ணிப் புழுங்கினான். இதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

கடிதத்தின் மேற்பகுதியில் இருந்த காலிபின் முத்திரையைக் கிழித்தெறிந்தான். பிறகு அவன் ஜெனபி மன்னனைப் பார்த்துக் கூறினான்: "அரசே, இந்த உத்தரவை நீங்கள் நிறைவேற்றித்தான் ஆக வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை. நாருடனை எப்படியாவது தம் நாட்டிலிருந்து விரட்ட வேண்டுமென்பதற்காகக் காலிப் இம்மாதிரி ஒரு தமாஷ் செய்திருக்கிறார். தம்முடைய உத்தரவை நீங்கள் கண்டிப்பாக நிறைவேற்றித்தானாக வேண்டுமென்று அவர் நினைத்திருக்கும் பட்சத்தில் முதல் உத்தரவை ஊர்ஜிதம் செய்து மறு உத்தரவு அனுப்பியிருப்பார். எப்பொழுது இரண்டாவது உத்திரவு காலிபிடமிருந்து வரவில்லையோ அவர் தமாஷ் செய்திருக்கிறார் என்று நிச்சயமாக ஏற்படுகிறது. ஆகையினால் இந்தக் கடிதத்தைத் தாங்கள் பிரமாதப்படுத்த வேண்டாம்."

இந்தச் சமாதானம் அரசனுக்குத் திருப்தியளித்தது. அரசனை ஏமாற்றிய தைரியத்தில் ஸலி தன் ஏவலாட்களைக் கூப்பிட்டு, "நாருடனை அவனுடைய வீட்டுக்கே இழுத்துச் செல்லுங்கள். மூர்ச்சையடைந்து கீழே விழும் வரையில் அவனை நன்றாக அடியுங்கள். அப்படி விழுந்தவுடன் அவன் உடலை ஓர் இருட்டறையில் தள்ளிப் பூட்டி விடுங்கள்" என உத்தர விட்டான்.

என்னென்னவோ அதிர்ஷ்டம் தனக்குக் கிட்டப் போகிறது என்று கனவு கண்ட நாருடன் ஸலியின் உத்திரவைக் கேட்டவுடன் திடுக்கிட்டான். அந்தச் செம்படவன் தன்னை நன்றாக ஏமாற்றி விட்டான் என்று நினைத்து அவனை மனதிற்குள் திட்டினான்.

ஸலியின் உத்திரவுப்படி நாருடன் ஆறு நாட்கள் இருட்டறையில் இருந்தான். தின்பதற்குக் காய்ந்த ரொட்டித் துண்டும் குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீரும் தவிர அவன் சுவையுள்ள உணவைக் காணவே இல்லை. ஆறு நாட்களாகியும் நாருடன் சாகாதது கண்ட ஸலி, மன்னனிடம் சொல்லி அவனைப் பகிரங்கமாகத் தூக்கிவிடும்படி கேட்டுக் கொண்டான். அரசனும் இதற்குச் சம்மதித்தான். அன்று மாலையே தூக்கிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.





6. விடுதலை கிடைத்தது!

துயரத்தில் ஆழ்ந்திருந்த பேரழகியை நோக்கிக் காலிப் கூறியதாவது:


"பெண்ணே, உன் கண் முன் நடந்த சம்பவங்களிலிருந்து நான் யார் என்பதை நீ அறிந்து கொண்டிருப்பாய். உன் கணவன் அலட்சிய புத்தியுடன் உன்னை எனக்குப் பரிசாக அளித்து விட்டுப் போய் விட்டான். ஆனால் நான் உன்னை என் அடிமைப் பெண்ணாக வைத்திருக்க மாட்டேன். ஆகையால் நீ கவலைப்படாதே. நூருடீனைப் பல்ஸோராவுக்கு அரசனாக்கும்படி இப்போது அங்குள்ள அரசனுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அவன் சிம்மாசனமேறி விட்டான் என்று தகவல் கிடைத்தவுடன் உன்னையும் அங்கே அனுப்பி வைக்கிறேன். நீ பல்ஸோராவின் ராணியாகலாம்."

இந்த நற்செய்தியைக் கேட்ட பேரழகி பேரானந்தம் அடைந்தாள். நூருடீன் தன்னைக் கைவிட்டு விட்ட போதிலும் ஆண்டவன் தன்னைக் கைவிட்டு விடவில்லை யென்பதை எண்ணி மிக்க ஆறுதல் அடைந்தாள். சந்தோஷத்துடன் காலிபுடன் அரண்மனைக்குச் சென்றான்.

பிழை யற்றே நின்றது. அதற்காக மக்கள் அதை மலர்களால் அலங்கரித்து வாத்திய கோஷத்தோடு தூக்கிக்கொண்டு போகிறார்கள். நீ தூய்மையாக வைத்திருந்த ஊனுடல் பெருமையடைந்து விட்டது! ஆனால் நீதான் நரகம் செல்கிறாய். இந்தத் தாசியின் உடல் பல பாவங்கள் செய்தது. அதோ பார்; அவனுடைய உடலைப் பருந்துகள் கொத்தித் தின்கின்றன. அவன் உடலை யாரும் சரியாகத் தகனம் செய்யக்கூட இல்லை. அவன் உள்ளம் தூய நிலையில் இருந்தபடியால் அவனை ஆண்டவன் சந்நிதானத்துக்கு எடுத்துச் செல்கிறோம். தாசியின் குற்றங்களை நீ எண்ணி வந்தாய் அல்லவா? உன் கவனம் அவன் பாவத்தில் தங்கியபடியால் அந்த அழுக்கு உன்னைப் பற்றிக் கொண்டது. தன் பாவத்தை நினைத்து வருந்தி பகவானைச் சரண் புகுந்த அவனுடைய உள்ளம் பாவத்தினின்று விடுபட்டுப் பரிசுத்தமாயிற்று. தாசியின் பாவங்களை எண்ணிக் கொண்டிருந்த நீ அவனுடைய பாவங்களைச் சுமக்கிறாய்'' என்று சொன்னார்கள்.

பிறர் குற்றங்களை எண்ணுவது பக்தனுடைய வேலை அல்ல. ஆண்டவன் லீலையை யாரே அறிவார்! அவன் இட்ட வழி, அவன் இடும் பரீட்சை. அவற்றின் நன்மையும் தீமையும் ஆண்டவனே அறிவான்.

என்னுடைய உள்ளத்தை நான் தூய நிலையில் வைத்துக் கொண்டு, பிறரிடம் உள்ள குற்றங்களை அருள் கண்ணால் பார்க்க வேண்டும்.





சேர்ந்ததும் துக்கத்தைத் தாங்க முடியாமல் அழத் தொடங்கினாள்.

"ஹே, கிருஷ்ணா! என்னை எப்படியாவது கைதூக்கி விட மாட்டாயா? என் உயிரை எடுத்துக்கொள்" என்று கதறிக் கதறி அழுது, ஓய்ந்து மெய் மறந்து போனாள்.

ஆண்டவன் அந்தப் பேதையின் பேரில் கருணை கொண்டான். யமதரும ராஜா அன்றிரவே அவளுடைய உயிரைக் கொண்டேகினான்.

• • •

துறவியின் காலமும் அன்றிரவே முடிந்து விட்டது. அவன் உயிரும் உடலை நீத்துச் சென்றது.

ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்! துறவியின் உயிரை யம கிங்கரர்கள் பிடித்து இழுத்துக் கொண்டு நரகம் சென்றார்கள்; ஆனால் தன் பாவத்தை எண்ணி வருந்திய தாசியின் உயிரோ விஷ்ணு பதம் சென்றது.

துறவி விண்ணுலகம் சென்று கொண்டிருந்த தாசியின் ஆன்மாவை வழியில் பார்த்து, "ஏ தாசி! நீயா பரமபதம் செல்வது? எண்ணற்ற பாவங்கள் செய்தாய். நான் வைத்த கணக்கே பெருங் குவியலாகக் குவிந்தது. நானோ சுத்தத் துறவியாக இருந்தேன். ஒரு பிழையும் செய்யவில்லை. என்னை நரகம் போகவிட்டு, உன்னை ஆண்டவன் தன்னுடைய பதத்துக்கு அழைத்துச் செல்லுகிறான். இந்த ஆண்டவன் தருமம் அறியாதவன்!" என்று கூக்குரலிட்டான்.

விஷ்ணு தூதர்கள் துறவிக்குச் சமாதானம் சொன்னார்கள்: "அப்பனே! கதற வேண்டாம். ஆண்டவனுக்குப் புத்தி தடுமாற்றமில்லை! உன் வாழ்க்கை வெளி வேஷமாக இருந்தது. துறவு பூண்ட போதும் நீ தேடியது ஆடம்பரமும் புகழும். அதோ பார் உன் ஊனுடல். அது

ராமகிருஷ்ண உபநிஷதம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

9. துறவியின் கதை

ஒரு கோயிலின் கோபுர வாசலில் துறவி ஒருவன் ஜாகை வைத்துக் கொண்டிருந்தான். எதிரில் ஒரு தாசி வீடு. அந்த வீட்டுக்கு ஆட்கள் தினமும் வந்து போவதைத் துறவி பார்த்துக் கொண்டே வந்தான். 'இவ்வளவு பேர் கெட்டுப் போகிறார்களே' என்று துறவி மிகவும் வருந்தி ஒரு நாள் தாசியைக் கூப்பிட்டு அவளைக் கண்டித்தான்.

"பாவி! இரவும் பகலும் நீ இம்மாதிரி தீயவழியில் கழிக்கிறாய். யமன் உன்னை இழுத்துப் போகும் சமயத்தில் என்ன செய்யப் போகிறாய்?" என்று அவளை ஏசினான் துறவி. இவ்வாறு அழைத்துச் சொன்னது அந்தத் தாசியின் மனதில் பட்டு, அவள் தன் வாழ்க்கையைப்பற்றி வருந்தி ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினாள்.

"ஆண்டவனே! நான் செய்யும் பாவத்தை நீதான் தீர்க்க வேண்டும்" என்று மிக நொந்து, தினமும் பகவானை எண்ணி வந்தித்து வந்தாள். ஆனால் அவளுக்குப் பிழைக்க வேறு வழி யில்லை; பழைய விருத்தியிலேயே இருந்து வந்தாள்.

"ஐயோ, வேறு வழியில்லாமல் இப்படிச் செய்கிறேன். ஆண்டவனே, என்னை எப்படியாவது காப்பாற்று!" என்று இரவும் பகலும் பகவானை வணங்கி வந்தாள்.


துறவி பார்த்தான். "ஏது, என் பேச்சு ஒன்றும் பலிக்கவில்லை. இவள் தன் பழைய தொழிலை விடவில்லை. பார்க்கலாம்; இவளைத் தேடி மொத்தம் எத்தனை பேர் வருகிறார்கள்; கணக்கெடுப்போம்" என்று தீர்மானித்தான்.

அது முதல் அத்துறவியின் கவனம் அந்தத் தாசி வீட்டின் மேலேயே சென்று, அவள் வீட்டுக்கு வந்த ஆட்களை எண்ணி வந்தான். ஆள் ஒன்றுக்கு ஒரு கல்லாகக் கணக்கு வைத்துக்கொண்டே வந்தான்.

நாள் செல்லச் செல்லக் கற் குவியல் உயர்ந்து வளர்ந்தது. ஒரு நாள் மறுபடியும் துறவி அந்தத் தாசியை அழைத்து அவளுக்குச் சொன்னான்: "பார்த்தாயா, இந்தக் கற்களின் குவியலை! இந்தக் கற்கள் உன் பெரும் பாவங்களின் எண்ணிக்கை. நான் சொன்னதைக் கேட்காமல் உன் தொழிலிலேயே இருக்கிறாய். நான் எச்சரித்த பிறகும் நீ செய்து வந்த பிழையின் எண்ணிக்கை இது. நீ அனுபவிக்க வேண்டிய நரக தண்டனையை இதிலிருந்து அறிந்து கொள். உனக்குக் கதியே இல்லை, போ!" என்றான்.

தாசி நடுங்கினாள் கற்குவியலைப் பார்த்து. "ஆண்டவனே! நான் என்ன செய்வேன்!" என்று பயந்தவளாக வீடு சென்றாள். வீடு போய்ச்





"கல்வி சிறந்த தமிழ்நாடு" என்று மகா கவி பாரதியார் பாடினார் அல்லவா? அத்தகைய பெருமையைத் தமிழ்நாட்டுக்கு அளிக்கும் மூன்று வித்வான்களை மேலே காணலாம். சென்ற மாதம் திருவிடைமருதூரில் கூடிய மகா வித்வத் சபையில் இந்த மூன்று வித்வான்களும் கௌரவிக்கப் பட்டார்கள். முப்பது வருஷ காலமாக வேதாந்தப் பிரவசனங்கள் செய்து உபநிஷத பாடங்கள் நடத்தி வந்திருக்கும் மாயூரம் பண்டிதஸ்ரீ. கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு ரூ. 2,001 கொண்ட நிதி முடிப்பு அளிக்கப்பட்டது. போலகம் ஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகளுக்கும், கோட்டாறு ஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகளுக்கும் "சாஸ்திர ரத்னாகரம்" என்னும் பட்டம் வழங்கப் பட்டது.

மேலே கூறிய வித்வத் மகாசபைக்குக் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தலைமை வகித்துச் சிறப்பு அளித்தார்கள்.

தால் அகில உலகத்திலிருந்தும் அந்தப் பள்ளியில் சேர ஆயிரக் கணக்கான பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர். மொத்தம் முப்பதாயிரம் விண்ணப்பங்களுக்கு மேல் வந்திருப்பதாக மூஷிகன் சொன்னான்.

"முப்பதாயிரம் பேரா? இந்த மூச்சந்தியில் அவர்கள் நிற்கக்கூட இடமிருக்காதே! பள்ளிக்கூடம் நடத்தும் யோசனையைக் கைவிட வேண்டியதுதான்" என்று சொன்னேன்.

"கைவிட்டு விடலாம், ஆனால் அதற்கு ஏதேனும் ஒரு காரணம் சொல்ல வேண்டாமா?"

"காரணம் கண்டுபிடிப்பதா பிரமாதம்? சரி! இந்த விண்ணப்பங்களில் ஆந்திர கேசரி பிரகாசம் பந்துலுகாரு மாணவராகச் சேர்ந்து கொள்ளுவதாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறாரா?"

மூஷிகன் எல்லாக் கடிதங்களையும் மறுபடியும் ஒரு தடவை பார்த்துவிட்டு "இல்லை. அவர் பட்டேல் ஜவாஹர் இவர்களின் யோசனைக்கு அடங்கி நடப்பதாக வாக்குறுதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அவர் நம்முடைய அரசியல் பள்ளியில் எங்கே வந்து சேரப் போகிறார்!" என்றான்.

"சபாஷ்! நாம் பள்ளிக்கூடம் நடத்தாததற்குக் காரணம் இது ஒன்றே போதும்."

"ஸ்ரீமான் தும்பிக்கையார் அவர்கள் மூச்சந்தி முனையில் ஆரம்பித்து நடத்துவதாயிருந்த கோடை அரசியல் பள்ளிக்கூடம் துரதிருஷ்டவசமாக ஸ்ரீ பிரகாசம் பந்துலுகாரு மாணவராகச் சேர விண்ணப்பம் அனுப்பாததின் காரணமாக நடைபெறாது! என்று உடனே எல்லாப் பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடு" என்றேன்.

சீக்கிரம் ஒரு சுப்யோக சுபதினத்தில் இந்திய ராஜ்யத்தோடு சேரும் விழாவைப் புதுச்சேரி மகா ஜனங்கள் சந்திரநாகூரில் கொண்டாடியதைவிட நூறு மடங்கு அதிகமாகக் கொண்டாடுவார்கள். அப்பொழுது நாமும் அந்த விழாவில் வந்து கலந்து கொண்டு அதற்கு மகிமையை உண்டாக்குவோம் என்று எண்ணிய வண்ணம் அவ்விடத்திலிருந்து மூஷிகனை அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்.

நாங்கள் எங்கள் இருப்பிடத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும்போது இரண்டுபேர் பெரிதாக ஒப்பாரி வைத்து அழுவது போல் குரல் கேட்டது. அந்த சப்தம் மிகவும் பயங்கரமாய் இருந்ததால் "மூஷிகா, என்ன அது? கவனி" என்றேன் படபடப்புடன்.

கடற்கரை ஓரம் மனித நடமாட்டமே இல்லாத ஒரு இடம். அந்த இடத்தில் அந்த வேளையில் ஒப்பாரி வைத்து அப்படி அழுகிறவர்கள் யாரென்று துருவித் துருவித் தேடிப் பார்த்துக் கடைசியில் கண்டு பிடித்தோம். இரண்டு குண்டான உருவங்கள் ஒன்றை ஒன்று கட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தன. அவைகளுக்குக் கையும் காலும் முளைத்திருந்தாலும் அவைகள் வெடி குண்டுகள்தான் என்பது எளிதில் விளங்கியது. மூஷிகன் அவைகளுக்குச் சமீபமாக நெருங்கப் பயப்பட்டான். நான் அவை சமீபமாக நெருங்கி அனுதாபத்தோடு "ஐயோ பாவம்! நீங்கள் யார்? உங்களுக்கு ஏற்பட்ட துயரம் என்ன? ஏன் அழுகிறீர்கள்?" என்றேன்.

அவைகளில் ஒன்று ஒரு தினுசாகத் தன் துயரை அடக்கிக் கொண்டு "என் பெயர் ஹைட்ரஜன் (ஜலவாயு) பாம். இவன் பெயர் ஆடம் (அணு) பாம். எங்கள் மதிப்பு கௌரவம் எல்லாம் மங்கி மறைந்து விடும் போலிருக்கிறது. அந்தத் துயரம் தாங்காதுதான் இப்படி கட்டிக் கொண்டு அழுகிறோம்" என்றது.

"அடடா! உங்கள் மகிமைக்கும் மதிப்பிற்கும் அப்படி என்ன பங்கம் ஏற்பட்டு விட்டது?" என்றேன்.

உடனே ஜலவாயு குண்டு அணுகுண்டைக் காட்டிச் சொல்லிற்று:—"இவன் ஒரு ஊரை அழித்து விட்டுத் தனக்கு நிகரில்லை என்று பெருமை யடித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் நான் வந்து இவனை விட ஐம்பது மடங்கு அழிக்கும் சக்தியுள்ளவன் என்று உலகத்தையே பயமுறுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது வியன்னாவில் ஒரு பௌதிக சாஸ்திரி கிளம்பி, 'ஒரு குத்து மணலால் இந்த உலகத்தையே அழித்து விடலாம்' என்று ஆராய்ச்சி செய்து சொல்லுகிறார்......"

"அடடா! இதற்காகவா அழுகிறீர்கள். இதனால் உங்கள் பெருமைக்குச் சிறிது கூடக் குறைவு ஏற்படவில்லை. இந்த அழிவுச் சக்திக்கு வழி காட்டிகள் நீங்கள்தான் என்ற பெருமை உங்களை விட்டுப் போய்விடுமா? இந்த உலகத்தில் இன்னும் எவ்வளவோ பௌதிக சாஸ்திரிகள், விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். நாளுக்கு நாள் போட்டிமேல் போட்டியாக இன்னும் எவ்வளவோ பயங்கரமான ஆயுதங்களை எல்லாம் அவர்கள் கண்டு பிடித்துக் கொண்டு போவார்கள். என்னிடம் மிகுந்த பக்தி வைத்துள்ள ஒரு பெண்மணி அடிக்கடி எனக்குக் கொழுக்கட்டைகள் கொண்டு வந்து படைக்கிறாள். அவள் செய்த கொழுக்கட்டையை நான் சாப்பிட்டு ஜீரணிக்கும் போதெல்லாம் அவளுடைய கைப் பக்குவத்தை உணருகிறேன். அவள் ஒரு நாள் இந்த பௌதிக சாஸ்திரிகள் விஞ்ஞானிகள் எல்லாம் திகைப்படையும்படி பூமி ஆகாயம் எல்லாவற்றையும் கதி கலங்க வைக்கும் பயங்கர ஆயுதத்தைக் கொழுக்கட்டை உருவத்திலேயே படைப்பாள் என்று எதிர்பார்க்கிறேன்" என்றேன்.

"அப்படியென்றால் இந்த உலகத்தை அழிக்கும் பாக்கியம் எங்களுக்கில்லை என்று சொல்கிறீர்களா?" என்றது அணுகுண்டு.

"உங்களுக்கு மாத்திரம் கிடையாது என்பதல்ல. இந்த உலகத்தை அழிக்கும் பாக்கியம் எதற்குமே கிடையாது. போட்டி மேல் போட்டியாக ஆராய்ச்சி செய்து ஆயுதங்களைக் கண்டு பிடித்துக் கொண்டே வேண்டுமானால் போகலாம். ஆனால் இந்த உலகம் எல்லாவற்றையும் ஏமாற்றி விட்டு ஒருநாள் தன்னைத் தானே அழித்துக்கொள்ளப் போகிறது. ஆகையால் நீங்கள் ஒப்பாரி வைத்து அழுவதினால் புண்ணியமில்லை" என்று சொல்லிவிட்டு மூஷிகனை அழைத்துக் கொண்டு கிளம்பினேன்.

நாங்கள் முச்சந்தி முனைக்கு வந்த பொழுது எனக்காக ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிந்திருப்பதைப் பார்த்தேன். எனக்குப் பிரயாணம் செய்ததினால் சிறிது அலுப்பேற்பட்டதால் எல்லாக் கடிதங்களையும் மூஷிகனை விட்டுப் பார்க்கச் சொன்னேன்.

நான் கோடை விடுமுறையில் அரசியல் பள்ளிக்கூடம் நடத்துவதாகச் சொன்ன

முச்சந்தி

துதிக்கையார் எழுதுகிறார்

"ஆண்டவனே! அபயம்! அபயம்! இரண்டு ஓட்டு! இரண்டே ஓட்டு! என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று பார்லிமெண்ட் சபையிலிருந்து அட்லி துரை அபயமிட்டு அலறும் குரல் கேட்டு மூஷிகனின் முதுகில் ஏறி அமர்ந்து "போ! லண்டன் மாநகரம்" என்றேன். கண நேரத்தில் லண்டன் மாநகரம் வந்து பார்லிமெண்ட் சபையில் குதித்து "பக்தா! இரண்டு ஓட்டுக்கள் தானே பயப்படாதே. அபயம் அளித்தோம்" என்றேன்.

நல்ல வேளை! பிழைத்தார் அட்லி துரை. அத்துடன் அவருடைய தொழிற் கட்சி மந்திரி சபையும் இந்தக் கண்டத்திலிருந்து தப்பி விட்டது. "அட்லி துரையை ஆபத்திலிருந்து எந்த தெய்வம் தப்பவைத்தது?" என்று எண்ணி சர்ச்சில் துரை முணு முணுப்பது என் காதில் விழுந்தது. "இருக்கட்டும்; இவரைப் பின்னால் ஒரு சமயம் பேசிக் கொள்வோம்" என்று விட்டுவிட்டேன். ஆனால் அட்லி துரை எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். ஆபத்து வரும் நேரத்திலெல்லாம் என்னை மறக்காமல் கூவியழைக்க வேண்டும்.

அட்லி துரையின் அபயக் குரல் என் காதில் விழுந்தாலும், அவரைக் காப்பாற்றுவதற்காக விழுந்தடித்துக் கொண்டு ஓட என் வாகனமாகிய மூஷிகன் எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டும். ஏனென்றால் அவனுக்கு அடிக்கடி கால் சுளுக்கு ஏற்பட்டு விடுகிறது. அப்படி ஏற்பட்டு விட்டால் அட்லி துரை, பாடு கொஞ்சம் ஆபத்துத்தான்.

லண்டன் மாநகரிலிருந்து புறப்பட்டு வான வீதியில் பறந்து வந்து கொண்டிருந்தான் மூஷிகன். அவன் மாத்திரம் இல்லை. அவனுடைய முதுகில் நானும் அமர்ந்திருந்தேன். அதிவேகமாக வந்து கொண்டிருந்தவன் 'ஸடன் பிரேக்' போட்டதுபோல் சட்டென்று நின்று விட்டான். நான் திகைப்படைந்து "ஏன் நின்றுவிட்டாய்? என்ன?" என்றேன்.

"கொஞ்சம் கீழே குனிந்து பூமியைப் பாருங்கள்" என்று சொன்னான்.

நான் உலகத்தில் எவ்வளவோ கடினமான காரியங்களையும் செய்யத் தயார். ஆனால் என்னை யாராவது 'குனிந்து பார், வளைந்து நில்' என்று சொன்னால் அசாத்ய கோபம் வந்துவிடும். இந்த மாதிரியான தேகாப்பியாசங்களெல்லாம் என்னால் எப்படிச் செய்ய முடியும்? மூஷிகனின் வார்த்தை எனக்குச் சிறிது கோபத்தை உண்டாக்கியது. இருந்தாலும் நான் வானத்தில் அவன் முதுகில் அமர்ந்திருக்கும் நிலைமையை எண்ணிக் கோபத்தை அடக்கிக் கொண்டு, "எனக்குக் குனிந்து பார்க்க முடியவில்லை. நீதான் கீழே என்ன நடக்கிறது என்று பார்த்துச் சொல்" என்றேன்.


மூஷிகன் கவனித்து விட்டு, "இது எந்த ஊர் என்று தெரியவில்லை. எங்கும் ஒரே கொண்டாட்டம். ஜனங்கள் குதூகலமாக இருக்கிறார்கள். எங்கும் தோரணங்களும், இந்திய தேசியக் கொடியும் அழகாகப் பறந்து கொண்டிருக்கின்றன. ஜே கோஷமும் வாத்திய கோஷமும் முழங்குகின்றன" என்றான்.

அது எந்த ஊர்? என்ன விசேஷம் அங்கு? என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆவல் ஏற்படவே மூஷிகனைக் கீழே இறங்கச் சொன்னேன்.

அந்த இடம் சந்திரநாகூர். அன்று மகத்தான சுபதினம். இவ்வளவு நாள் பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்த அந்தப் பிரதேசம் இந்திய ராஜ்யத்தோடு ஐக்யமாகி விட்ட திருநாள் அன்று. அமர வாழ்வு அடைந்து விட்டவர்கள் போல் ஒவ்வொருவர் முகத்திலும் ஆனந்தம் தாண்டவமாடியது. ஓடுவதும், ஆடுவதும், பாடுவதுமாக இருந்தனர் மக்கள். சந்திரநாகூர் மக்களின் கரை கடந்த ஆனந்தத்தைப் பார்த்ததும் எனக்குப் புதுச்சேரியின் ஞாபகம் வந்தது. மூஷிகனின் முதுகில் ஏறி உட்கார்ந்து, "போ, உடனே புதுச்சேரி!" என்றேன். கணநேரத்தில் புதுச்சேரி கடற்கரை ஓரத்திற்கு வந்து விட்டோம். புதுச்சேரியில் இன்று கொண்டாட்டமோ குதூகலமோ இல்லை. அதனால் என்ன? புதுச்சேரியும் ஒரு நாள் இந்திய யூனியனோடு சேரத்தான் போகிறது. சந்திரநாகூர் மக்களுக்கு எவ்வளவு சுதந்திரத் துடிப்பு உண்டோ, அதற்குக் குறைவில்லை புதுச்சேரி, காரைக்கால் முதலிய பிரதேசங்களில் உள்ள பொது மக்களின் சுதந்திரத் துடிப்பு. பிரஞ்சு ஆதிக்கத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் ஒரே நாளில் இந்த விழாவை வைத்துக் கொண்டால் சோபிக்காதல்லவா? ஆகையால் கூடிய


ஹிந்தி படம் ☆
ராஜ்கபூர் தயாரிப்பு


பர்ஸாத்



நாளுக்கு நாள் உங்கள் சருமம் அதிக அழகைப் பெறுகிறது

ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில்தான் உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும், மாசற்றதாகவும், மழமழப்பாகவும் செய்கிறது.

தினமும் குறைந்த பக்ஷம் இரு முறையாவது ரெக்ஸோனா உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் கேடில் அடங்கிய நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்து கழுவுங்கள். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியத்தை அளிக்கும். மேலும் சருமத்தை சுத்தம் செய்து மழமழப்பளித்து என்றும் திகழும் புதிய எழிலையும் தரும்.



ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இது ஒன்றே

RP. 47A-172 TM

தற்குப் பதிலாக அவர்கள் எனக்குக் காரசாரமான வார்த்தைகளைத்தான் கொடுத்தார்கள். நான்கு குடித்தனமுள்ள ஸ்டோரில்தான் நான் இருக்கிறேன். நேற்று முன் ஹாலில் 'கோட்'டை மாட்டி விட்டு உள்ளே எதோ தேடிக் கொண்டிருந்தேன். அப்போது வந்த பிச்சைக்காரனோ, பழைய பேப்பர் வாங்குபவனோ, யாரோ ஜன்னல் வழியாக அந்த 'கோட்'டை அபேஸ் செய்து கொண்டு போய் விட்டான்! என் உள்ளமோ உடைந்து விட்டது. 'கோட்டு' போய் விட்டது! அதனால் ஏற்பட்ட கடன் மாத்திரம் அப்படியே நிரந்தரமாய் நின்று விட்டது! புதுக்கோட்டு தைத்த மௌசில் பழைய கோட்டைக் கவனியாமல் விட்டு விட்டேன்; அதை இப்போது திடீரென்று உபயோகிக்க முடியாமல் வேறு திண்டாடுகிறேன்!

என் போன்ற குடும்பஸ்தர்களுக்கு என்றைக்குத்தான் விமோசனம் ஏற்படுமோ தெரியவில்லை! பத்து வருஷங்களுக்கு முன்னிருந்த சூழ்நிலை இன்னும் பத்து வருஷங்களுக்குப் பிறகாவது வரும் என்று நம்ப வழியிருந்தால், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கடன் கடலில் மூழ்கியவாறே தப்பிக்கலாம்! ஆனால் அந்த நம்பிக்கைக்கும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

திருநெல்வேலி
30—4—50 சுவாமிநாதன்

○●○

★ மிச்சமாகும்!

பொருளாதார நெருக்கடி மிகுந்த இச் சமயத்தில் எந்தெந்த வகைகளில் சிக்கனம் செய்ய முடியுமோ, அவ்வழிகளை யெல்லாம் ஆராய்ந்து சர்க்கார் இலாகாக்களிலெல்லாம் செய்யவேண்டியது மிக மிக அவசியம். ஆனால் நடைமுறையில் அந்த எண்ணத்துக்கு நேர்மாறாக இருந்துவருகிறது. சாதாரணமாக ஒரு நாற்காலி செய்வதற்குக் கூலியுட்பட ரூ. 8 செலவாகுமென்றால், சர்க்கார் காரியாலயத்திற்கென்றால் ரூ. 12 அல்லது ரூ. 15–க்குக் குறையாமல் ஆகிறது. அதுவும் "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்ற முறையில் தான் சாமான் செய்யப்படுகிறது. சாமான்கள் செய்துகொடுக்கும் ஆசாரியும் சர்க்கார் காரியாலயத்திற்கென்றால் வெகு அலட்சியமாகப் போலியாகச் செய்கிறான். அதைச் செய்யக் கொடுத்த சர்க்கார் உத்தியோகஸ்தரும் 'நமக்கென்ன?' என்ற முறையில் நடந்து கொள்கிறார். குடியரசு நாட்டில் அவ்வாறு நடக்க இனிமேல் அனுமதியளிக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புணர்ந்து நடந்துகொண்டால்தான் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முடியும்.

நிற்க, ரயில்வேயில் கீழ்க்கண்ட மாற்றத்தைச் செய்தால் ஏராளமான தொகை மிச்சமாகுமெனக் கருதுகிறேன். எல்லா ரயில்வே நிலையங்களிலுமுள்ள கக்கூஸ்களில் 'புருஷர்கள்' 'ஸ்திரீகள்' என்று எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை 'ஆண்' 'பெண்' என்ற இரண்டே எழுத்துக்களில் குறிப்பிட்டால் வருஷா வருஷம் வர்ணத்துக்காகவும், எழுத்துக் கூலிக்காகவும் ஆகும் செலவில் கணிசமான தொகை குறையுமெனக் கருதுகிறேன். ரயில்வே நிர்வாகிகள் கவனிப்பார்களா?

கோவை
30—4—50 க. சண்முகசுந்தரம்

○●○

உடனே கவனிக்கவும்

திருநெல்வேலி ஜில்லாவில், தென்காசி, மேலப்பாவூர், கடையநல்லூர், ஆலங்குளம் மதவக்குறிச்சி, கங்கை கொண்டான் பிர்க்காவிலுள்ள சிற்றாறு அதன் உப நதிகளின் பாசனத்தின் கீழுள்ள சுமார் 30,000 ஏக்கரா நன்செய் நிலங்கள் கடந்த சில வருஷங்களாக ஆற்றில் தண்ணீர் இல்லாததால் தீய்ந்து வருகிறது.

இவ்விதத் தீய்வுகள் ஏற்படுவதால் ஆற்றின் உற்பத்தி ஸ்தானத்தை ஸ்தல இஞ்சினீயர்கள் பார்வையிட்டுத் தகுந்த ஏற்பாடு தாற்காலிகமாகவாவது செய்தால் இவ்விதத் தீய்வுகளைத் தவிர்க்கலாம்.

தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்காமல் காலதாமதம் செய்தால் மேற்படி பிரதேசத்திலுள்ள சுமார் 2 லட்சம் ஜனத்தொகையும் உணவின்றித் தவிக்க நேரிடும்.

கங்கைகொண்டான்
30—4—50 சுப்பிரமணியம்

ஜனாப் கருத்த ராவுத்தர்

★

உத்தமபாளையம் போர்டு உயர் நிலைப் பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்காக எழுபத்தையாயிரம் ரூபாய் வழங்கிய வள்ளல் ஜனாப் கருத்த ராவுத்தர் அவர்களின் கல்வித் தொண்டைப் பாராட்டுகிறோம்.



ஒருவரிடம் காட்டிப் பொருத்தம் பார்த்து உத்தமப் பொருத்தம் என்று சொல்லப்படும் அதே ஜாதகம் பிள்ளை வீட்டாரின் ஜோஸ்யருக்குப் பொருத்தமாகத் தோன்றாது. இதன் மர்மம் என்ன? பெண்ணைப் பெற்றவர்களுக்கும் தன் பெண் நன்றாக வாழ வேண்டுமென்றுதானே இருக்கும்? இந்த ஜாதகப் பைத்தியத்தால் என்போன்ற எத்தனை பெண்கள் விவாகமாகாமல் இருக்கின்றனர் தெரியுமா? இந்தத் தொல்லை என்றுதான் நம் நாட்டிலிருந்து தொலையுமோ? ஜாதகம் பொருந்தி விவாகமானவர் எல்லோரும் நன்றாக வாழ்கிறார்களா? முற்காலத்தில் நம் நாட்டில் எத்தனை வீராங்கனைகள் சுயம்வரம் செய்து கொண்டார்கள்? அவர்கள் நன்றாக வாழவில்லையா? பல விஷயங்களில் முற்போக்காக இருக்கும் நம் பாரத தேசம் ஏன் இந்த விஷயத்தில் பின்னோக்கிச் செல்கிறது? பெண்ணும், பிள்ளையும் வயது வந்தவர்கள். அவர்கள் இருவரின் மனப் பொருத்தத்தைப் பார்த்து மணம் முடிக்கலாகாதா? ஜாதகப் பொருத்தத்தால் மனம் பொருந்தாத இருவரை இணைப்பதில் என்ன லாபம்? மனமொத்த வாழ்வே மேலான இன்பம். இனிமேலாவது ஜாதகத்தை அலசாமல் பெற்றோர்கள் தங்கள் மக்களின் மனப்படி மணம் செய்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெற்றோர்களின் ஜாதகப் பைத்தியம் தெளிந்தா லொழிய என்போன்ற இளம் பெண்கள் வாழ வழியில்லை. ஆதலால் கடவுள் அருளால் அப்படிப்பட்ட ஒரு காலம் நம் நாட்டில் வெகு விரைவில் வரவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்.

எர்ணாகுளம்
2—6—50

என். சுந்தராம்பாள்

○●○

★ நல்லவேளை: நானல்ல!

ஏப்ரல் 30உ 'கல்கி' இதழில் வெளியான 'குடும்பரால் பேட்டியை'க் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. உங்கள் விசேஷ நிருபர் என்னைத்தான் பேட்டி கண்டு எழுதிவிட்டாரோ என்று திடுக்கிட்டேன். இருபத்தி நான்கு மணி நேரமும் குடும்பக் கவலையிலும், பற்றாக்குறையிலும், கடன் பளுவிலும் லயித்திருக்கும் எனக்கு ஞாபக மறதி இருப்பது சகஜந்தானே? ஒரு வேளை நானே பேட்டி கொடுத்துவிட்டு அதைப் பற்றி மறந்து விட்டேனோ என்று நினைத்தேன்! அவ்வளவு நிதர்சனமாக என் நிலைமை — என், என்னைப் போன்ற எத்தனையோ லட்சம் மத்தியதர வகுப்பினரின் நிலைமையை அந்தப் பேட்டி விளக்கி யிருந்தது.

முதல் தேதியை நினைத்தால் அது ஏன் வருகிறது என்றுதான் தோன்றுகிறது. நூற்றிருபத்தொன்பது ரூபாய் ஐந்தணாவைக் கையில் வாங்கியதும், (என் சம்பளம்) மனத்திரையில் அதைச் சூறையாட, புது சினிமா படத்தைப் பார்க்கப் பிரும்மாண்டமான க்யூவில் நிற்கும் கூட்டம்போல் கடன்காரர்கள் காட்சி யளிக்கிறார்கள்! வீட்டுக்காரன், பால்காரன், தயிர்க்காரி, மளிகைக் கடைக்காரன் இவர்களெல்லாம் எப்படித்தான் முதல்மாதம் முழுதும் நம்மை நம்பி இருந்தார்களோ என்று வியப்பு ஏற்படுகிறது. எல்லாவற்றையும் பகிர்ந்தளித்துவிட்டு, முதல் வார ரேஷனையும் வாங்கிப் போட்டுவிடுவேன். அவ்வளவுதான்! பணத்துடன் மன நிம்மதியும் காலி! அடுத்த இரண்டு வார ரேஷன்களைத் தலைகீழாக நின்று பணம் கடன் வாங்கி வாங்குவேன். கடைசி வார ரேஷனை எத்தனையோ மாதங்கள் வாங்கமுடியாமலே விட்டுவிட்டுப் பட்டினியுடன் இருந்திருக்கிறோம்!

எனக்கு வெற்றிலை போடும் பழக்கம்கூட இல்லை. என் குழந்தைகள் கெஜம் எட்டணாவில் விற்கும் சாதாரண துணிகளைக் கண்டு சந்தோஷமடையக் கூடியவர்கள். என் மனைவி, பட்டுப் புடவை என்பதை கனவிலும் நினைத்தறியாள்! அப்படி இருக்கும் எங்கள் வாழ்க்கை கடன் என்னும் கடலில்தான் மூழ்கிக்கொண்டு போகிறது. அதற்குக் காரணம் 'நாலுபேர் பார்வைக்கு கண்டமாக இருக்கவேண்டும்' என்று நம் உள்ளத்திலிருக்கும் ஆசைதான்! நாம் பட்டினியாக இருக்கும் போது அந்த 'நாலுபேர்' வந்து ரேஷன் அரிசி வாங்கித் தருகிறார்களா? இல்லவே இல்லை! இரண்டாவதாக விலைவாசிகள்! அது எப்போதுதான் கண் திறந்து பார்க்குமோ?

இரண்டு வேஷ்டி, இரண்டு சட்டை, ஒரு கிழிசல் கோட்டுடன் இரண்டு வருஷங்கள் கழித்து என்னை மூன்று மாதங்களுக்கு முன் ஒரு சபலம் பிடித்தது. இரண்டு சட்டைகளும் கொஞ்சம் முதுகுப்பக்கம் விட்டுப்போயிருந்தாலும், கோட்டும் பின்பக்கம் பெரிய ஆப்பரேஷனுக்குத் தயாராய் விட்டதாலும், ஒரு புஷ்கோட் தைத்துக் கொண்டால், கோட், ஷர்ட், இரண்டையும் ஒதுக்கிவிடலாமே என்று நிர்மானித்தேன். ஆறு ரூபாய்க்கு எங்கு போவது? தயிர்க்காரிக்குக் கொடுக்க வேண்டியதில், மூன்று ரூபாய் மளிகைக் காரனுக்குக் கொடுக்க வேண்டியதில் மூன்று ரூபாய், எடுத்து 'கோட்டு' தைத்தேன் (சாதாரண மட்ட ரகம்!). அடுத்தமாதம் தயிர்க்காரி மளிகை பாக்கியை சரிசெய்யலாமென்று எண்ணினேன்! ஆனால் அடுத்த மாதம் நான் பணம் கொடுப்ப

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "நல்லவேளை: நானல்ல!" என்ற கடிதம் எழுதிய திருநெல்வேலி ஸ்ரீ சுவாமிநாதனுக்கும், "மிச்சமாகும்!" என்ற கடிதம் எழுதிய கோம்பை ஸ்ரீ க. சண்முகசுந்தரத்துக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

இயங்கும் சிறு இயந்திரங்களில் ஷூ லேஸ் (Shoe Lace), எலாஸ்டிக் ஸ்ட்ரிங் (Elastic String), எலாஸ்டிக் பாண்டு (Elastic Band) முதலியன செய்தலும், பிரம்புகளினின்று பொத்தான்கள், ஊசிகள், ப்ளைவுட் (Plywood) செய்தல், தகரத்திலிருந்து மோட்டார்கார் போன்ற விளையாட்டுச் சாமான்களைச் சிறு இயந்திரங்களின் உதவியினால் செய்தல், சாதாரண இயந்திரங்களினின்றும் விசை இயந்திரங்களினின்றும் எண்ணெய் ஆட்டி எடுத்தல், இரும்பு ஆணிகள் செய்தல் இவ்விதம் பல தொழில் முறைகளை மேற்படி முகாமில் ஜப்பானிய நிபுணர்கள் நிறுவி அகதிகளுக்குக் கற்பித்து வருகிறார்கள். இவையாவும் முதலில் கூறியுள்ளபடி குடிசைத் தொழிலுக்கு உகந்ததாக இருத்தலைக் காணலாம்.

மேற்சொன்ன தொழிலியல்கள் யாவும் நமக்குப் புதியன அல்ல. ஆனால் புதுமையையும் எளிமையையும் அடிப்படையாகக் கொண்ட முறைகளில் ஜப்பானிய நிபுணர்களால் பயிற்சியளிக்கப் படுகின்றன. பல்முறை ஜப்பானுக்குச் சென்றுள்ள ஸ்ரீ சமன்லால் என்னும் இந்தியர் தாம் எழுதியுள்ள 'ஜப்பானின் குடிசைத் தொழிலும் விவசாயமும்' என்ற புத்தகத்தில் ஜப்பானிய நிபுணரான நாகாய் என்பவர் இந்தியாவுக்கு அனுப்பிய செய்தியைக் கூறியிருக்கிறார். அச் செய்தியில் நாகாய் "சிறிய தொழிலியல்களையே அடிப்படையாகக் கொண்டது எங்களது தேசத்தின் பொருளாதாரம். வர்த்தக ஸ்தாபனத்தின் (Board of Trade) தலைவர் என்ற முறையில், பெரிய தொழிலியல் திட்டங்களுக்குப் பதிலாகச் சாத்திய பூர்வமான சிறிய தொழிலியல்களை இயற்கை வளம் மிகுந்த உங்களது நாட்டிற்குகந்ததாக ஏற்படும்படி உங்களது சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இச் செய்கையினால் தான் இந்திய நாட்டின் பொருளாதார நிர்மாணத்திற்கு ஸ்திரமான அஸ்திவாரமிட்டதாகும்" என்று கூறியுள்ளார். தற்சமயம் ஜப்பான் தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள இயந்திரங்களின் உதவியினால் குடிசைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானியரால் பயிற்சியளிக்கப்படும் முறைகள் அகதிகளுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்குமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

வட்ட மேஜை

யாருக்கு நகைப் பைத்தியம்!


'கல்கி' இதழ்களிலும் மற்ற புஸ்தகங்களிலும் பெண்களைப் பற்றியும் அதிலும் பெண்களின் நகை, புடவை பைத்தியத்தை விளக்குவதாகவும் அனேக ஹாஸ்யத் துணுக்குகள் ஓயாமல் வந்து கொண்டேயிருக்கின்றன. அவைகளெல்லாம் இக்கால வாழ்க்கைக்குப் பொருத்தமாகவே இல்லை. பழைய காலத்தில் நகையணிவது உயர்வாகக் கருதப்பட்ட நாளில் மாமியார், நாத்தனார் என்று பல பெரியவர்களின் கீழ் அடங்கியிருக்கும் பெண் (நாட்டுப் பெண்) தன் கணவனின் பணம் பல பேரால் அழிக்கப்படுவதைவிட ஒரு நகையாகவோ புடவையாகவோ வாங்கினால் அது தனக்கு அலங்காரப் பொருளாவதுடன் ஒரு சேமிப்பாகவும் ஆகுமென்று தன் கணவனைப் புடவை, நகைக்காகப் பல விதங்களில் நச்சரித்திருக்கலாம். ஆனால் தனித் தனியாகக் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்தும் இக்காலில் நகை ஓர் சுமையாகவும் கர்நாடகமாகவும் கருதுகிறார்கள். ஆகையால் அத்தகைய ஹாஸ்யங்கள் இந்தக் காலத்துக்கு அவ்வளவாகப் பொருத்தமாக இல்லை. என் கணவர் எதாவது ஒரு புடவை வாங்கிக் கொண்டு வந்தாலும், "அனாவசியமாக எனக்கு எதற்கு இப்பொழுது புடவை? அந்தப் பணத்துக்கு நீங்கள் எதாவது உடைகள் தைத்துக் கொண்டு இருக்கலாமே" என்றுதான் நான் சொல்வது வழக்கம். என் சகோதரிகளும் தோழிகளும் கூட இப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் தயவு செய்து காலத்துக்கேற்ப உங்கள் ஹாஸ்யத் துணுக்குகளையும் மாற்றினால் நன்றாக இருக்கும். அதிலும் இப்பொழுதெல்லாம் ஆண்கள்தான் தங்கள் உடைகளுக்காகப் பணத்தை நிறைய செலவிடுகிறார்கள்.

மைலாப்பூர்
3—5—50
ஜெயலக்ஷ்மி ராஜாமணி

○●○

காலம் மாறுமா?

நான் ஓர் இளம் பெண். விவாகம் இன்னும் முடியவில்லை. என் தந்தை எனக்காக வரன் தேடி அலுத்துவிட்டார். ஜாதகப் பைத்தியம் பிடித்தலையும் பிள்ளை வீட்டாரை எப்படிச் சரிக்கட்டுவது? நாங்கள் ஜாதகத்தை



ஜப்பான் தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள இயந்திரங்களின் உதவியினுல் குடிசைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானிய நிபுணர்கள் அகதிகளுக்குப் பயிற்சி அளிப்பதை பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீமதி ராஜகுமாரி அமிர்தகௌரி, ஸ்ரீமதி இந்திரா காந்தி முதலியோர் பார்வையிடுகின்றனர்.

முக்கிய பாஷைகளில் ஒன்ருன ஹிந்தி போதிப்பதில் எதிர்ப்புக் காணும் நமக்கு இந்த விஷயம் அறிவூட்டுவதாகும். நம்மில் பலர் ஹிந்தி மட்டுமின்றி இதர அந்நிய பாஷைகளைக் கற்றுக் கொள்ள ஊக்க மளிக்கும்.

"தாங்கள் இந்தியா வந்தபின் தங்களது அநுபவத்தினுல் ஏற்பட்ட முக்கிய அபிப்பிராயம் என்ன?" என்று முதலாக அவரைக் கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில் "இந்திய நாடு சுபிட்சமடைய வேண்டுமென்ருல் இந்திய யுவர்கள் தங்களது வேலைகளிலும், தங்களது நாட்டின் நன்மைக்கான வேலைகளிலும் மிக்க சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே எனது முக்கியமான அபிப்பிராயம்" என்ருர். இந்த வாக்கை நாம் கவனித்து இதிலுள்ள பொருளை உணர வேண்டியது அவசியம். பின்பு அவரிடம் நான் அவர்களது தேசத்திற்குச் சென்று தொழில் முறைகளை நேரில் காண விரும்புவதாகக் கூறினதற்கு, அங்கு ஜப்பானியர்களிடமிருந்து வேண்டிய உதவிகளை எதிர் பார்க்கலாம் என்று சொன்னுர். "ஜப்பானில் ஒரு விஷயத்தில் மாத்திரம் நீங்கள் மிக அனுசரணையாக இருக்கவேண்டும். கால நியதியைச் சரியாகக் கடைப் பிடிக்கவேண்டும். (Punctuality). நாங்கள் ஒருவரை அவருடைய இந்த குணத்திலிருந்தே மதிப்பிடுகிருேம்" என்று முடித்தார். இதை அவர் சொன்ன பொழுது ஆர்னே எஸ். பியர்ஸ் என்ற ஆங்கிலேயர் தாம் எழுதிய 'இந்திய ஜவுளித் தொழிலியல்' என்ற புத்தகத்தில் இந்தியரையும் ஜப்பானியரையும் குறித்து வேற்றுமை காட்டுமிடத்தில் "ஜப்பானியருடன் கூடப் பிறந்தது கால நியதியைக் கடைப்பிடிக்கும் குணம் (Punctuality)" என்று எழுதியுள்ளது என் நினைவுக்கு வந்தது. குறிப்பிட்ட காலத்துக்கு வராமல் நேரங் கழித்து வருவதை "இந்தியக்கால நியதி" (Indian Punctuality) என்று சொல்லும் நிலைமையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிருேம். இதை அந்த ஜப்பானிய நிபுணரும் தம் அநுபவத்தில் கண்டறிந்திருக்கவேண்டும்.

அகதிகள் முகாமில் தற்சமயம் ஜப்பானியரால் நிறுவப்பட்டுள்ள தொழில் முறைகள் பின் வருவன. கந்தைத் துணிகளினின்று அதற்கான சில இயந்திரங்களின் உதவியினுல் பஞ்சு எடுத்து நூல் நூற்றல், கைத்தறிகள், காலினுல் இயங்கும் தறிகள், தானுகவே காடா மாற்றிக் கொள்ளும் தறிகள் இவைகளில் துணி நெய்தலும், மின்சார உதவியுடன்

அகதிகள் முகாமில் ஜப்பானியர்

எஸ். கிருஷ்ணமூர்த்தி, B. Sc. (Tech)


ஜப்பானிலிருந்தும் அகதிகள் நம் நாட்டிற்கு வந்துள்ளனரா என ஐயமுறுகிர்கள். நமது தலைநகரான டில்லிமா நகரில் அகதிகளின் நன்மைக்காக சர்க்காரால் ஏற்படுத்தப் பட்டுள்ள அகதிகள் தொழிற் பயிற்சி முகாமில் கற்பிக்க வந்துள்ள ஜப்பானியரைப் பற்றியதே இது. சில நாட்களுக்கு முன் டில்லி போக எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கு முன்பே அகதிகள் முகாமைப் பற்றிக் கேள்வியுற்றிருந்த நான், அதை நேரில் காண ஆவலுற்றிருந்தேன். அங்கு நான் பார்த்தவைகளைக் குறிப்பாக இங்கு எழுத முற்பட்டிருக்கிறேன்.

டில்லி ஸ்டேஷனிலிருந்து சுமார் ஏழு காத தூரத்தில், மதுரா செல்லும் மார்க்கத்தில், உள்ள 'ஆரப் கி சாரா' என்ற புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் பயிற்சி முகாம் உள்ளது. இது பண்டைக் காலத்தில் நம் தேசம் வரும் அராபியர் தங்கிச் செல்லும் இடமாக இருந்திருக்கிறது. இந்தப் பயிற்சி முகாம் தொழில் அபிவிருத்திக்கென ஏற்பட்டதல்ல. தங்களது உரிமைகளை இழந்து தாயகத்தை விட்டு வந்துள்ள அகதிகள் நம் நாட்டில் புது வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு அவர்களுக்கு ஒரு தொழில் முறையையும், பயிற்சியையும் அளிக்க நோக்கமாகக் கொண்டதே இந்த முகாம். சிறிய முதலைக் கொண்டு, வாழ்க்கைக்கு அவசியமான பண்டங்களை, கைத்தொழில் முறையிலேயோ அல்லது ஓரளவில் மின்சார உதவியுடன் கூடிய குடிசைத் தொழிலிலேயோ இங்கு கற்பிக்க முயலுகிறார்கள்.


குடிசைத் தொழிலும், இயந்திரத் தொழிலுமான இரண்டையும் பிரித்துத் தனித் தனியாக வைக்காமல் கூட்டாக ஒன்றுக்கு மற்றொன்று உதவியாக இருக்கும்படி ஏற்படுத்தியுள்ளனர். தொழிலியலில் பெருவாரக முன்னேறியுள்ள நாடு ஜப்பான். அத்தகைய நாட்டிலிருந்து வந்துள்ள சிலர் தற்சமயம் அகதிகள் தொழில் பயிற்சி முகாமில் போதகர்களாக உள்ளனர். ஒரு காலத்தில் குடிசைத் தொழில் சிறந்தோங்கிக் கிராமங்கள் இன்புற்றிருந்த நாட்டில் இருக்கும் நாம் கைத் தொழில் முறைகளை அறிந்துகொள்ள அந்நியரை எதிர்நோக்க வேண்டியது அவசியமா என்ற கேள்வி எழலாம். இதில் தப்பில்லை. நம் நாடு முன்னேற வேண்டுமானால் பழமையின் மேன்மையைப் போற்றுதல் மாத்திரம் போதாது. புதிய முறைகளைச் சேர்த்து நம் நாட்டிற்கும், இப்பொழுது நாம் இருக்கும் நிலைக்கும் உகந்ததாக நம் தொழிலியலை அமைக்க வேண்டியது அவசியம். இதைப் பின் பற்றியதாகவே டில்லி அகதிகள் பயிற்சி முகாமின் முறை காணப்படுகிறது.


இந்த முகாமில் தற்சமயம் ஏழு ஜப்பானிய நிபுணர்கள் நியமிக்கப்பட்டுத் தொழிலியல் முறைகளில் பயிற்சியளிக்கின்றனர். சுமார் இருநூறுக்கு மேற்பட்ட அகதிகள் குடிசைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பலவிதமான தொழில் முறைகளில் ஆறு மாத காலத்துக்குப் பயிற்சியளிக்கப் படுகின்றனர். இதனால் பண வசதி உள்ளவர்கள் தாங்களாகவே முதல் போட்டுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும் மற்றவர்கள் அந்தத் தொழிலை மேற்கொள்ளவும் சக்தியுள்ளவர்களாகின்றனர்.

இந்த முகாமை நான் பார்வையிட்டு வந்த பொழுது ஜப்பானிய நிபுணர்களின் பிரதமரான மாசயோஷி அடாசி என்பவரிடம் நான் சம்பாஷிக்க நேர்ந்தது. நம் நாட்டு மொழியோ அல்லது ஆங்கிலமோ தெரியாத இவரிடம் மொழி பெயர்ப்பாளரின் உதவியினாலேயே பேச முடிந்தது. முதலில் அவர் தமக்கு இந்திய மொழி தெரியாததைக் குறித்துச் சொல்லி விட்டு, "ஜப்பானில் இந்திய மொழிகள் தெரிந்தவர்களும் உளர்; இந்திய மொழிகளில் சிலவற்றைப் போதிக்கச் சில கல்வி ஸ்தாபனங்களில் ஏற்பாடுகள் உண்டு" என்று சொன்னார். தென்னாட்டில் இந்தியாவின்



ஷூ லேஸ் முதலியன செய்யும் இயந்திரங்கள்.


வடலூரும் இதுவோ!
வள்ளலார் சபை இதுவோ!
வாரிதியும் இவரேயோ!
நான்மறந்தேன் எனினும்எனைத் தான்மறவான் எனது நாயகன்என்று ஆடுகின்றேன் எனினும் இதுவரையும்
வான்மறந்தேன் வானவரை மறந்தேன் மால்அயனை மறந்தேன் நம்உருத்திரரை மறந்தேன் என்னுடைய
ஊன்மறந்தேன் உயிர்மறந்தேன் உணர்ச்சியெலாம் மறந்தேன் உலகம்எலாம் மறந்தேன் இங்குஉன்னை மறந்தறியேன்
பால்மறந்த குழவியைப்போல் பாரேல் இங்கெனையே பரிந்து நினதருட்சோதி புரிந்து மகிழ்ந்தருளே



"ஸ்திரீகளுக்குப் பேச்சுச் சுதந்திரம் வேண்டும்." —பத்திரிகைத் தலைப்பு

இதைப் பார்த்துவிட்டு மீன்கள் "எங்களுக்கு நீச்சுச் சுதந்திரம் வேண்டும்" என்று கேட்கத் தொடங்கலாம்.

★

சமீபத்தில் நடந்த பிரிட்டிஷ் பட்ஜெட் விவாதத்தின்மீது ஓட்டு எடுத்தபோது, ஐந்தே ஐந்து ஓட்டு மெஜாரிட்டியால்தான் தொழிற்கட்சி சர்க்கார் ஜயித்தது. தொழிற்கட்சி சர்க்கார் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆஸ்பத்திரியில் நோயுற்றுக் கிடந்த தங்கள் சகா அங்கத்தினர்களைக்கூட சபைக்குக் கொண்டு வரவேண்டியதாயிற்றாம்.

அடுத்தாற்போல், சட்டசபையில் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த தங்கள் சகாக்களை ஆஸ்பத்திரி நோயாளிகள் திரும்ப ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்க வேண்டும்.

★

"இங்கிலாந்திலுள்ள பிராட்மோர் பைத்தியக்காரர்கள் சென்ற வருஷம் மட்டும் 1,400 புஸ்தகங்கள் படித்தார்கள்."

—செய்தி

பழைய பைத்தியத்துடன் புதிதாகப் புஸ்தகப் பைத்தியமும் சேர்ந்து கொண்டது போலும்!

★

"வகுப்பு உணர்ச்சியைத் தூண்டும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களை எச்சரித்து சர்க்கார் ஒரு சுற்றறிக்கை விடவேண்டும்."

—ஒரு பிரசங்கி

"எல்லா வகுப்பும் இங்கு ஒன்றே" என்கிற உணர்ச்சியை அதிகமாய்த் தூண்டினால், மாணவர்கள் பரீட்சையில் தேறுவதற்குத் தூண்டுதல் எங்கே என்று ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் கேட்கிறார்.

★

ஸ்ரீ பிரகாசம் குண்டூரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது, "என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதா? சென்னை மாகாண முதல் மந்திரி ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாமீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதா? இந்தப் பிரச்னையை அடிப்படையாக வைத்துப் பொது ஜனங்களிடையே தேர்தல் நடத்திப் பார்ப்போமே!" என்று வீராவேசத்துடன் சபதம் செய்திருக்கிறார்.

அப்படி தேர்தல் நடத்தி, பொதுஜனங்கள் ஸ்ரீ பிரகாசத்தின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறிவிட்டால், ஸ்ரீ பிரகாசம் அடுத்தாற்போல் "என் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதா, பொதுஜனங்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதா?" என்ற பிரச்னையைக் கிளப்பக்கூடும்!

"இருக்கூர் படியல்காட்டுப் பிரதேசத்தில் கம்யூனிஸ்டுகளுக்கும் கான்ஸ்டபிள்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் இரு கான்ஸ்டபிள்களுக்குக் காயமேற்பட்டது... காயம் பட்டவுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார் நமது நிருபர்."

—ஒரு பிரபல தினப்பத்திரிகை

நன்றாய் வேண்டும் நமது நிருபருக்கு! காயம் படுகிற இடத்தில் இவருக்கு என்ன வேலை?

★

"மத்திய சர்க்காரில் ஸ்ரீ விஸ்வாஸ் மந்திரியானார்!" —டில்லிச் செய்தி

சில மந்திரிகளைப் போலல்லாமல் கனம் விஸ்வாஸ் அவர்கள் மத்திய சர்க்காரிடம் விஸ்வாஸத்துடன் நடந்து கொள்வார் என்று எதிர்பார்க்கலாம்.

★

"கிரிக்கட் வீரர் விஜயமர்ச்செண்டுக்கும் ஸ்ரீமதி சந்திர பிரபாவுக்கும் திருமணம் நடந்தது. ஸ்ரீமதி சந்திரபிரபா இருபத்தோரு மாதங்களுக்கு முன் ஒரு கிரிக்கட் மைதானத்தில் ஸ்ரீ விஜயமர்ச்செண்டிடம் கையெழுத்து வாங்கும்போது அவர்மீது காதல் கொண்டாராம்." —பத்திரிகைச் செய்தி

இனிமேல் எந்தப் பெண்மணியும் ஸ்ரீ விஜயமர்ச்செண்டிடம் கையெழுத்து வாங்காமல் ஸ்ரீமதி சந்திரபிரபா பார்த்துக் கொள்ள வேண்டும்.

★

"மிளகாய்ப் பொடியில் செங்கற் பொடியைக் கலப்பதும், கடலைக் கொட்டையில் களி மண்ணினால் செய்த கடலை உருண்டைகளைச் சேர்ப்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இவ்வாறு செய்பவர்கள் மொத்த வியாபாரிகளா, சில்லறை வியாபாரிகளா என்றுதான் தெரியவில்லை" என்று திருச்சி ஜில்லா கலெக்டர் ஸ்ரீ டி. ஜே. ஜேக்கப் கூறுகிறார்.

யார் செய்தாலும் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதோடு, குடிசைத் தொழிலையும் பேணி வளர்க்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

★

"யாதொரு முன் எச்சரிக்கையுமின்றி ஈரோட்டில் மண்மாரியும் ஆலங்கட்டி மழையும் பெய்தது." —ஈரோட்டுச் செய்தி

"இனிமேல் மண்மாரியோ ஆலங்கட்டி மழையோ பெய்வதாக இருந்தால் குறைந்தது ஒருவாரத்துக்கு முன்னதாகவாவது நோட்டீஸ் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மண்மாரியும் ஆலங்கட்டி மழையும் செல்லுபடியாகாது" என்று ஏன் ஒரு அவசரச் சட்டம் போடக்கூடாது?

அக்கப்போர்

புதுடில்லியில் அறுநூறு பேர்கள் கூடி, "இனிமேல் கறுப்பு மார்க்கெட் வியாபாரத்தில் ஈடுபட மாட்டோம், போலி ரேஷன் கார்டுகள் வாங்க மாட்டோம், லஞ்சம் வாங்க மாட்டோம், டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ய மாட்டோம், உணவில் கலப்படம் செய்ய மாட்டோம்" என்றெல்லாம் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்களாம்.

இந்தச் செய்தியைப் படித்துவிட்டு, "அதற்காக இத்தனை பொய்களைச் சொல்வானேன்? 'சட்டத்தை மீற மாட்டோம்' என்று ஒரே ஒரு பொய் சொல்லியிருந்தால் போதாதா?" என்கிறார் ஒரு பழைய பெருச்சாளி.

★

"நம் நாடு சுபிட்சமடைய வேண்டுமானால் மேலும் வரிகளைப் போட வேண்டும்; மேலும் வரிகளைப் போட வேண்டுமானால் நம் நாடு சுபிட்சம் அடையவேண்டும்" என்று கூறுகிறார் கனம் கோபால செட்டி.

மேலும் வரிகளைப் போடாதிருந்தால் அதுவே பெரிய சுபிட்சம் என்று சொல்கிறார் நமது குடும்ப ராயர்.

★

"டாக்டர்கள் எல்லோரும் பட்டணங்களிலேயே குவிந்திருக்கிறார்கள். இவர்கள் கிராமங்களுக்குப் போகவேண்டும்."

—ஒரு கிராம முன்னேற்ற வாதி

கிராமங்களின் மேல் உங்களுக்கு என்ன ஐயா, அவ்வளவு கோபம்?

★

"அமெரிக்காவில் உங்களுக்கு எது மிகவும் அக்கறையான விஷயம்?" என்று பேகம் லியாகத் அலிகானைக் கேட்டதற்கு அவர் சிரித்துக் கொண்டே, "அமெரிக்கப் பெண்களைப் பார்ப்பதில்தான் எனக்கு அக்கறை. ஆனால் அமெரிக்கப் பெண்களை இங்கு அதிகம் காணவில்லையே!" என்று சொன்னாராம். — ஒரு செய்தி.

பாகிஸ்தான் பிரதம மந்திரி தம்பதிகள் வருகையை முன்னிட்டு அமெரிக்கப் பெண்கள் எல்லாரும் 'பர்தா' போட்டுக் கொண்டு விட்டார்களா, என்ன?

★

"சர்க்கரை ஊழல் பற்றி விசாரணை நடத்தப்படும்." —பத்திரிகைச் செய்தி

இது ஒரு ருசிகரமான செய்திதான்!

"கனம் மாதவமேனன் ஒரு மலையாளப் பத்திரிகையில் மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் உதவி ஆசிரியராக இருந்தார்."

—செய்தி

அந்த மலையாளப் பத்திரிகையில் இருந்த காரணத்தினால்தான் கனம் மாதவ மேனனுக்கு மலை போன்ற கல்வி இலாகாப் பிரச்னைகளைச் சமாளிக்க முடிகிறது!

★

"யானை விற்பனைக்குத் தயாராயிருக்கிறது." —விளம்பரம்.

"சாதாரணப் பண்டங்களெல்லாம் யானை விலை விற்கும்போது, யானை என்ன விலைக்கு விற்குமோ?" என்று ஒரு விவசாயி கேட்கிறார்.

★

ஸ்வீடன் தேசத்தில் என்கோபிங் என்ற நகரில் எலிகள் உபத்திரவம் பொறுக்க முடியவில்லையாம். எலிகளைக் கொல்வதற்காக விஷம் வைத்தும் அவை சாகவில்லை. ஆனால் விஷத்தைச் சாப்பிட்டுவிட்டு எலிகள் ஒன்றுக்கு இரண்டாகப் பெருகிவிட்டனவாம். இப்பொழுது பூனைகளால்கூட அந்த எலிகளை ஒன்றும் செய்ய முடியவில்லையாம். இந்த அதிசயத்தைக் கண்டு அவ்வூர் வாசிகள் திகைத்து விட்டார்களாம்.

இந்தியாவின் ஜனத்தொகை நாளுக்கு நாள் பெருகி வருவதையும் அரிசிப் பஞ்சமோ, கலவரங்களோ, உலக மகாயுத்தமோ நம் ஜனத்தொகைப் பெருக்கத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை யென்பதையும் பார்க்கும்போது, இந்தியாவில் நாம் என்ன விஷத்தைச் சாப்பிட்டோம் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

★

இதுவரை ஹைதராபாத் நைஜாமுக்கு 'உலகத்திலேயே பெரிய பணக்காரர்' என்ற பட்டம் இருந்து வந்தது. சமீபத்தில் அவருடைய சொத்துக்களைக் கணக்கெடுத்துப் பார்த்தபோது, அவை முப்பத்தைந்து கோடி ரூபாய்தான் பெறும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

முப்பத்தைந்து கோடி ரூபாய் உள்ள பணக்காரர்கள் உலகில் எத்தனையோ பேர் இருக்கலாம் அல்லவா? ஆகையால் நைஜாமுக்கு, 'உலகத்திலேயே பெரிய பணக்காரர்' என்ற பட்டம் இனிமேல் கிடைக்காது. அதனால் என்ன? 'உலகத்திலேயே பெரிய லோபி' என்ற பட்டத்தை அவரிடமிருந்து யாரும் அபகரிக்க முடியாதல்லவா?



வதனத்தை அதிக மழமழப்பும் அழகும் வாய்க்கச் செய்வதற்குள்ள இரட்டிப்பான வழி

பாண்ட்ஸ் இரு க்ரீம்களையும் உபயோகித்து இப் பிரசித்தமான இரு வகை சௌந்தரிய பராமரிப்பை நீங்கள் அனுசரிப்பதாயின் உங்கள் வதனம் மோகன எழில் வாய்ப்பது நிச்சயம். உங்கள் முகத்திற்கு இரண்டு க்ரீம்கள் தேவை—ஒன்று சுத்தம் செய்வதற்கு, மற்றது பாதுகாப்பிற்கு. இரவு அரிய தைலங்களடங்கிய பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம், பனியுள்ள அசிலையும் அழுக்கையும் நீக்கி முகத்தை சுத்தம் செய்ய. காலையில், அதிருபெயமான மெல்லிய பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம், மேனியைக் கறுக்கும் சூரியகிரணங்களினின்று உங்கள் முகத்தை பாதுகாக்க.

உங்கள் இருவித சௌந்தரிய பராமரிப்பு

பிரதி இரவும், முகமீது பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் தடவி, அதன் செழுமையான தைலங்கள் உள்ளிறங்கி மலினத்தை வெளியேற்றும்படி மெதுவாகத் தேயுங்கள். துடைத்து நீக்கி, முகத்தின் விசேஷ காந்தியை கண்ணாடியில் பாருங்கள்!

பிரதி காலையும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் லேசாகத் தடவுங்கள். இம்மெல்லிய க்ரீம் உடனே மறைந்து, ஓர் அதிருசிய படலமாகி பகல் முழுதும் உங்கள் சௌந்தரியத்தைப் பாதுகாக்கிறது.



பாண்ட்ஸ்

வியாபார விவரங்களுக்கு: L. D. ஸெய்மர் & கோ., (இந்தியா) லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — டில்லி — சென்னை — நேவா கோவா

ஸ்ரீ கோபாலசாமி ஐயங்கார் கேட்டுக் கொண்டிருப்பதுபோல் அவ்விஷயமாகப் பொது ஜனங்கள் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் ஒத்துழைத்ததின் பலனுகச் சமீப காலமாய்ப் பல விபத்துகள் உற்ற சமயத்தில் தவிர்க்கப்பட்டன என்பதைப் பத்திரிகைச் செய்திகளின் மூலம் எல்லோரும் அறிந்திருக்கலாம்.

பொதுஜனங்கள் ஒத்துழைப்பதோடு ரயில்வே சிப்பந்திகளும் தங்களுடைய கடமையை நன்கு உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். இந்திய ரயில்வேயில் பத்து லட்சம் தொழிலாளருக்கு மேல் இருக்கிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்யும் ஜனங்களுடைய உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய புனித கடமை தங்களைச் சார்ந்தது என்பதை அவர்கள் உணரவேண்டும். தங்களிடையே சில சதிகாரர்கள் இருப்பதையோ, அல்லது வெளியிலுள்ள சதிகாரர்களுக்குத் தங்களுடைய சகாக்கள் செவி கொடுப்பதையோ அவர்கள் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது.

இவ்வாறாக சர்க்காரும் ரயில்வே சிப்பந்திகளும் பொது ஜனங்களும் ஏகோபித்து நின்றால் ஒழிய, யாதொரு குற்றமும் செய்யாத அப்பாவி மக்கள் கொடிய விபத்துகளுக்குப் பலியாகும் அநியாயத்தைத் தடுக்க முடியாது.

ரயில் வண்டிகளைக் கவிழ்ப்போர் தங்களுடைய படு பாதகச் செயலால் என்ன லாபம் அடைகிறார்கள்? அதனால் அவர்களுக்கு என்ன பெருமை கிடைக்கிறது?

அவர்கள் செய்யும் அட்டூழியங்களால் மாபெரும் இந்தியக் குடியரசு ஸ்தம்பித்து நின்றுவிடாது.

அத்தகைய காரியங்களால் தேசம் நஷ்டம் அடைகிறது; பொதுஜனங்கள் உயிரை இழக்கிறார்கள்; அந்த அக்கிரமங்களைச் செய்வோருக்கும் அதனால் லாபமில்லை. இவ்வாறு ஒருவருக்கும் லாபமில்லாத, எல்லோருக்கும் துன்பத்தைக் கொடுக்கும் நாச காரியங்களைச் செய்வது எவ்வளவு கேடு? எவ்வளவு கொடுமை? எவ்வளவு மதியீனம்?

அட்டைப்பட விளக்கம்

சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள்!

பாமாலை பூமாலை பாடிச்சூடிக்
கொடுத்தநிருக் கோதையுடன் ஆடிர் ஊசல்!
கோயில்மணவாளரே ஆடிர் ஊசல்!

கல்யாண 'சீசன்' ஆரம்பமாகி விட்டது. காலையிலும் மாலையிலும் மேளச் சத்தம் நம்மை வரவேற்கிறது. ஆகவே நாமும் சற்றுக் கல்யாண வீட்டுக்குள் நுழைந்து கல்யாணப் பெண்ணைப் பார்ப்போம்.

கல்யாணப் பெண்ணை அவள் தோழிகள் எல்லாம் சூழ்ந்து கொண்டு கொம்மாளம் அடிக்கிறார்கள். ஒரு தோழி அவளுக்குத் தாழம்பூ வைத்துத் தலை பின்னி விடுகிறாள். இன்னொரு தோழி அவள் கையில் வளை அணிந்து சிங்காரம் செய்கிறாள். ஆனால் கல்யாணப் பெண்ணின் சிந்தனையோ இங்கே இல்லவே இல்லை!

தலை பின்னியானதும், அவள் கையில் கண்ணாடி எடுத்துத் தன் முகத்தைப் பார்த்துக் கொள்கிறாள். அவளுக்குப் பின்னி விட்ட தோழி, பின்னாலிருந்து கல்யாணப் பெண்ணின் முகபாவத்தைக் கண்ணாடியில் கவனிக்கிறாள்—ஆம், தான் பின்னி விட்டது, கல்யாணப் பெண்ணுக்கு தன் தோழிக்குத் திருப்தியை அளித்திருக்கிறதா என்பதைக் கவனிக்கத்தான்.

ஆனால் கல்யாணப் பெண்ணோ, "இப்படியெல்லாம் என் தோழிகள் சிங்காரித்திருக்கிறார்கள். இந்தச் சிங்காரமெல்லாம் அவருக்குப் பிடிக்குமா?" என்று எண்ணுகிறாள். "சற்று நாழிகையில் நம் பக்கத்தில் அவர் வந்து உட்காரும்போது, முகத்தைக் கவனித்தால் தெரிந்து விடும். அத்தனை பேர் நடுவில் அவர் முகத்தை எப்படிப் பார்ப்பது? ஆம், ஊஞ்சல் நடக்குமல்லவா? ஊஞ்சல் இப்படியும் அப்படியும் ஆடும்போது கவனித்து விடலாம். ஆனால் அப்போதும் நம் நாணம் அவர் முகத்தை எதிட்டுப் பார்க்க விடாதே! நம் தலையைக் கவிழ்த்தே வைத்திருக்குமே!" என மீண்டும் எண்ணுகிறாள்.

ஆம்; அவள் உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் எழுகின்றன. அவற்றையெல்லாம் சித்திரமாகத் தீட்டி மாளாது; விளக்கமாக எழுதி ஓயாது. நேயர்கள் கற்பனை செய்து கொள்ள வேண்டியதுதான். ஆயினும் ஒரு சில எண்ணங்களை நமது சித்திரக்காரர் 'சந்திரா' இந்த இதழ் அட்டையில் தீட்டியிருக்கிறார்.

காப்பாற்ற முன் வாருங்கள்

சில வாரங்களுக்கு முன் சென்னையிலிருந்து புறப்பட்ட கல்கத்தா மெயில் கோர விபத்துக்குள்ளானபோது தெய்வச் செயலாக அதிக உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்று ஆறுதல் அடைந்தோம்.

ஆனல் சென்ற வாரம் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற பஞ்சாப் மெயிலுக்கு நேர்ந்த பயங்கரமான விபத்து அத்தகைய ஆறுதலுக்கும் வழியில்லாமற் செய்து விட்டது.

இந்தியாவிலே சமீப வருஷங்களில் இத்தகைய கோரமான விபத்து ஏற்பட்டதே இல்லை. ரயில் வண்டிகள் ஒரு பாலத்தைத் தாண்டிச் செல்லுகையில் ஐம்பது அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து விட்டன என்றால், விபத்தின் பயங்கரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

இந்த விபத்துக்குக் காரணம் சதிகாரர்களின் வேலைதான் என்பதைப் பல பிரமுகர்களும் அதிகாரிகளும் நேரில் பார்வையிட்டு நிர்ணயித்திருக்கிறார்கள்.

விபத்தில் உயிர்ச்சேதம் அதிகமாக இருக்க வேண்டும் என்ற படுபாதக எண்ணம் கொண்டே குறிப்பிட்ட அந்த இடத்தில் பாவிகள் தண்டவாளங்களைப் பெயர்த்தனர் போலும்!

அந்த விபத்தில் பெண்கள் குழந்தைகள் உள்பட நூறுபேருக்குமேல் பலியாயினர் என்பதையும், காயமடைந்தவர்களின் தொகை இன்னும் அதிகம் என்பதையும் நினைக்கும்போது மனம் கொதிக்கிறது, நெஞ்சம் நடுக்கமடைகின்றது. யாதொரு குற்றமும் செய்யாத இந்த நிரபராதிகளுக்கு யமனாக இருந்த கொடும் பாதகர்கள் யார் என்ற கோபாக்கிரமம் பீறிட்டெழுகின்றது.

ஒருவருக்கும் தெரியாமல் தண்டவாளத்தைப் பெயர்த்து நிரபராதிகளைக் கொல்லும் குணம் படைத்த அவர்கள் கோழைகள் என்பதிலும் அர்த்தமற்ற வெறிபிடித்த பைத்தியக்காரர்கள் என்பதிலும் மாத்திரம் சந்தேகமில்லை.

ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் ரயில் விபத்துகள் நேர்ந்தால் அவற்றைக் குறித்துக் கலவரம் அடைய வேண்டிய அவசியம் இல்லை. ஆனல் சென்ற பல மாதங்களாக இந்தியாவில் அடிக்கடி ரயில் விபத்துகள் நேருவது சகஜமாகிவிட்டது. பல கோர விபத்துகளுக்கும் வெறிபிடித்த சதிகாரக் கூட்டமே காரணம் என்பதும் தெளிவாகி விட்டது. இத்தகைய விபத்துகளைத் தடுத்து நிரபராதிகளான ஜனங்களின் உயிர்களையும் தேசத்தின் சொத்துக்களையும் பாதுகாக்க வழியில்லையா?

* * *

ரயில் விபத்துகளைத் தடுக்கும் விஷயமாக இந்திய சர்க்கார் போக்குவரத்து மந்திரி கனம் என். கோபாலசாமி ஐயங்கார் சென்ற திங்கட்கிழமை வானொலி மூலம் பேசினர். ரயில் வண்டிகளைக் கவிழ்க்கும் சதிகாரர்களின் கொட்டம் அடங்குவது பொது ஜனங்களின் கையிலே இருக்கிறது என்று அவர் கூறினர்.

எளிதில் பிஷ் பிளேட்டுகளை அகற்றித் தண்டவாளத்தைப் பெயர்க்க முடியாமல் இருப்பதற்கான சில கருவிகளை அமைக்க உத்தேசித்திருப்பதாகவும், ரயில் பாதைகளைப் பரிசோதனை செய்யும் போலீஸ் சிப்பந்திகளின் தொகையை அதிகப்படுத்தப் போவதாகவும் போக்குவரத்து மந்திரி தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். எனினும் அத்தகைய முறைகளால் விபத்துகளைக் குறைக்கலாம் என்றாலும் அவற்றால் மாத்திரம் பூரண பலன் ஏற்பட்டு விடாது.

ரயில்பாதையின் இரு புறத்திலும் உள்ள கிராம ஜனங்களின் ஒத்துழைப்பைப் பெற முயற்சித்து வருவதாகவும், அதன் பலனாக விபத்துகளை வெகுவாகத் தடுக்கலாம் என்றும் போக்குவரத்து மந்திரி கூறியுள்ள யோசனை சிறந்தது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாக, இந்திய சர்க்கார் மிகவும் முன் ஜாக்கிரதையாகப் பல்வேறு முறைகளைக் கைக் கொண்டால்தான் புதிதாக ஏற்பட்டுள்ள இந்த விபரீதத்திலிருந்து ஜனங்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க முடியும்.

இந்தியாவில் ரயில் பாதைகளின் நீளம் நாற்பதாயிரம் மைல்களுக்கும் மேலாகும். மேற்படி பாதைகளில் இராப் பகலாக பதினாயிரக் கணக்கான ஜனங்களுடனும் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான முன்ன பண்டங்களுடனும் ரயில் வண்டிகள் செல்லுகின்றன. அவ்வளவு நீளமுள்ள பாதைகளைப் பாதுகாக்கும் பொறுப்புமுழுவதையும் சர்க்காரே வகிக்க முடியும் என்று எதிர்பார்ப்பது வீணாகும்.

புகார்களுக்கு ஆதாரம் இருக்கிறது என்பது அமெரிக்கத் தலைவர்களின் பேச்சுகளிலிருந்தே நன்கு தெரிகிறது.

• • •

இப்போது உருவாகி வரும் நெருக்கடி முற்றி நிலைமை எல்லை மீறிப் போய் விடாமல் உற்ற சமயத்தில் தடுப்பதற்கு வழி இல்லையா?

காலம் கடவாது அதற்குற்ற வழியைக் கண்டு பிடிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் காரிய தரிசி ஸ்ரீ எம். டிரைகிவ் லீ மாஸ்கோவுக்குத் தூது சென்றிருக்கிறார்.

ஸ்டாலினை நேரில் கண்டு உலக சமாதானத்துக்காக ஒத்துழைக்கும்படி வேண்டிக் கொள்வதற்காகவே அவர் மாஸ்கோவுக்குச் சென்றுள்ளார்.

ஐ. நா. பாதுகாப்பு சபையின் ஒவ்வொரு கூட்டத்தையும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா முதலிய ஒவ்வொரு தேசத்தின் தலைநகரில் கூட்டினால் தலைவர்கள் சந்தித்துப் பேச வசதி ஏற்படும் என்பது லீ தயாரித்திருக்கும் திட்டமாகும்.

அவ்வாறு ஒவ்வொரு கூட்டம் ஒவ்வொரு தலைநகரில் நடந்தாலும் ட்ருமனும் ஸ்டாலினும் சந்திப்பதற்கு வழி ஏற்படுமா என்பதே கேள்வி.

மகா யுத்தத்திலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கு முன், அகால மரணத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபையைக் காப்பாற்ற வேண்டிய உடனடியான பொறுப்பு ஸ்ரீ லீக்கு ஏற்பட்டிருக்கிறது!

"ஐக்கிய நாடுகள் சபை எல்லா நாடுகளுக்கும் சொந்தமான அகில உலக ஸ்தாபனமாக இருக்கவேண்டும் என்றே அமைக்கப்பட்டது. ஆனால், இப்போது அந்தச் சபையைத் தகர்த்து உலகத்தையே இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முயற்சி நடந்து வருகிறது. உலகத்தை மூன்றாவது மகாயுத்தப் படுகுழியில் தள்ளுவதற்கு மேற்படி போட்டியைக் காட்டிலும் சிறந்த பாதை வேறு எதுவுமில்லை! அந்தப் படுகுழியிலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழி பலம் பொருந்திய ஐக்கியநாடுகள் சபைதான். வல்லரசுகளுக்குள் நடந்து வரும் வாய்ச் சண்டை தீர்ந்தாலன்றி ஐ. நா. சபையைப் பாதுகாப்பதோ, மகாயுத்தத்தைத் தடுப்பதோ அசாத்தியமாகி விடும். ஆகையால் வல்லரசுகளுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த என்னால் இயன்றதைச் செய்ய முற்பட்டிருக்கிறேன்" என்று லீ கூறுகிறார்.

ஸ்ரீ லீயின் மாஸ்கோ தூது வெற்றி பெறாவிட்டால், ஐக்கிய நாடுகள் சபை உதிரி நாடுகள் சபையாக உருக்குலைவதைத் தடுக்க முடியாது. ஐ. நா. சபை உருக்குலைந்தால் ஸ்ரீ லீ கூறுவதுபோல் பயங்கரமான மூன்றாவது மகா யுத்தத்திலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவது மனித சாத்தியமில்லாத காரியம் ஆகிவிடலாம்.

வடலூர்த் திருவிழா

சென்ற மாதம் 24-ந் தேதி தமிழ் நாட்டின் கவனத்தை யெல்லாம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் சத்தியஞான சபையின் தூபி நீராட்டு விழா கவர்ந்துவிட்டது. அன்றையதினம் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் தலைமையில் தூபி நீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது வடலூரில் இருக்கும் தண்ணீர்ப் பஞ்சத்தையும் உணவு நெருக்கடியையும் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் சுமார் ஆறு லட்சம் ஜனங்கள் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து ரயிலிலும், காரிலும், கட்டை வண்டியிலும் கால் நடையுமாக பக்தியுடன் திரண்டு வந்து தூபி நீராட்டு விழா வைபவத்தில் கலந்துகொண்டு ஜோதி தரிசனம் செய்து பரவசமடைந்தனர்.

மேற்படி விழாவில் பக்தியுடன் கலந்து கொண்ட லட்சக்கணக்கான மக்களையும், பல முக்கிய பிரமுகர்களையும், சத்தியஞான சபையின் தூபி நீராட்டுக் காட்சியையும், சத்தியஞான சபையில் கருங்கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவையும், இந்தத் தூபி நீராட்டு விழா இவ்வளவு சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறுவதற்குப் பெரு முயற்சி செய்த ஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களையும் வேறு பக்கங்களில் வெளியாகி யிருக்கும் படங்களில் காணலாம்.

அதனால், மருந்துக் குவியல் எந்த விநாடி நிப்பொறி தெறித்துப் பற்றிக் கொள்ளுமோ என்ற பீதி உலகம் முழுவதும் சூழ்ந்திருக்கிறது.

இந்த நெருக்கடியான நிலைமைக்குப் பரிகாரம் ஏற்பட வேண்டுமாயின் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனும் ருஷ்யாவின் ஏக தலைவர் ஸ்டாலினும் சந்தித்துப் பேச வேண்டியது அவசியம் என்று உலக நாடுகளின் தலைவர்கள், சர்வதேச ராஜ தந்திரிகள் உள்பட எல்லோரும் கருதுகிறார்கள்.

தாங்கள் பரஸ்பரம் சந்தித்துப் பேச வேண்டியது உலக அமைதிக்கு அவசியம் என்பதை ட்ருமனும் ஸ்டாலினும் உணராமல் இல்லை.

ஆனால், எந்த இடத்தில் சந்தித்துப் பேசுவது என்பது பற்றியே இப்போது தகராறு ஏற்பட்டிருக்கிறது!

ட்ருமன் ஸ்டாலினைச் சந்தித்துப் பேச எந்த நிமிஷத்திலும் தயாராக இருக்கிறார். ஆனால் அவர் அதற்காக மாஸ்கோவுக்குச் செல்ல விரும்பவில்லை.

ஸ்டாலினும் ட்ருமனுடன் சம்பாஷிப்பதற்குச் சம்மதிக்கிறார். ஆனால் அவர் அதற்காக வாஷிங்டனுக்குப் போகப் பிரியப்படவில்லை.

ஐரோப்பாவில் ஸ்டாலினுக்கு விருப்பமான வேறு இடத்துக்குச் செல்லவும் ட்ருமன் தயாராக இல்லை.

அந்த விஷயத்தில் ட்ருமனுக்குத் தாம் எவ்விதத்திலும் சளைக்கக் கூடாது என்பது ஸ்டாலினின் சித்தாந்தம்!

இவ்வாறாக இரண்டு வல்லரசுகளின் தலைவர்களுடைய மாற்சரியமும் வீண் கௌரவமும் உலக அமைதிக்கும் சமாதானத்துக்கும் குறுக்காக நிற்கின்றன!

இந்நிலைமையில் நேரு-லியாகத் அலியின் உதாரணத்தை அமெரிக்க உள்நாட்டு மந்திரி போற்றிப் பாராட்டியிருப்பதிலோ, இந்தியா—பாகிஸ்தான் அடைந்துள்ள அற்புதமான வெற்றியின் ஓரளவு அமெரிக்காவுக்குக் கிடைத்தால்கூடப் போதும் என்று எதிர்பார்ப்பதிலோ ஆச்சரியமில்லை.

* * *

ட்ருமன் கோரும் இடத்தில் ஸ்டாலினோ, ஸ்டாலின் கோரும் இடத்தில் ட்ருமனோ சந்திப்பதில்லை என்று பிடிவாதமாக இருப்பதால், உலக நிலைமை நாளுக்கு நாள் நெருக்கடியான கட்டத்தை அடைந்து வருகிறது.

முதலாவது மகாயுத்தத்துக்கு முன்பும், இரண்டாவது மகாயுத்தத்துக்கு முன்பும் இருந்த பூர்வாங்க நிலைமையைக் காட்டிலும் இன்றுள்ள நிலைமை எவ்விதத்திலும் திருப்திகரமாக இல்லை.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹெர்பர்ட் ஹூவர் போன்றவர்கள், ஐக்கிய நாடுகள் சபையைக் கலைத்து விடவேண்டும் என்றும், பிறகு ருஷ்யாவை விலக்கிவிட்டு ஏதாவதொரு சர்வதேச சபையை அமைக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் சிங்கப்பூருக்கு விஜயம் செய்த அமெரிக்கக் கடற்படைத் தளபதி, மூன்றாவது உலக மகா யுத்தம் எந்த க்ஷணத்திலும் ஏற்படலாம் என்றும், அந்த யுத்தத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் ஒன்று சேருவது நிச்சயம் என்றும் கூறினார்.

சென்ற மகா யுத்தத்தின்போது பசிபிக் பிரதேசத்தில் அமெரிக்க விமானப் படைகளின் தளபதியாக இருந்து அமெரிக்காவின் வெற்றிக்கு முக்கிய காரணஸ்தராக விளங்கிய ஜெனரல் கென்னடி என்ன சொல்லுகிறார் என்பதைப் பாருங்கள்:

“ருஷ்யாவுடன் யுத்தம் ஏற்படப் போவது நிச்சயம். இன்னும் ஒரு வருஷ காலத்துக்குள் அமெரிக்காமீது போர் தொடுக்க ருஷ்யத் தலைவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கான யுத்த முஸ்தீப்புகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன” என்று ஜெனரல் கென்னடி கூறுகிறார்.

அரசியல் ஜோஸ்யர்களில் ஒரு சாரார் சமீபகாலத்தில் மூன்றாவது உலக மகாயுத்தம் ஏற்படக் காரணம் இல்லை என்று கூறுகின்றனர். மற்றொரு சாரார் தற்போதுள்ள நிலைமையில் மூன்றாவது மகாயுத்தம் தவிர்க்க முடியாத காரியம் என்று சொல்லுகிறார்கள்.

அது எப்படியாயினும், மேற்படி அமெரிக்கத் தளபதிகளின் கருத்தை அலட்சியம் செய்வதற்கில்லை.

போர்நாக் குறைக்குச் சமீபத்தில் ஓர் அமெரிக்க விமானத்தை ருஷ்யர்கள் வீழ்த்தியதால் இரு நாடுகளுக்கும் தகராறு முற்றி வருகிறது. அமெரிக்க எல்லைக் கடலிலே ருஷ்ய நீர்மூழ்கிகள் நடமாடி வருவதாகவும் பத்திரிகைச் செய்திகள் பயமுறுத்துகின்றன.

ஜப்பான், மலேயா முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளில் அமெரிக்கா இராணுவத் தளங்களை நிர்மாணித்து வருவதாக ருஷ்ய சர்க்கார் அடிக்கடி புகார் கூறி வருகிறார்கள். மேற்படி

தீப் பொறி தெறிக்குமா?

உலகப் பிரசித்தி பெற்ற இரண்டு வீரர்கள் தங்கள் தங்களுடைய சைன்யங்களோடு சென்று நீண்ட நேரம் அகோர யுத்தம் புரிந்தார்கள்.

ஒரு வீரர் போரில் படுதோல்வியடைந்து சிறைப்பட்டார்.

தம்முடைய வாழ்க்கையிலே அது வரையில் மகத்தான வெற்றிகளைத் தவிர தோல்வி என்பதையே கண்டறியாத அந்த வீரர் தோல்வி யடைந்து சிறையில் இருந்தபோதுதான், அவருக்கு ஞானம் உதயமாயிற்று.

"இந்த உலகத்திலே மற்றெல்லாவற்றையும் காட்டிலும் இரண்டு பெரிய சக்திகள் இருக்கின்றன. ஒன்று பட்டாக் கத்தி; மற்றொன்று ஆத்ம சக்தி. அந்த இரு சக்திகளும் மோதிக் கொண்டால் இறுதியில் ஆத்ம சக்தியே வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை" என்ற உண்மையை அவர் அனுபவ பூர்வமாகக் கண்டு பிடித்து உலகத்துக்குச் சொன்னார்.

மேற்படி யுத்தத்தில் வெற்றியடைந்து உலக சரித்திரத்திலே நிரந்தரமான புகழ் பெற்ற வீரர் என்ன சொன்னார் தெரியுமா?

"பூமியிலே மகா பயங்கரமானவை இரண்டு. போரில் தோல்வி யடைவது முதலாவது பயங்கரம்; இரண்டாவது பயங்கரம் போரில் வெற்றி பெறுவது" என்று தம்முடைய அனுபவத்தை எடுத்துக் கூறினார்!

தாங்கள் அனுபவ பூர்வமாகக் கண்ட உண்மையை அவ்வாறு பகிரங்கமாக எடுத்துக் கூறியவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல.

ஒருவர், பல போர்களிலும் வெற்றி பெற்று உலகம் முழுவதையும் நடுங்கச் செய்த சக்கரவர்த்தி நெப்போலியன்.

மற்றொருவர், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகவும் பிரதம தளபதியாகவும் இருந்த, நெப்போலியனைத் தோற்கடித்த வெல்லிங்டன் டியூக்.

நெப்போலியன் தோல்வி யடைந்த, வெல்லிங்டன் வெற்றி பெற்ற அந்தப் போரைப் பற்றி உலகம் முழுவதும் கீர்த்தி வாய்ந்த கவிகள் பலர் உருக்கமாகப் பாடியிருக்கிறார்கள்; இலக்கிய மேதாவிகள் பிரமாதமாக வர்ணித்திருக்கிறார்கள்; சரித்திராசிரியர்கள் சலிப்பின்றி அத்தியாயம் அத்தியாயமாகச் சர்ச்சை செய்திருக்கிறார்கள்.

உலக சரித்திரத்தை மாற்றியமைத்த அத்தகைய மகத்துவம் வாய்ந்த போரில் வெற்றி பெற்றவரும் தோல்வியடைந்தவரும் போர் பலனற்றது, பயங்கரமானது என்ற ஏகோபித்த முடிவுக்கு வந்தார்கள் என்பதைச் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

நெப்போலியன்-வெல்லிங்டன் போர் நடந்து நூற்று முப்பத்தைந்து வருஷங்கள் ஆகின்றன.

கொடிய ஆயுத வகைகள் அதிகம் இராத, பொது ஜனங்களை அதிகமாகப் பாதிக்காத அந்தக் காலத்து யுத்தத்தைப் பற்றியே சூரர்களில், உலக மகா வீரர்களில் இருவர் அவ்வாறு கூறியிருக்கிறார்கள் எனில், வெடிகுண்டு விமானங்களும், 'வி' பாணங்களும், அணு குண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் தோன்றியுள்ள இந்தக் காலத்து யுத்தம் எவ்வளவு நாசகரமானது என்பதையும் எவ்வளவு பயங்கரமானது என்பதையும் விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை.


* * *

"இந்தியாவும் பாகிஸ்தானும் சாதித்துள்ள காரியத்தைப் போல ஓரளவு எங்களால் சாதிக்க முடிந்தால் கூட அமெரிக்காவுக்கு 1950-ம் வருஷம் வெற்றிகரமானது என்றே நான் கருதுவேன்" என்று அமெரிக்க உள்நாட்டு மந்திரி ஸ்ரீ மன் அக்கீஸன் பகிரங்கமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்.

வீண் கௌரவத்தைப் பாராட்டாமல் ஜனப் பிரியாகத் அலிகான் டில்லிக்கும் பண்டித ஜவாஹர்லால் நேரு கராச்சிக்கும் விஜயம் செய்து, நேரடியாகப் பேசி, தீராத பிரச்னை என்று தோன்றிய இந்தியா-பாகிஸ்தான் பிணக்கை நொடிப் பொழுதில் தீர்த்தது வல்லரசுகளின் தலைவர்களுக்கும் உலக ராஜதந்திரிகளுக்கும் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது.

அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள துவேஷமும் பகையும் நாளுக்கு நாள் முற்றி வருகின்றன அல்லவா?

கலியுக யமன் பேட்டி! நமது விசேஷ நிருபர்



அடுத்தபடியாக டிராம் நிர்வாகத்தை சர்க்கார் எவ்வளவு சீக்கிரமாகத் தங்களுடைய பொறுப்பில் எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, மேற்படி பொதுக் கூட்டத்தில் நிறைவேறியுள்ள தீர்மானத்துக்கு இணங்க, ரஸ்தாக்களின் அழகைக் கெடுக்கும் கர்நாடகமான இந்த டிராம்களை அடியோடு அகற்றிவிட்டு, டிராலி பஸ்களை உபயோகிக்க முற்பட வேண்டும்.

இரண்டாவது புதுமை

சில வருஷங்களாகச் சீறிக் கொண்டிருந்த தீராப் பகையை இந்தியா—பாகிஸ்தான் சர்க்கார் தலைவர்கள் நொடிப்பொழுதில் அடியோடு மறந்து அன்பும் நல்லெண்ணமும் நட்பும் துளிர் விடும்படி செய்த புதுமையைக் கண்டோம். எனினும் சமுதாயத்தில் சர்க்காருக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைகளும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்தாலன்றி, சர்க்கார் செய்யும் நல்ல காரியங்களால் அதிக பலன் ஏற்பட முடியாது அல்லவா? இந்த உண்மையை இந்தியா—பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்கள் நன்கு உணர்ந்து அதற்கான முறைகளைத் தாமதமின்றிக் கைக்கொள்ள முற்பட்டது மிகவும் போற்றத் தக்கதாகும்.

நேரு—லியாகத் அலியின் சந்திப்பு உலக சரித்திரத்தில் எவ்வாறு ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியதோ அது போலவே இந்தியப் பத்திரிகாசிரியர்களும் பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களும் புதுடில்லியிலே சந்தித்துப் பொதுவான திட்டம் ஒன்றை உருவாக்கிக் கொண்டது உலக சரித்திரத்திலே இரண்டாவது புதுமை எனலாம்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள பிரபல பத்திரிகாசிரியர்களில் அறுபது பேருக்கு மேல் டில்லியிலே மகாநாடுகூடி இரண்டு நாட்கள் விவாதித்து இரு நாடுகளிலும் உள்ள பத்திரிகைகள் ஏகோபித்து அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை வகுத்திருக்கிறார்கள். அடிக்கடி சந்தித்துப் பல்வேறு பிரச்னைகளையும் சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்காக இரண்டு நாடுகளையும் சேர்ந்த ஆசிரியர்கள் அடங்கிய ஒரு கமிட்டியையும் நிறுவியிருக்கிறார்கள்.

பரஸ்பரம் பத்திரிகைகள் மீது விதித்திருந்த தடையை இந்தியா-பாகிஸ்தான் சர்க்கார்கள் நீக்கியதை மேற்படி மகாநாடு பாராட்டியதுடன், இரு நாடுகளுக்குள் விரோதத்தையும் துவேஷத்தையும் யுத்த பீதியையும் உண்டு பண்ணக் கூடிய எத்தகைய செய்திகளையும் பிரசுரிப்பதில்லை, எவ்விதப் பிரசாரமும் செய்வதில்லை என்று தீர்மானித்திருக்கிறது. இரு நாடுகளுக்கும் நட்பும் நல்லெண்ணமும் வளருவதற்கான சகல முயற்சிகளையும் செய்வதென்று மகாநாடு ஏகோபித்து முடிவு செய்திருக்கிறது. செய்திகளை மறைப்பது பயங்கரமான பொய் வதந்திகளுக்குக் காரணம் ஆவதால், செய்திகளை மறைப்பதில்லையென்றும் ஆசிரியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். மற்றும் தங்கள் தங்கள் சர்க்கார்களுடன் பூரணமாக ஒத்துழைத்து நேரு—லியாகத் அலி ஒப்பந்தம் வெற்றியடைவதற்கான சகல உதவியும் செய்வதென்று உறுதி கொண்டிருக்கிறார்கள்.

"மோசம் போகமாட்டோம்!"

ஆதாரமற்ற வதந்திகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்காக, உண்மையான செய்திகளை மறைக்காமல் பிரசுரிப்பது என்ற தீர்மானம் எவ்வளவு முக்கியமானது என்பதைக் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். புதுடில்லியிலே இந்தியா—பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்களின் மகாநாடு முடிந்தபின் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் பாகிஸ்தான் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டுத் தலைவர் பீர் அலி முகமது ரஷீதி ஒரு முக்கிய விஷயத்தை வெளியிட்டார். "டில்லியிலுள்ள முஸ்லிம்கள் பூரண சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் அமைதியாகவும் வாழ்ந்து வருவதை நாங்கள் நேரில் பார்க்கிறோம். ஆனால் பாகிஸ்தானில் சிலர் செய்து வந்த பிரசாரத்தின் பலனாக இங்குள்ள முஸ்லிம்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக நினைத்துக் கொண்டிருந்தோம். எனவே, இங்கு நாங்கள் கண்ட உண்மையை எங்கள் நாட்டிலுள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லி இனி அவ்விதம் மோசம் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்று கூறி முகமது ரஷீதி பொய்ப் பிரசாரத்தின் விபரீதத்தை எடுத்துக் காட்டினார்.

"நேரு—லியாகத் அலி ஒப்பந்தம் இந்தியாவின் தந்தையும் பாகிஸ்தான் ஜனங்களின் ரக்ஷகருமான காந்தி மகானுடைய கொள்கையின் வெற்றியைக் குறிக்கிறது" என்றும் ரஷீதி பெருமையாகக் குறிப்பிட்டதிலிருந்து மேற்படி பத்திரிகாசிரியர்களின் மகாநாடு எவ்வளவு மகத்தான நன்மைக்கு அங்குரார்ப்பணமாக அமைந்திருக்கிறது என்பது சந்தேகமின்றித் தெரிகிறது அல்லவா?

கல்கி

மலர் 9 இதழ் 41

என்ன சேதி?

என்ன பேராசை!

வரிகளும் விலைவாசிகளும் பல்வேறு கட்டணங்களும் உயர்ந்து ஏழை ஜனங்களின் வாழ்க்கை துன்ப மயமாக இருந்து வரும் இக்காலத்தில், அவர்களுடைய பளுவை மேற்கொண்டு அதிகமாக்கும் எந்த யோசனையையும் யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயம். எனவே, சென்னையில் டிராம் கட்டணங்களை உயர்த்துவது என்ற யோசனையை ஜனப் பிரதிநிதிகள் பொதுக் கூட்டத்தில் கண்டித்திருப்பது முற்றிலும் நியாயமாகும். சென்னை மகாஜன சபை, சென்னை காங்கிரஸ் கமிட்டி இவற்றின் ஆதரவில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் டிராம் கட்டணங்களை உயர்த்துதல் எவ்வளவு நியாயமற்றது என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்கள்.

நாற்பது பேர் உட்காரக் கூடிய ஒவ்வொரு பஸ்ஸும் சர்க்காருக்கு ஆறு மாதத்துக்கு ஒரு தடவை ஆயிரத்து நூறு ரூபாய் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நூறு பேருக்குமேல் உட்காரக்கூடிய டிராம் வண்டி ஆறு மாதத்துக்கு ஒரு தடவை சர்க்காருக்கு நூறு ரூபாய்தான் வரி கொடுக்கிறது. அதிக வரி கொடுத்தும் ஒரு மைலுக்கு முக்காலணா வீதம் கட்டணம் வசூலிக்கும் பஸ் சொந்தக்காரர்கள் அதிக லாபம் அடைகிறார்கள். டிராம் கட்டணம் ஒரு மைலுக்கு அரை அணா என்றாலும் டிராம் கம்பெனியார் கொடுக்கும் வரி மிகக் குறைவானதால் அவர்கள் அடையும் லாபம் அபரிமிதமானது என்பது எல்லாரும் அறிந்த விஷயம். அப்படியிருக்க, இப்போது கட்டணத்தை உயர்த்துவது என்ற விபரீதமான யோசனைக்குப் பேராசையைத் தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதற்கில்லை.

ஆட்டமும் அழுகுரலும்

கட்டணங்களை உயர்த்தாமலே ரயில் வண்டிகளில் அதிக வசதிகளை ஏற்படுத்த சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள். பஸ்களும் வசதியாக இருக்கவேண்டும் என்பதில் அதிகாரிகளும் நிர்வாகிகளும் சிரத்தை கொண்டிருக்கிறார்கள். ஆனால் டிராம் வண்டிகளின் நிலைமையோ அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிறது என்றுகூடச் சொல்ல முடியவில்லை! அன்றிருந்த மேனி அடியோடு அழிந்து நாளுக்கு நாள் படுமோசமாகி வருகிறது. உலகத்திலேயே ஈடு இணையற்ற அவற்றின் ஆட்டமும் அழுகுரலும் அவற்றில் பிரயாணம் செய்யும் ஏழை மக்களின் மனோ நிலையைப் பிரதிபலிப்பது போல் இருக்கின்றன! சென்னை நகரில் ஜனத் தொகை இரண்டு மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆனால் டிராம் வண்டிகளின் தொகையோ குறைந்து வருகிறது. எனவே, டிராம்களில் கூட்டம் தாங்க முடியாமல் மக்கள் படும் கஷ்டமும் படிகளில் ஜனங்கள் தொத்திக் கொண்டு செல்லும் கண்றாவியும் சென்னை மாநகரின் பெருமையையே களங்கப்படுத்துவதாக இருக்கின்றன.

ஆகையால் டிராம் கட்டணங்களை உயர்த்துவது பெரிய அநீதி. ஜன சமூகத்துக்கு இழைக்கப்படும் தீங்கு எனலாம். ரயில், பஸ், டிராம் போக்குவரத்து போன்ற பொதுஜன சௌகரியமான ஸ்தாபனங்கள், தங்களுடைய சொந்த லாபத்துக்காகப் பொது ஜனங்களுடைய தலையில் கை வைக்கக் கூடாது என்பதற்காகவே அவை சர்க்கார் நிர்வாகத்தில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப் படுகிறது. எனவே, டிராம் கட்டணங்கள் உயரச் சென்னை சர்க்கார் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. இது அவர்கள் செய்ய வேண்டிய முதற் கடமையாகும்.

பரதநாட்டியக் கலைக் கல்லூரி

இண்டியன் பைன் ஆர்ட் சென்டர், மங்களூர்

உயர்தர சங்கீத விருந்துகள்

13—5—1950 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மங்களூர் கணபதி ஹைஸ்கூலில் நடைபெறும்

ஸ்ரீமதி காஞ்சன் ராஜலக்ஷ்மி	— வாய்ப் பாட்டு
வித்வான் ஸ்ரீ M. R. சுப்பரத்னம்	— பிடில்
வித்வான் பாலக்காடு ஸ்ரீ ராமகிருஷ்ணன் (ஸ்ரீ பாலக்காடு மணி அய்யரின் சிஷ்யன்)	— மிருதங்கம்
வித்வான் ஸ்ரீ K. E. கிருஷ்ண அய்யர்	— கஞ்சிரா

14 - 5 - 50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு

சங்கீத வித்வான் ஸ்ரீ காஞ்சன் வெங்கிடசுப்ரமணியம்	— வாய்ப் பாட்டு
வித்வான் ஸ்ரீ M. R. சுப்பரத்னம்	— பிடில்
வித்வான் ஸ்ரீ பாலக்காடு ராமகிருஷ்ணன் (ஸ்ரீ பாலக்காடு மணி அய்யரின் சிஷ்யன்)	— மிருதங்கம்
வித்வான் ஸ்ரீ K. E. கிருஷ்ண அய்யர்	— கஞ்சிரா

A. G. ராமரத்னம், ஆர்கனைசர் — ராஜம் அய்யர், பிரின்ஸிபால்

நீண்ட கால நோயைத் தவிருங்கள்.



குழந்தைகளின் அசக்தமாக்கும் ஈரல், குலைநோய் சாதாரண கோளாறுகளிலிருந்து ஆரம்பமாகின்றது. கீழ்கண்ட கோளாறுகளில் ஏதாகிலும் ஒன்று நீடித்திருந்தாலோ அல்லது திரும்பத் திரும்ப வந்தாலோ, டாக்டரின் ஆலோசனையை நாடி அதன் காரணங்களைக் கண்டு பிடிக்கவும்.

மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பசியின்மை — இலேசான ஜுரம் — சோம்பல் — சிடுசிடுப்பு — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — சீர் இளைப்பு.

ஜம்பியின் லிவர்க்யூர்

ஈரல், குலை நோய்களுக்கும் ... எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். ஆர்காட் ஸ்ரீனிவாசாச்சாரி தெரு, பெங்களூர் சிட்டி. மற்ற கிளைகள் உள்ள பட்டணங்கள்:— பம்பாய் - நாகப்பூர் - லக்னோ - கல்கத்தா - விஜயவாடா - விஜயநகரம்.

ஜம்பி வெங்கடராமையா & சன்ஸ்

மைலாப்பூர், மதராஸ்.

★

புதிய விலாஸம்

ஸ்ரீமதி

எம். எல். வஸந்தகுமாரி


எட்வர்ட் எல்லியட்ஸ் ரோடு

(கல்யாணி ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

மயிலாப்பூர் - மதராஸ்-4



★




மிக்க ஆரோக்யமான தோற்றம்........

மைசூர் ஜாஸ்மின் சோப் சாதாரணமாக உபயோகத்திற்குப் புதியதாக வந்துள்ள மற்றவகை சோப்புகளைப்போல் அல்ல. அதிலுள்ள உயர்ரக மூலிகைச் சத்துக்கள் அதிக நன்மையைப் பயப்பதுடன் ஆரோக்கியத்தையும் வசீகரத்தையும் நிச்சயம் அளிக்கின்றன. இன்றே ஒரு ஜாஸ்மின் சோப் வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

மைசூர் ஜாஸ்மின் சோப்

எங்கும் கிடைக்கும்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்



கல்கி பொருளடக்கம்

மலர் 9 | இதழ் 41 — மே 14 — விக்ருதி ௵ வைகாசி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




உப விநியோகஸ்தர்கள்: மதுரை ஜில்லா: இந்தியா எலக்ட்ரிக் கோ., 154, தெற்கு மாசி வீதி, மதுரை. திருச்சி ஜில்லா: பாரத் ஏஜன்ஸீஸ் லிட்., திருச்சி டவுன். வ. ஆ. ஜில்லா: எலக்ட்ரிகல் மெஷினரி ஸிண்டிகேட், திருப்பத்தூர் (வ.ஆ.) தஞ்சை ஜில்லா: செல்வா எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ், கும்பகோணம். பாண்டிச்சேரி (பிரஞ்சு இந்தியா): குட்மான் & கம்பெனி, டூப்ளே வீதி, பாண்டிச்சேரி. கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்கள்: ஸவுத் இந்தியா சேல்ஸ் கார்ப்பொரேஷன், ஆலப்புழை.



இந்த ஸ்பெஷல் விற்பனை ஒரே மாதம்தான்

ஜூன் மாதம் முதல் தேதி வரையில் கிடைக்கும் ஸ்விஸ் கடியாரங்களை நாங்கள் வாங்கும் விலையில் கீழ்க்கண்ட இனாம் சாமான்களுடன் கொடுக்க நிச்சயித்துள்ளோம்.

1. ஒரே தடவையில் ஒரு கடியாரத்திற்கு ஆர்டருடன் ஒரு அமெரிக்கன் ஊற்றுப் பேனாவும்
2. இரண்டு கடியாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் ஒரு பாக்கெட் கடியாரமும்




3. மூன்று கடியாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் ஒரு மேஜை கடியாரமும் அளிக்கப்படும்
4. ஆர்டருடன் ஒரு ரூபாய் மணியார்டர் மூலமோ போஸ்டல் ஆர்டர் மூலமோ அட்வான்ஸ் கொடுத்தால் ஒரு நிருபென்சிலும் கூட அனுப்பப்படும்.



15, 17 ஜுவல் உள்ள வாச்சுகள் 5 வருஷமும், மீதி உள்ளவை 3 வருஷமும் உத்திரவாதம் உள்ளவை. கடியாரங்கள் அனுப்புவதற்கு முன்னும், எல்லாம் போட்டு நன்கு பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்படும். உத்திரவாத பத்திரம், வெல்வெட் பெட்டி, ஒரு அழகிய பட்டை இனாமாக அனுப்பப்படும். கடியாரங்கள் வி.பி. மூலம் அனுப்பப்படும். பாக்கிங், போஸ்டேஜ், விற்பனை வரி இலவசம்.

ரூ. 50 மேற்பட்ட இலங்கை ஆர்டர்கள் ரூ. 50 க்கு மேற்பட்ட தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஆர்டருடன் அனுப்பவும்.





ரவுண்டு (சைஸ் 10½)

805	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	31
806	ரோ. கோ. கேஸ் 7 ஜுவல்	36
926	க்ரோம் கேஸ் உயர்ந்த 7 ஜுவல்	35
927	ரோ. கோ. கேஸ் உயர்ந்த 7 ஜுவல்	40
859	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	40
860	ரோ. கோ. 15 ஜுவெல்	50

ரவுண்டு (சைஸ் 10½) சென்டர் செகண்டு

807	க்ரோம் கேஸ் ரஸ்கோப் ஓட்டம்	23
808	ரோ. கோ. ரஸ்கோப் ஓட்டம்	28
809	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	36
810	ரோ. கோ. கேஸ் 7 ஜுவல்	41
845	க்ரோம் வாட்டர் ப்ரூப் 7 ஜுவல்	49
862	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	45





சிறிய ரவுண்டு (சைஸ் 8¾)

813	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	27
814	ரோ. கோ. கேஸ் 5 ஜுவல்	32
815	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	32
816	ரோ. கோ. கேஸ் 7 ஜுவல்	37

சிறிய ரவுண்டு (சைஸ் 8¾) சென்டர் செகண்டு

817	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	31
818	ரோ. கோ. கேஸ். 5 ஜுவல்	36
819	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	35
820	ரோ. கோ. கேஸ் 7 ஜுவல்	40





கர்வெக்ஸ் (சைஸ் 7¾)★

821	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	36
822	ரோ. கோ. கேஸ் 5 ஜுவல்	41
823	முழு ரோ. கோ. கேஸ் 5 ஜுவல்	44
830	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	42
831	ரோ. கோ. 7 ஜுவல்	47
832	முழு ரோ. கோ. 7 ஜுவல்	50

லேடீஸ் (சைஸ் 5¼)

849	க்ரோம்கேஸ் அழகிய டிசைன் 5 ஜுவல்	40
850	ரோ. கோ. அழகிய டிசைன் 5 ஜுவல்	45
851	க்ரோம் கேஸ் „ 7 ஜுவல்	45
852	ரோ. கோ. „ 7 ஜுவல்	50
857	ரவுண்டு க்ரோம் கேஸ் 7 ஜுவல்	46
858	ரவுண்டு ரோ. கோ. கேஸ் 7 ஜுவல்	51

★ இதே விலையில் டன்னோ வடிவத்திலும் நீண்ட சதுர வடிவத்திலும் கடியாரங்கள் கிடைக்கும்

சதுரம் 8¾

836	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	30
838	முழு ரோ. கோ. 5 ஜுவல்	38

சதுரம் 8¾

837	ரோ. கோ. 5 ஜுவல்	35
883	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	48

CAROLINE AGENCIES (INDIA) SEC. A/2, P.B. 6764, BOMBAY-22





கீல் வாதத்தின் கொடிய வலியினால் தாக்கப் படும்வரை சர்மா மிகுந்த சுறு சுறுப்பாகவே தன் வேலைகளை நன்கு செய்து வந்தான்.

“என்னால் வேலையே செய்ய முடியாதபடி அவ்வளவு மோசமானதாக இருந்தது. வேலைக்கே போக முடியாமலிருந்தது; வேலையை இழந்து விடுவேனோ என்றும் பயந்தேன். ஒரு சிநேகிதர் “க்ருஷன்” ஸால்ட்டைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி சொன்னார். ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்து உடனே குணம் தெரிந்தது. நான் இப்போது கீல்வாதத்தினால் சிரமப்படாமலிருப்பதுமன்றி எனது வேலைகளை முன்னைவிட நன்கு செய்யவே செய்ய முடிகிறது. இவ்வுணர்ச்சியை நிரந்தரமாகச் செய்யத் தினந்தோறும் தவறாமல் ஒரு சிறு அளவு க்ருஷன் சாப்பிடுகிறேன்.”

கீல் வாதத்தின் சித்திரவதையிலிருந்து சீக்கிரமே குணமடைய விரும்பினால் இப்பொழுதே க்ருஷன் சாப்பிட ஆரம்பியுங்கள். க்ருஷனில் உள்ள முக்கியமான ஆறு உப்புகள் உங்கள் ரத்தத்தைச் சுத்தம் செய்து, மூத்திரக் காய்களை இயற்கைப் பிரகாரமே வேலை செய்யத் தூண்டுகின்றன. ரத்தத்தில் சேர்ந்துள்ள விஷப் பொருள்களை வெளியேற்றவும் இவை உதவுகின்றன. அதனால் உங்களது வலிகள், பிடிப்புகள், அகலும். தொடுகூடத் தவறாமல் தினந்தோறும் ஒரு சிறு அளவு “க்ருஷனை”த் தொடர்ந்து சாப்பிட்டுவரின் அவ் வலிகள் அநேகமாய் உங்களை மறுபடியும் பாதிக்காது.

இன்றே “க்ருஷன்” வாங்குங்கள். மஞ்சள் பெட்டியில் ரூ. 1-10-0க்கு எல்லாக் கெமிஸ்டுகளிடமும் மற்றுள்ள எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றன.

நீங்களும் அந்த க்ருஷன்

உணர்ச்சியைப் பெறலாம்



சீமைச
சுண்ணும்பால
நீங்கள்
துணியை
வெளுக்க
முடியாது
கேரளா
வாஷ்வெல்
WASHWELL BAR SOAP
சுத்தமான
பார்
ஸோப்
வீட்டுச்சலவையை
மிகவும் சுலபமாக்குவது
கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ்

ஜூன் மாதம் 2-ந் தேதி வெளிவருகிறது

